Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/146/News/2011

# இருக்கிறம்

வார இதழ்

ஒரு பொல்லாப்புமில்லை

காத்திருப்பு 01 இருக்கை 25 | 19 செப்டெம்பர் 2011 | விலை: ரூபா 30.00



அதிரடி விசிட்

## சீரழிகிறதா வவுனியா நகரமும் சமூகமும்?

## வீதிப் புனரமைப்பில் பின்னடிக்கும் அரச அதிகாரிகள்

உண்மையின் பதிவு

நேரடி ரிப்போர்ட்

## தொடர்மாடிக் குடியிருப்பில் தண்ணீர்ப் பிரச்சினை

சமூக அவலங்களை துணிச்சலுடன் வெளிக்கொணரும் ஒரேயொரு தமிழ் சஞ்சிகை

இருக்கிறம் வார இதழ்

தொடர்புகளுக்கு...

ஆசிரியர் பீடம்:
தொ.பேசி : 011 3150836
தொ.நகல் : 011 2585190

கட்டுரை/ஆக்கங்கள்:
weeklyirukkiram@gmail.com

செய்திகள்/படங்கள்:
newsirukkiram@gmail.com

விமர்சனங்கள்/ஆலோசனைகள்:
irukiram@gmail.com

விளம்பரப்பிரிவு:
011 5322730

விநியோகப்பிரிவு:
011 5322781

இணையத்தளம்:
www.irukkiram.tk


தபால் முகவரி:
03, டொரிங்டன் அவனியூ,
கொழும்பு-07.

# இப்படிச் சொல்லுகினம் பாருங்கோ!



'எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை இப்பொழுதே தீர்மானித்துக் கூற முடியாது. இந்த அரசாங்கத்திற்கு எதிரான பாரிய எதிர்க்கட்சிக் கூட்டணி உருவாகலாம். தமிழ் மக்களையும் எமது கட்சியையும் எந்தவொரு பெரும்பான்மை கட்சியும் உதிரிகளாக நடத்துவதற்கு நாங்கள் இடந்தரமாட்டோம். எங்களைப் புறக்கணித்துவிட்டு எந்தவொரு பெரும்பான்மை கட்சியும் கொழும்பிலே அரசியல் நடத்த முடியாத நிலைமையை நாம் உருவாக்குவோம்'

★ ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசன்
★ 13.09.2011
(தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில்....)



'47 உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் 39 நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக இருக்கின்றன. 39 நாடுகளினதும் பிரதிநிதிகளை நாம் சந்தித்துப் பேசினோம். மத்திய கிழக்கு, இலத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா ஆகிய பகுதிகளில் உள்ள நாடுகள் எமக்குச் சாதகமாகப் பதிலளித்துள்ளன. இவர்களது ஆதரவு எமக்குக் கிடைக்கும். 2012ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 19ஆவது கூட்டத்தொடர் வரைக்கும் இலங்கைக்குக் கால அவகாசம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் மனித உரிமைகள் சபை உறுப்பு நாடுகளிடம் கேட்கப்பட்டுள்ளது'

★ அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்
★ 13.09.2011
(ஜெனீவாவில் இருந்து வெளியிட்ட அறிக்கையொன்றில்...)



'உள்நாட்டில் நிலவும் முக்கியமான பிரச்சினைகளுக்கு அரசு தீர்வு கண்டிருந்தால் இன்று உலக நாடுகளுக்கு வால் பிடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. குறிப்பாக வடக்கு - கிழக்கு மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்கி மனித உரிமைகளை நாட்டில் பாதுகாத்து ஜனநாயகத்தை அரசு நிலை நாட்டியிருந்தால் இன்று சர்வதேச அழுத்தத்துக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது'

★ ஜே.வி.பியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா
★ 13.09.2011
(ஊடகவியலாளர் மாநாடொன்றில்...)



'உண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியை தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டுமானால் ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும். இந்த நாட்டில் அரசாங்கத்தால் நடத்தப்பட்ட யுத்தம் தமிழ் மக்களுக்கு பாரிய உயிர் அழிவை, சொத்தழிவை ஏற்படுத்தியுள்ளது என்பதை ஏற்கவேண்டும். தமிழர் தாயகத்திற்கு அதிகாரத்தை வழங்க சம்மதிக்க வேண்டும். இந்த நிலைப்பாடுகளை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக் கொள்ளுமா?'

★ விக்கிரமபாகு கருணாரட்ன
★ 13.09.2011
(ஊடகவியலாளர் மாநாடொன்றில்...)



'பிளேக் சில நாட்களாக உள்நோக்கத்துடனேயே கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார். ஈ.பி.டி.பி. பற்றி அவர் வெளியிட்டுள்ள கருத்துக்களும் அவ்வகையில் உள்நோக்கம் கொண்டதுடன் உண்மைக்குப் புறம்பானது. உள்நோக்கம் கொண்ட ஒரு சிலர் தன்னுடைய கொடுக்கல் வாங்கல்களை உள்வாங்கக் கூடியவர்கள் ஊடாகவே செய்தியை பரப்பி வருகிறார்'

★ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா
★ 15.09.2011
(ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோது...)



'சர்வதேச சமூகத்திடம், இனநல்லிணக்கத்துக்காக அரசு உழைத்து வருவதாகக் கூறுவது முழுப் பொய். நாட்டின் நிலவரத்தை அனைத்துலக சமூகத்துக்குத் தெரியப்படுத்தும்போது அரசு மிகநேர்மையாகவும் பொய்யற்ற வகையிலும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்'

★ த.தே.கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்
★ 14.09.2011
(கூட்டமைப்பு விடுத்த அறிக்கையில்...)



'தலதா மாளிகைக்கு குண்டு போடத் தேவையான அனைத்து பொருட்களையும் வாங்கிக் கொடுத்த கே.பி.யை அரச இல்லத்தில் வைத்துள்ளனர். ஆனால், தலதா மாளிகையைப் பாதுகாத்த ரஞ்சன் விஜயரட்ணமீது தாக்குதல் நடத்த முற்படுகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியை எப்படி தோற்கடிப்பது என அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்கிறது. சிலரை வைத்து கட்சிக்குள் பிளவை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். அவை ஒன்றும் சரிவராது. மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்கத் தீர்மானித்துவிட்டனர். அதனை அரசாங்கத்தால் நிறுத்த முடியாது'

★ ரணில் விக்ரமசிங்க
★ 13.09.2011
(கண்டியில் பிரசாரக் கூட்டத்தில்...)



'இப்போது ஈழத் தமிழரின் அரசியலானது முன்னெப்போதையும் விட முற்றிலும் சர்வதேச மயப்பட்டுவிட்டது. இப்போது ஈழத் தமிழருக்கு முற்றிலும் சாதகமான ஒரு சர்வதேச சூழல் தோன்றியிருக்கிறது. சர்வதேச அரங்குதான் இப்போது எமது ஆடுகளம். வரலாறு அந்தக் களத்தை எமக்குத் திறந்து விட்டிருக்கிறது. தற்போது சிங்களப் பேரினவாதம் ஓர் அழிப்பின் வழியில் வெற்றி மமதை கொண்டாட முடிகிறதேயாயினும், அதுவே அவர்களின் தோல்விக்கான கருவறையாகவும் அமையும்'

★ சி.சிறிதரன் எம்.பி
★ 11.09.2011
(சுவிஸில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சிவராம் நினைவுக்கருத்தரங்கில்...)



'ஜெனீவாவின் தீர்மானங்களுக்கோ ஐ.நா.உள்ளிட்ட அமெரிக்காவின் படைப் பலங்களுக்கோ இலங்கை ஒருபோதும் அஞ்சாது. மீள் தலையீடுகளுக்கு எவராவது முயற்சித்தால் அதனை எதிர்கொள்ள நாம் தயாராகவே உள்ளோம். பிரிவினைவாத சர்வதேச சூழ்ச்சிக்காரர்களின் நோக்கம் இலங்கையைத் துண்டாடுவதே ஆகும்'

★ தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர
★ 15.09.2011
(ஊடகங்களுக்கு வெளியிட்ட அறிக்கையொன்றில்...)



'யுத்தம் முடிந்த பின்னரும் தமிழர்களுடைய மனங்களை வென்றெடுக்க அரசாங்கத்தினால் முடியவில்லை. யுத்தம் முடிந்துவிட்டது, நாட்டில் ஜனநாயகம் மலர்ந்துவிட்டது என்றெல்லாம் அரசு பிதற்றிக் கொள்கிறது. ஆனால் இன்று வரைக்கும் காணாமல் போனவர்கள் தொடர்பிலும், கைதுசெய்யப்பட்டவர்கள் தொடர்பிலும் எந்தவிதமான தீர்வும் கிடைக்கவில்லை. காரணம் அவர்கள் அனைவரும் தமிழர்களாக இருப்பது மட்டுமே. ஜே.வி.பி. கிளர்ச்சியாளர்களை எந்தவிதமான நிபந்தனைகளும் இன்றி விடுதலை செய்த அரசாங்கம் இன்று தமிழர்களை மட்டும் இன்னும் அடைத்து வைத்து சித்திரவதைப் படுத்துகின்றது'

★ முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்
★ 13.09.2011
(அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி மகஜர் ஒன்றினை யாழ். மாவட்டச் செயலக அதிகாரியிடம் கையளித்து உரையாற்றியபோது...)

## இருப்பு



"அழிப்பும் பிழைப்பும்"

# 'எப்படியெண்டாலும் உயிர் தப்பினால் காணுமெண்டு அலஞ்சு திரிஞ்சம்'




வன்னியில் இன்று எம்மைக் கடந்து செல்லும் ஒவ்வொரு உறவுகளும் ஏதோ ஒன்றை இழந்திருக்கின்றனர். திட்டமிட்டு நடைப்பிணங்களாக மாற்றிவிடப்பட்டிருக்கும் உறவுகளில் ஒருவர்தான் தவமணி. இறுதி யுத்தகாலத்தில் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கான இவரது ஒரு கால் ஊனமாக்கப்பட்டிருக்கிறது. ஊன்றுகோலின் துணையுடன், தன்னால் எதுவும் செய்ய முடியும் என்ற திடத்துடன் வாழும் இவரை ஒரு மருத்துவ முகாமில் சந்தித்தோம்.

யுத்தம் நடைபெற்றபோது தான் அனுபவித்தவற்றை எம்மிடம் வேதனையுடன் பகிர்ந்துகொண்டார். 'யுத்தத்தில நாங்க முதல் இடம் பெயர்ந்துபோய் புளியம்பொக்கணையிலதான் இருந்தனாங்கள். கையில அகப்பட்டதை எடுத்துக்கொண்டு எங்க போறதெண்டு தெரியாமல் ஓடினம். அங்க ஒரே செல்லடியால இருக்கேலாமல் இருட்டுமடு என்ற இடத்துக்குப் போனம். சாப்பாட்டுக்கும் வழியில்ல. சாமான்கள் கிடைக்கிறதே கஸ்ரம். அப்படிக் கிடைச்சாலும் உந்தச் செல்லடிக்குள்ள சமைக்க ஏலாது. நாங்க பங்கருக்குள்ள வச்சுத்தான் சமைச்சுச் சாப்பிட்டம். ஆனா அங்க இருக்கேலாமல் எழும்பி சுதந்திரபுரத்திற்கு வந்து சேர்ந்திட்டம்' என்று பெருமூச்சு விட்ட தவமணி மீண்டும் தொடர்ந்தார்.


தவமணி

'எங்க பார்த்தாலும் ஒரே காயப்பட்ட சனங்களும் செத்த ஆக்களின்ட உடம்புகளும்தான் கிடந்தது. நாங்கள் எப்படியெண்டாலும் உயிர் தப்பினால் காணுமெண்டு ஒவ்வொரு இடமா அலைஞ்சு திரிஞ்சம். கடைசியா பிறகு அங்கயிருந்து எல்லாச்சனமும் வெளிக்கிட்டதால நாங்களும் வெளிக்கிட்டு தேவிபுரத்திற்கு வந்தம். அங்க வச்சுத்தான் எனக்கு இந்தக் காயம் பட்டது. சண்டையள் நடந்து கொண்டிருந்ததால நாங்க வெளிக்கிட்டுத் தப்புவம் எண்டு வரேக்கதான் எனக்குச் சூடுபட்டது. நாங்க கொட்டிலுக்கு முன்னுக்கு முற்றத்தில இருந்து கதைச்சுக் கொண்டிருந்தம். திடீரென்று ஆமி சுத்தி வளைச்சுச் சுட்டுப் போட்டாங்கள். இவங்கள் எங்களை இயக்கமெண்டு நினைச்சுத்தான் சுட்டிருக்கிறாங்கள். சுட்ட உடனயே நான் மயங்கிட்டன். எனக்கு முழங்கால் முறிஞ்சிட்டுது. பிறகு வவுனியா கொஸ்பிட்டல்ல சேர்த்திருக்கினம். அங்க 2 மாசம் இருந்து கொஞ்சம் சுகமானவுடன வெளியில சொந்தக்கார ஆக்களிட்ட போயிட்டம்' என்று வேதனை நிரம்பிய குரலில் கூறினார்.



முறிகண்டியில கடை வைத்திருந்த இவரும் இவரது கணவரும் தற்போது தமது வாழ்வாதாரத்திற்கான வேறெந்த வசதிகளுமற்று வறுமையில் வாடுகின்றனர். இந்த வருமானம் உங்களுக்கு போதுமானதாக இருக்கின்றதா என்று கேட்டேன்.

'முந்தி நாங்க முறிகண்டியில கடைதான் வச்சிருந்தம். ஆனா இப்ப எல்லாத்தையும் இழந்திட்டம். அவருக்கும் 65 வயசாகிறதால அவராலயும் கடுமையான வேலையொண்டும் செய்ய ஏலாது. இப்ப நாங்க ரெண்டு பேரும் தனியத்தான் இருக்கிறம். எங்கட 5 பிள்ளயளும் கலியாணம் முடிச்சு தனியாக இருக்கினம். இடைக்கிடை அவை எங்கள வந்து பாத்திட்டுப் போவினம். சாப்பாட்டுக்கும் ஏதும் உதவிகள் செய்வினம். ஏதோ அப்படியே எங்கட வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்குது. என்ர காலும் முன்ன மாதிரிச் சுகமாக்க கஸ்ரமெண்டு கிளிநொச்சி கொஸ்பிட்டல்ல டொக்டர்மார் சொல்லிட்டினம். அதுதான் ஒரே வேதனையாக இருக்கு. எங்கட பிள்ளயளுக்கும் பெரிசா ஒரு வருமானம் உள்ள தொழில் எண்டு இல்லை. அதால அவையளிட்ட கேக்குறதும் சரியில்ல. என்னால இந்தக் காலை வச்சுக்கொண்டு ஒண்டுமே செய்ய ஏலாது. நிலத்தில இருக்கவும் காலை மடிச்சு இருக்கவும் ஏலாது. இந்தக் கால் கொஞ்சமெண்டாலும் சுகம் வந்தால் நான் ஏதாவது தொழிலுக்குப்போய் நானும் என்ட கணவரும் கரைச்சலில்லாமல் இருக்கலாம்' என்ற நம்பிக்கை வார்த்தைகள் அவரிடம் வந்தன.

இவரால் கடுமையான வேலைகள் எதுவும் செய்யமுடியாது. இருந்த இடத்திலிருந்து வேலை செய்யக்கூடிய வகையில் ஒரு தொழில் இருந்தால் நன்றாக இருக்கும் என எம்மிடம் தெரிவித்தார். முன்னரைப் போல் ஒரு கடையைப்போட்டு உழைப்பதற்கு இவர்களிடம் போதிய முதலீடுகள் இல்லை. அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணங்களும் நிறுத்தப்பட்டிருக்கும் நிலையில் இவர்களின் நிலை இன்னமும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே தம் அங்கங்களை இழந்த நிலையில் ஏதோ ஒரு நம்பிக்கையில் வாழத் துடிக்கும் தவமணி போன்றவர்களுக்கு அவர்களும் உழைத்து சொந்தக்காலில் நிற்பதற்கு உறவுகள் யாராவது வழிசெய்து கொடுக்க முன்வரவேண்டும்.

◄ தமிழியன் ►

## பூதங்களும் எனது குழந்தைகளும்!



செட்டைகளை நகங்களால்
விறாண்டத் துடிக்கின்றன.

வீரிட்டு அலறுகையிலும்,
விரட்டிச் செல்கையிலும்,
கரி பூசிய பழிமுகங்கள்
பச்சைப் பாம்புகளின் புற்றுகளுக்குள்
ஓடி மறைகின்றன.

தெய்வங்கள் கண்மூடியிருக்கும்
எம் நிலங்களில்– இப்போ
காவலுக்கிருப்போர்
கள்வர்களை ஒளித்துவைத்துவிட்டு
பிடித்துக் கொடுத்தவர்களை
வெளுத்துப் போடுகிறார்கள்

விளக்குகளை அணைத்துப்போட்டு
விழித்திருக்கும் நம் கண்களில்
பூதங்களின் பயங்கரக் கனவுகள்
மேகங்களாய் மிதந்து செல்கின்றன

நாம் நிம்மதியற்ற நினைவுகளோடு
அச்சம் தெளித்த சால்வைகளை
கட்டிக்கொண்ட பக்தர்களாய்
வாழவேண்டுமென விரும்பும்
நரகாசுரர்கள்,
சூரசங்காரங்கள் நின்றுவிட்டதால்
திமிரோடு எங்கும் அலைகிறார்கள்.

முகங்களை மாற்றிக்கொண்டு.
பூதங்கள் அழிக்கப்பட்ட
மனசுகளோடு நிலவு விழும்
முற்றத்தில் நானும் என்
குழந்தைகளும் மீண்டும்
படுத்துத் தூங்குவதற்காய்
பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

என் குழந்தைகள்
என்னை வெருட்டுகின்றன.
பூதம்வரும் பூச்சாண்டி வருமென
சொல்லிச் சோறுண்ண வைக்கும்
எனது குழந்தைகள்–இப்போ
என்னை பயப்படுத்துகின்றன.
'பூதத்திடம்' பிடித்துக்
கொடுத்துவிடுவதாய்...

எமக்கு காவலிருந்த வீரர்களை
களவு கொடுத்துவிட்டபிறகு
கரிபூசிய கள்வர்கள்
மீண்டும் மீண்டும் களவுக்கு
வருகிறார்கள்–வெவ்வேறு
உடையணிந்துகொண்டு.

மார்புகளுக்குள்
இரத்தம் குடிக்க அலையும்
காம நுளம்புகளால்
பிள்ளைகளுக்குப் பாலூட்ட
முடியாமல் படபடக்கிறது மனசு.

புள்ளடிப் போட்டியில் தோற்றுவிட்ட
வெள்ளடியன் சேவல்கள்
எம் வேலி புகுந்து–பேடுகளின்

- தீபிகா

19.09.2011
காத்திருப்பு 01 | இருக்கை 25

# வாழ்க்கைப் போராட்டம்

வணக்கம் என் உறவுகளே!

மெல்லியதாய் மேலெழும்பி நாள்தோறும் புலர்ந்து மறையும் மணித்தியாலங்களுக்கு நடுவே தொலைந்து போகின்றன எங்களின் உணர்வலைகள். வாழ்க்கைக்கான போராட்டத்தில் தினமும் போராடிக் கொண்டிருக்கும் எங்களின் உள்ளக்குமுறல்கள் உணர்விழந்து, வலுவிழந்து செத்துக் கொண்டிருக்கின்றன. வாய்மூடி மௌனிகளாய் வாழ எங்கள் வாழ்வு நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. சுற்றிவர நிற்கும் பூதங்களால் இன்னுமின்னும் எமது உறவுகள் அச்சுறுத்தப்படுகிறார்கள். உளரீதியான அச்சுறுத்தல்களை எங்கள் சமூகம் எதிர்கொண்டிருக்கின்றது. அரசியல் ரீதியான தலைமைத்துவமோ எங்கள் உரிமைக்காக குரல் கொடுப்பதற்கோ எவருமே இல்லாததால் எதுவுமே செய்யமுடியாத துர்ப்பாக்கிய நிலையில் எங்கள் நாட்கள் துப்பாக்கிகளின் குழல்களால் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

வட, கிழக்கு மீனவர்களின் வாழ்க்கைக்கான போராட்டம் வலிகளைத் தாண்டியது. மனத் தைரியத்துடன் அவர்கள் வாழும் வாழ்க்கையின் ஒவ்வொரு கணங்களும் ஆபத்துடன் பயணிப்பவை. காற்றுப்பையின் வெற்று இடத்தில் கண்ணுக்குத் தெரியாமல் உட்புகும் மரணத்தின் நெருடல் இவர்களுடைய வாழ்வுடன் விளையாடும் கொடுமை மிகக்கொடியது. அரசியல்வாதிகளும் மீனவர்களை வைத்துப் பிழைப்பு நடத்துவர்களும் இவ் உறவுகளுடைய வாழ்க்கைப் போராட்டத்தைப்பற்றி கண்டு கொள்வதாகவே தெரியவில்லை.

போர்க்காலம் முடிவடைந்து இருள்சூழ்ந்த கடற்கரை வானம் மெல்ல வெளிக்கத் தொடங்கியிருக்கும் இத்தருணத்தில், மீன்பிடிப்பதற்கு மீண்டும் பாஸ் நடைமுறை வந்துள்ளது. இதனால் மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. நீண்டகாலமாக இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடிப்பது முன்னரைவிட அதிகரித்து வருவதால் எமது உறவுகள் பெரும் சிரமங்களையும் கஸ்டங்களையும் எதிர்நோக்கி வருகின்றார்கள்.

கடலில் பாரிய மீன்பிடிப் படகுகளின் மூலம் மீன்களை வகைதொகையின்றி பிடிக்கும் இந்திய மீனவர்களால் மீன்வளம் அற்றுப்போகின்றது. இதனால் எமது உறவுகளுடைய ஜீவனோபாயம் அபாயகரத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் தென்பகுதியைச் சேர்ந்த மீனவர்கள்கூட அத்துமீறி எமது கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவருவதால் எதுவுமே செய்யமுடியாத நிலையில் மீனவ உறவுகளின் வாழ்க்கை தொடர்கதையாகிக் கொண்டிருக்கிறது.


யுத்தத்தாலும் பொருளாதார தடைகளாலும் தமிழ் மீனவர்கள் என்பதற்காக பாதிக்கபட்ட எமது மீனவ சமூகம் தற்பொழுது இவ்வாறான சுரண்டல்களால் வலுவிழந்து வாழ வழியின்றி நிர்க்கதியான நிலையில் நிற்கின்றார்கள்.

தமது பிழைப்பை நடத்த இலங்கைத் தமிழர்களை வைத்து அரசியல் செய்யும் மூன்றாம்தர இந்திய பிழைப்புவாத அரசியல்வாதிகள் தமிழக மீனவர்கள் அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதை ஒருபோதும் கண்டித்ததும் இல்லை. அல்லது அதற்கு எதிராக நடவடிக்கை எடுத்ததும் இல்லை.


தம்மை தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்றும் தமிழ் மக்களின் காவலர்கள் என்றும் அறிக்கைகளை அள்ளி வீசும் எங்களுடைய தமிழ்க்கட்சிகளோ வடகிழக்கு மீனவர்களின் நாளாந்த பிரச்சினைகள் பற்றி எதையும் வாய்திறப்பதில்லை. வடக்கு, கிழக்கிலுள்ள மீனவர்கள் தமது பிரச்சினையை வெளிச்சத்துக்கு கொண்டுவர எவ்வளவோ முயற்சிகள் செய்தாலும் எல்லாமே செவிடன் காதில் சங்கு ஊதிய கதையாகத்தான் இருக்கின்றன. சமூக அக்கறையுடையவர்கள் தமிழ்பேசும் இந்த மீனவ சமூகத்தினருடைய பிரச்சினைகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவரவேண்டும்.

வீழ்ச்சி என்றும் நிலையில்லை அதன் தொடர்ச்சியே வெற்றியென தன்னம்பிக்கையுடன் நாளைய பொழுது சுதந்திரக் கடலில் விடிவதற்காய் வலிகளைத்தாங்கி வாழும் உங்களுடன் நானும் காத்திருக்கின்றேன் வலைகளுடன்...

ஆசிரியர்



# முஸ்லிம், இந்து வணக்க ஸ்தலங்கள் மீதான தாக்குதல் மௌனமாக இருக்கும் சிறுபான்மையின் அமைச்சர்கள்



இலங்கையில் முஸ்லிம் மற்றும் இந்துக்களின் வணக்க ஸ்தலங்கள் சக்தி வாய்ந்த அமைச்சர் ஒருவராலும் பேரினவாத அமைப்புக்களாலும் கடந்த ஒரு வார காலப்பகுதியில் பொலிஸார் பார்த்துக் கொண்டிருக்கத்தக்க நிலையில் தாக்கப்பட்டதையடுத்து சிறுபான்மையின மக்கள் அச்சமடைந்த நிலையில் இருப்பதாக சிறுபான்மையினரின் உரிமைகளுக்கான அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இவ்விடயங்கள் தொடர்பாக அரச தரப்பின் மௌனம் இந்த அச்சத்தை மேலும் அதிகரிப்பதாக அமைந்திருக்கின்றது. சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டுள்ள அநுராதபுரம் பகுதியில் அமைந்திருந்த முஸ்லிம்களின் 'ஸியாரம்' ஒன்று கடந்த சனிக்கிழமை பௌத்தர்களின் பாதுகாப்பு அமைப்பு, தம்ம விஜய அமைப்பு ஆகிய சிங்களப் பேரினவாத அமைப்புக்களால் தாக்கி அழிக்கப்பட்டன. இச்சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டபோதிலும் அவர்கள் வெறுமனே பார்வையாளர்களாகவே இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் கடந்த 13ஆம் திகதி புத்தளத்தில் முன்னேஸ்வரம் இந்துக் கோவிலுக்குள் அத்துமீறிப் பிரவேசித்த அமைச்சர் மேர்வின் சில்வாவும் அவரது அடியாட்களும் அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த வருடாந்தத் திருவிழாவைக் குழப்பியதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்த இரு சம்பவங்களும் பட்டப்பகலில் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் பலர் பார்த்துக் கொண்டிருந்த நிலையில் இடம்பெற்றது. இது தொடர்பாகக் கேட்டபோது, முன்னேஸ்வரம் ஆலயத்தில் இடம்பெறும் மிருகங்களைப் பலிகொடுக்கும் செயற்பாடு நீதிமன்றத்தினால் தடைசெய்யப்பட்டுள்ளது என்று மட்டும் தெரிவித்த பொலிஸ் பேச்சாளர், அநுராதபுரம் சம்பவம் தொடர்பாக் தகவல் எதனையும் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

சிங்கள அரசனான துட்டகைமுனுவின் அஸ்தி அடக்கம் செய்யப்பட்டதாகக் கருதப்படும் இடத்துக்கு அருகில் அமைந்திருந்த முஸ்லிம்களின் 'ஸியாரம்' ஒன்றே தகர்க்கப்பட்டதாகவும் குறிப்பிட்ட 'ஸியாரம்' சுமார் 150 வருடங்கள் பழைமை வாய்ந்தது எனவும் அநுராதபுரத்திலுள்ள முஸ்லிம் தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தில் சக்திவாய்ந்த தமிழ், முஸ்லிம் அமைச்சர்கள் பலர் இடம்பெற்றிருக்கின்ற போதிலும் இந்தச் சம்பவங்களையிட்டு அவர்கள் தொடர்ந்தும் மௌனமாகவே இருக்கின்றார்கள்.

- தருமன்

இருக்கிறம்
ஒரு பொல்லாப்புமில்லை
வார இதழ்

எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் வெளியிடப்படுகிறது.

3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு - 07.
தொலைபேசி : +94 11 3150836
தொலைநகல் : +94 11 2585190
மின்னஞ்சல் : irukiram@gmail.com
இணையம் : www.irukkiram.tk

ஆசிரியர் : அருளானந்தம் சஞ்ஜீத்
நிர்வாக ஆசிரியர் : சாந்தி சச்சிதானந்தம்
செய்தி ஆசிரியர்கள் : கலாவர்ஷ்னி கனகரட்ணம், தவநாதன் இரவிவர்மன்
நிருபர் குழு : தர்மராசா சிந்துஜா, கந்தலிங்கம் மாலா, அருமைத்துரை ஜசீகரன், ரா.அர்விந்த்
கார்ட்டூன் : சஞ்ஜீத்
புகைப்படம் : யாத்ரா, தமிழியன்
பக்க வடிவமைப்பு : முஹம்மட் பிறவ்ஸ், ஷிரோமி பீற்றர்


கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே: இதழில் வெளிவரும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல.




# புதிய உலகத்தை சிருஷ்டிக்க முன்வாருங்கள்

ஐ.நா. என்பது ஒரு பெரிய டைனோசர் மாதிரி. அது அசைந்து கொடுக்க நிறையக் காலம் எடுக்கும், ஆனால், கடைசியில் போகவேண்டிய இடத்துக்கு எப்படியாவது வந்து சேருமென இதே பத்தியில் முன்னர் எழுதியதாக ஞாபகம். இப்பொழுது அந்த டைனோசர் மெல்ல மெல்ல ஐ.நா.வின் மனித உரிமைகள் குழுவுக்கு செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழு அறிக்கையைக் கையளித்துவிட்டது. இனி, நவம்பர் மாதத்தில் வெளி வரவிருக்கும் இலங்கை அரசாங்கத்தின் படிப்பி னைகளும் மீளிணக்கத்துக்குமான ஆணைக்குழுவின் அறிக்கையை இது பார்த்து நிற்கும். அது வெளிவந்த பின்னர், அதனைஆறுதலாகப்படித்துப்பார்த்துவிட்டு, அது இலங்கையின் மனித உரிமை மீறல்களையே கவனத்துக்கு எடுக்காத ஒரு பாரபட்சமான அறிக்கை என்று அறிவிக்கும். பிறகு, சுயாதீனமான விசாரணை உடனேயே முடுக்கிவிடப்படவேண்டும் என்று சத்தம் போட ஆரம்பிக்கும். எல்லாம் ஏற்கனவே நிர்ணயிக் கப்பட்ட நடவடிக்கைகள்தான் ஆனால், மெல்ல மெல்லத்தான்.

சர்வதேச அரங்கில் ஈழத்தமிழர்களின் வழக்கு எடுக்கப்படுவதற்கு முழு மூச்சாக உழைத்த பெருமை எங்கள் புலம்பெயர்ந்த சகோதரர்களையே சாரும் எனக் கூறலாம். சம்பந்தப்பட்ட செய்மதிப் படங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்து, சர்வதேச சட்ட அறிஞர்களைக்கொண்டு மக்கள் நீதிமன்றங்கள் நடத்தி தீர்ப்புக்கள் கூறவைத்து. ஐ.நா. நிறுவனத்தை ஈழத் தமிழர் விவகாரத்தை மறந்தொதுக்கிவிட முடியாதபடி செய்தவர்கள் அவர்களே.



சனல் 4 ஒளிப்பேழையை இந்தியா அமெரிக்கா என தனியார் தொலைக் காட்சிகளும் மாநில அரசு களும் பார்க்கச் செய்வதற்கு அயராமல் இன்றுவரை உழைக்கின்றார்கள். போதாததற்கு, நாடு கடந்த தமிழீழம் பிரகடனம் செய்து அதன்மூலமும் தமது நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறார்கள். நாடு கடந்த தமிழீழ அரசுக்கான தேர்தல்களும் நடத் தப்பட்டவுடன், ஈழத்தமிழர்களின் தலைவிதியை நிர்ணயிப்பதில் இவ்வரசு என்ன பாத்திரம் வகிக்கப் போகின்றது என்கின்ற கேள்வியே இங்கு வாழும் தமிழர்களை நோக்கி வீசப்படுகின்றது. இங்கிருப்பவர் களுக்கும் நாடு கடந்த தமிழீழ அரசைப் பற்றிய தெளிவான அபிப்பிராயம் இருப்பதாகத் தெரிய வில்லை.

ஆனால், இனிவருங்காலங்களில், தமிழ்த் தேசியப் பிரச்சினையை சர்வதேச அரங்கிற்குக் கொண்டு வந்துதான் தீர்க்கமுடியும் என்பது உண்மையானால், நாம் புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் பாத்திரம் பற்றிய தெளிவினைப் பெற்றிருத்தல் அவசியமாகும்.

மேலோட்டமாகப் பார்த்தால், உள்நாட்டில் அடக்கு முறை காரணமாக வாய்திறக்க முடியாமல் இருக்கின்ற தமிழர்களுக்கு உறுதுணையாக தாங்கள் வசிக்கும் நாடுகளில் இருந்துகொண்டு குரல் கொடுப்பதே புலம் பெயர்ந்த தமிழர்களுடைய முக்கிய பாத்திரம் என்று தோன்றும். ஆனால், ஈழத்தமிழர்களுக்காகப் பேசுவது என்பது அவர்கள் சார்பில் தேசியப்பிரச்சினைக்கான தீர்வுகளை முன்வைப்பதல்ல. தீர்வு வேண்டி நிற்ப வர்களும் தீர்வினை உருவாக்குபவர்களும் அத்தீர்வின் கீழ் வாழப்போகின்றவர்களும் இங்கிருக்கும் தமிழர்களே.

மாறிவரும் அரசியல் நிலைமைகளில் தமிழ் மக்க ளுக்கான தீர்வு என்ன வடிவில் இருக்கலாம், அதனை சிங்கள மக்களுடன் பேரம் பேசுதலில் கைக்கொள்ள வேண்டிய நெளிவு சுழிவுகள் எவை என்று இங்கு வாழும் எம்மைத் தவிர யாரறிவார்? ஆனால், உலகத் தமிழர் மன்றம் போன்ற பல சர்வதேச அமைப்புக்களின் அறிக்கைகளையும் நடவடிக்கைகளையும் நோக்கி னால், இந்த உண்மை மறந்துவிட்டது போலத்தான் தோன்றுகின்றது. தாம் இந்த நாட்டைவிட்டு வெளி யேறும்பொழுது அது இருந்த நிலைமையிலேயே இன்னமும் கற்பனை பண்ணிக்கொண்டு தமது அரசி யலை வனையப் பார்க்கின்றனர்.

இன்று இங்கு வாழும் தமிழ் மக்களுடைய மிக முக்கியமான பிரச்சினை என்ன? ஆட்கள் போதாமை. குறிப்பாக, பயிற்றப்பட்ட அல்லது நிபுணத்துவம் உள்ள மனித வளம் போதாமை. யாழ். மாவட்டத்தில் பாரா ளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கைகள் குறைக்கப் பட்டது எதனாலே? அரசாங்கம் அபிவிருத்தித் திட்டங் களுடன் வரும்பொழுது அதற்கான தகுந்த விமர்ச னங்களை முன்வைத்து தமிழ் மக்களுக்குப் பொருத் தமான திட்டங்களை அது செயற்படுத்துவதற்கு அழுத் தக் குழுக்களாக தமிழர் செயற்படாதது எதனாலே?

இனவாதப் போக்கில் செயற்பட்டு அநீதியான நிர்வாக நடைமுறைகளை அது கொண்டுவரும்போது, அதனை சாமர்த்தியமாக சுழித்து சுழியோடக்கூடிய திறமை வாய்ந்த அரச உத்தியோகத்தர்கள் இல்லாமல் நாங்கள் அல்லாடிக்கொண்டிருப்பது எதனாலே? எங் கள் சமூகத்தின் அபிவிருத்தியின் நிலைக்களனாக இருக்கின்ற எமது பல்கலைக்கழகங்களில் தரம் வாய்ந்த ஆய்வுத்திறன் உடைய கல்விமான்கள் இல்லா மல் போனது எதனாலே? எங்கள் மத்தியில் ஏதோ வொரு வசதி, ஏதோவொரு தகைமை இருந்த எல்லா ருமே அக்கரைப் பச்சையை நாடிப் போய்விட்டத னாலே. இன்றைக்கே தமிழீழம் எங்களுக்குக் கிடைத்து விட்டது என்று வைத்துக் கொள்வோம். அதன் ஆட்சி யையும் நிர்வாகத்தையும் நடத்த வல்லவர்கள் நம்மத் தியில் இருக்கின்றார்களா? யோசித்துப் பார்த்தால் பயமாகத்தானிருக்கின்றது.

ஆனால், இந்தப் பாரிய பிரச்சினைகளுக்கான தீர்வுகள் பற்றி வெளிநாட்டுத் தமிழர்கள் சிந்திப்பது போலத் தெரியவில்லை. ஒருபுறம் தமிழர் உரிமை, தனித் தமிழ்நாடு என்று பேசுபவர்கள் மறுபுறம் தங்கள் உறவினர்களையெல்லாம் ஸ்பொன்சர் செய்து தாங்கள் வசிக்கும் நாடுகளுக்கே தருவித்துக்கொண்டி ருக்கிறார்கள். இங்கு அவர்கள் இரண்டிலொன்று தீர்மானிக்க வேண்டும். அவர்களுக்கு வேண்டியது என்ன, தமிழீழமா அல்லது தமிழர்கள் மேற்கு நாடு களில் வசதியான வாழ்க்கை வாழுவதா?

அது மட்டுமா? இங்குள்ள தமிழர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று முன்வருவார்கள். அவர்கள் கண்ணில் தெரிவதெல்லாம் யுத்தத்தினால் பாதிக் கப்பட்ட அநாதரவான குடும்பங்கள்தான். அவர்க ளுக்கு பணம் அனுப்புவார்கள். உணவு, வீட்டு உதவித் திட்டங்களைச் செய்வார்கள். ஐயோ, பாவம் என் கின்ற பச்சாதாபத்தில் செய்யப்படுகின்ற இந்த உதவிகளெல்லாம், இங்குள்ள மக்களை தங்கி வாழும் பரிதாப நிலைக்கே தள்ளுகின்றன. யுத்த அகதிகளுக்கு வேண்டிய அத்தியாவசியமான உதவிகளைச் செய்ய வேண்டாமென்று நாம் கூறவில்லை. ஆனால் அதனை மட்டும்தான் குறி வைத்து அதற்குத்தான் நிதிகளைச் சேகரித்து உதவித் திட்டங்களைச் செய்ய வேண்டா மென்றுதான் கூறுகின்றோம்.

இலங்கையின் யுத்தப் பிரதேசங்களில் தொடர்ந்து வாழும் தமிழர்கள் யுத்தத்தில் பாதிப்புற்றவர்கள் என்பது மட்டுமல்ல, அந்தக் கொடூரத்திலிருந்து மீண்டுவந்து வாழ்க்கையை வாழத் துடிக்கின்ற வீர, வீராங்கனைகளும்கூட. அவர்களை அரசியல்ரீதியி லான வலுவுணர்த்தலின் மூலம் தங்கள் எதிர்காலத் தைத் தாங்களே வடிவமைத்துக் கொள்ளும் நெறிப் படுத்துனர்களாக மாற்றும் தேவையுண்டு.

அவ்வாறான நோக்கங்களுடன் இயங்கும் சில நிறுவனங்கள் இங்கு இருக்கின்றன. வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் உள்ள கிராமங்களில் கண்டெடுத்த மனித உருவிலுள்ள மாணிக்கக்கற்களை வருடக்க ணக்கில் தீட்டித் தீட்டி செம்மையாக்கி நல்லதொரு சமூகமாக உருவாக்குவதற்கு இவை பாடாய்ப் படு கின்றன. துரதிர்ஷ்டவசமாக இவற்றின் செயற்பாடுகள் புலம்பெயர் சமூகத்தினரின் கவனத்தை ஈர்ப்ப தில்லை. அவற்றுக்கு ஒரு உதவியும் கிடைக்காது. அப்படியென்றால், யுத்தம் பயங்கரம் என்று அங்கு போனவர்கள் இந்தப்பிறவியில் இங்கு திரும்பி வரப்போவதுமில்லை, இங்கிருக்கும் மனித வளங் களை விருத்தி செய்வதற்கான உதவிகளைச் செய்யப் போவதுமில்லை. ஆயினும் அங்கிருந்து கொண்டு இங்கிருக்கும் எங்களுக்காகப் பேசப்போகின்றோம் என்று மட்டும் உறுதியாக இருக்கிறார்கள். இது ஒரு வகையில் தங்கள் குற்ற உணர்வுகளை ஆசுவாசப் படுத்தவோ?

நாடு கடந்த தமிழீழ அரசு, சர்வதேச சமூகத்துடனான தமது மனித உரிமைகள் குறித்த பிரசாரத்துடன் சேர்த்து முன்னெடுக்க வேண்டிய இன்னுமொரு முக்கியமான கடமை உண்டு. அங்கு வாழும் தமிழர்கள் மத்தியில் அவர்கள் செய்யவேண்டிய அவசிய கடமைகள் பற்றிய விழிப்புணர்வு அது. தமிழ் மக்களை இங்கு நிலைகொள்ளவைத்து அவர்களை வலுப்படுத்தும் மூலோபாயங்களை உணருவதே அது. மக்கள் பங் கேற்கும் ஜனநாயகம் கடைப்பிடிக்கப்படும் ஒரு புதிய உலகத்தை சிருஷ்டிப்பதற்கு உறுதுணையாக இருப்பதே அது.

நாடு கடந்த தமிழீழ அரசு உருவாக்கப்பட்ட முறையைப் பார்த்தாலோ இந்த நம்பிக்கையொன்றுமே எங்களுக்கு வரவில்லை. தேர்தல்களின்போது வாக்குப்பெட்டிகளைக் கவர்ந்தும் பொய் வாக்கு களைப் போட்டு நிரப்பியும் பல நாடுகளிலும் மோசடிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று தெரிய வருகின்றது. கிட்டத்தட்ட விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் நடந்த முறையிலேயே இந்த அரசியல் நடத்தப்பட்டிருக்கின்றது. அவர்கள் இதுவரைக்கும் எந்தப் பாடத்தையும் கற்றுக் கொள்ளவில்லை போலிருக்கிறது. அவர்கள் கற்றுக்கொள்ளும் வரை யில் இலங்கையில் வாழும் தமிழ் மக்களுடன் உரிய முறையில் கைகோர்க்க முடியாமல் போகும்.

# நாடும் நடப்பும்

## பிளான் பண்ணினா பண்ணினதுதான்

எங்கண்ட கூட்டமைப்புக்காறர் போனகிழமை அலரி மாளிகையில வாலைச் சுருட்டிக்கொண்டு நிண்டவ எண்டு கேள்விப்பட்டனுங்கோ. எங்கண்ட சனம் உவயள நம்பி வோட்டுப் போட உவயள் அவர் சொன்னத நம்பி தங்கண்ட உண்ணாவிரதத்த கைவிட்டினமாமுங்கோ. அரசில நம்பிக்கையில்ல எண்டு பேச்சுவார்த்தயில நிண்டு விலகின உவயள் தம்பி மகிந்தர் கூப்பிட்டவர் எண்டு அங்கபோய் வாலச்சுருட்டிக்கொண்டு நிண்டவயாமுங்கோ. மகிந்தற்ற நிகழ்ச்சி நிரலுக்கு உவயள் தாளம் போடுறதெண்டா தமிழ்க்கூட்டமைப்பு என்னத்துக்குங்கோ. பேசாம வெத்திலக்கூட்டமைப்பில சேந்திடலாம் பாருங்கோ.

உவயள் உண்ணாவிரதம் இருந்தா பிரச்சினை எண்டு உவயளக் கூப்பிட்டு சமாளிச்ச ஜனாதிபதி உவன் அமெரிக்காகாறத்தம்பி அதுதானுங்கோ ஏதோ பிளக்கோ பிளேக்காமுங்கோ. அந்தாள் வரேக்க யாழ்ப்பாணத்தில டக்ளஸ் தேவானந்தாவ விட்டு ஆர்ப்பாட்டம் செய்துபோட்டாருங்கோ. கூட்டமைப்புக்காறர் வழமைபோல ஏமாந்துபோட்டினமுங்கோ.

உவயளுக்கு உண்ணாவிரதம் இருக்க பயம்கியமோ தெரியாதுங்கோ. உண்மையா உண்ணாவிரதம் இருக்காட்டிக்கும் எங்கண்ட தமிழ்நாட்டு முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி மாதிரி எண்டாலும் ஒரு மூண்டு மணித்தியாலம் இருந்திட்டு யாழ்ப்பாணத்தில இருந்த கிறிசு கூறிசெல்லாம் எங்கண்ட உண்ணாவிரதத்தக் கண்டு ஓடிடுத்தெண்டு ஒரு அறிக்கை எண்டாலும் விடலாமுங்கோ. அப்பாத்துர ஐயாதான் ஏலாது மனுசனுக்கு வயதுபோட்டுது. உண்ணாவிரதமிருந்து ஏதும் ஆகிவிடும் எண்டாலும் உவயள் சுரேஸ் தம்பி, மாவையாக்கள் ஒரு வெருட்டு வெருட்டலாமுங்கோ. இந்தியாவில ஹசாரேயப் பாருங்கோ. அந்தாள் அந்த வயதிலயும் உண்ணவிரதம் எண்டு ஒரு கலக்குக் கலக்கி சாதிச்சுப்போட்டுதுங்கோ. உவங்கள் உண்ணாவிரதத்திற்கு மதிப்புக்குடுக்கிறவங்கள் இல்ல எண்டாலும் ஒரு வெருட்டுக்கு எண்டாலும் இருந்தா பிளக்கு கிளக்கு எண்டு வந்துபோற அமெரிக்கா, யப்பான் காறங்களும் கொஞ்சம் யோசிப்பினம் பாருங்கோ. சனமும் கூட்டமைப்புக்காறரில கொஞ்சம் நம்பிக்க வைக்குமுங்கோ.

இது என்னடா எண்டா எங்கண்ட கூட்டமைப்புக்காறர தேர்தல் இல்லாட்டிக்கு ஊர்வழிய காணக்கிடைக்காதுங்கோ. தலைவர் சம்பந்தன் ஐயாவுக்கு திருகோணமலையையும் கொழும்பையும் விட்டா இலங்கையில எத்தின மாவட்டம் இருக்குதெண்டே தெரியாதுங்கோ. தேர்தல்கள் நடக்கேக்க இறுதிப்பிரச்சாரத்துக்கு வாங்கோ எண்டு ஆரன் கூட்டிக்கொண்டு வந்தாமட்டும் வடக்குப்பக்கம் வந்துபோவாருங்கோ.

உவயள் இடைக்கிட சனத்தச் சந்திச்சு கதைக்கோணுமுங்கோ. கிறிஸ் வந்தா அவங்கள கூட்டிக்கொண்டுபோக ஆமித்தம்பியவ வாறத்துக்கு முன்னம் கூட்டமைப்புக்காறர் வரவேணுமுங்கோ. அப்பத்தானுங்கோ சனத்துக்கும் உவைக்கும் இடையில ஒரு நெருக்கம் இருக்குமுங்கோ. இல்ல எண்டா காலப்போக்கில சனம் உவயளயும் கழட்டிவிட்டுடுமுங்கோ.

யாழ். மாவட்டத்தில எத்தின எம்.பி. மார் இருக்கீனம் எண்டே மறந்துபோச்சுங்கோ. ஒவ்வொருத்தரும் கொழும்பில, இந்தியாவில, லண்டனில எண்டு நிக்கினமுங்கோ. அப்ப எப்புடியுங்கோ எங்களுக்கு அவையள ஞாபகம் வருமுங்கோ. உவர் அமெரிக்காத்தம்பி பிளேக்குக்கு இருக்கிற அக்கற கூட எங்கண்ட ஆக்களுக்கு இல்லயுங்கோ. அந்தாள் யாழ்ப்பாண அரசாங்கத்தின்ர பிறிஞ்சுப்பல் இல்லாத நேரமாப்பாத்து வந்து மேலதிக பிறிஞ்சுப்பல நல்ல வெருட்டு வெருட்டிப்போட்டுப் போனதெண்டு கேள்விப்பட்டனுங்கோ. ஏன் மீள்குடியேற்றம் பூர்த்திசெய்யேல்ல? அபிவிருத்திகள் ஏன் தாமதிக்குது? எண்டு அந்தாள் பூட்டின அறைக்குள்ள வச்சு நல்ல வாங்கு வாங்கினதாமுங்கோ. உவா விறைச்சுப் போனாவாமுங்கோ. காசு குடுக்கிறவ கேக்கிறதிலயும் நியாயம் இருக்குத்தானுங்கோ.

எங்கண்ட பிறிஞ்சுப்பல் அம்மா நிண்டிருந்தா பிளேக்குக்கு நல்ல பில் குடுத்திருப்பா. அவா இல்லாமப்போட்டா. அவாவப் பற்றித் தெரியேல்ல. அவா ஜெனிவாவிலயே முழங்கப்போட்டா எண்டு அவவின்ர விசுவாசிகள் சிலபேர் கதைச்சு மகிழ்ந்தவயாமுங்கோ.

உவங்கள் அமெரிக்காக்காறர் பாகிஸ்தானுக்கயே புகுந்து ஒசாமாவத் தூக்கின ஆக்களுங்கோ. அவங்களுட்ட உதெல்லாம் பலிக்காது பாருங்கோ. அவங்கள் முடிவு பண்ணிட்டா பண்ணினதுதானுங்கோ. அப்ப நான் போட்டு வாறனுங்கோ....

**- வண்டில்கார வைரவி அப்பு**

# தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் தரமற்ற தேயிலைத்தூள்

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் தேயிலை ஏற்றுமதி பெரும் பங்கு வகிக்கின்றது. ஆனால், அதை ஈட்டிக் கொடுப்பதற்காக நாளாந்தம் தேயிலைத் தோட்டத்தில் கஷ்டப்படும் தொழிலாளர்களின் வாழ்வாதார நிலை பற்றி யாவரும் அறிவர்.

இவர்களின் இந்த வாழ்வாதார நிலையை முன்னிலைப்படுத்தி மலையகத்திலுள்ள பல்வேறு தொழிற்சங்கங்கள் தேர்தல் காலங்களிலும், அதற்குப் பின்னரும் மேடைகளிலும் ஊடக அறிக்கைகளிலும் ஆளாளுக்கு கங்கணம் கட்டிக்கொண்டு ஒருவரையொருவர் குறைகூறி தத்தமது அரசியல் முன்னேற்றத்துக்கான காய் நகர்த்தல்களை மேற்கொள்வர். அம்மக்களின் வாழ்வாதாரம் பற்றி சிந்திப்பதேயில்லை.



அவ்வளவு ஏன், தாம் கை நோக பறித்த தேயிலையிலிருந்து உருவாக்கப்படும் தேயிலைத்தூளை பெற்றுக் கொள்ளவும் அம்மக்கள் சிரமப்படுகின்றனர். தோட்டப்புறங்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு மாதா மாதம் ஒருவருக்குத் தலா 500 கிராம் என்ற அடிப்படையில் தேயிலைத்தூள் வழங்கப்படுகின்றது. இதற்கு சிறியதொரு தொகைப் பணமும் அறவிடப்பட்டு வருகின்றது.

இவ்வாறு வழங்கப்படுகின்ற தேயிலை தரமானதா என்று நோக்கினால் இல்லவே இல்லை. ஏனெனில், தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படுகின்ற பல உயர்ரகத் தேயிலை வகைகள் போக அதிலிருந்து கழிவுபடுத்தப்பட்டு வரும் 'லேபர் டஸ்ட்' என்ற தூசுத் தேயிலையே மக்களுக்கு வழங்கப்படுகின்றது. இது இன்று நேற்றல்ல, காலாகாலமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற ஒரு முறை. ஆனால் தோட்டப்புறங்களில் கடமையாற்றுகின்ற அதிகாரிகளுக்கு வழங்கப்படுவதோ முதல்தரத் தேயிலை.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் மலையக மக்களின் சார்பில் போட்டியிட்ட சில வேட்பாளர்களால் தமது பிரசார நடவடிக்கைகளில் இவ்விடயம் பரவலாகப் பேசப்பட்டது. ஆனால், அவ்வேட்பாளர்கள் வெற்றிபெற்று பாராளுமன்றம் சென்றதும் இவ்விடயங்கள் காற்றோடு கலந்துவிட்டன.

தற்போது இவ்விடயத்தை அவர்கள் துளியளவும் சிந்திப்பதில்லை. தொழிற்சாலைகளில் பலவகையான தேயிலைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதற்கு எமது தோட்டப்புறத் தொழிலாளர்களே குறிப்பாக பெண்கள் முன்னின்று உழைக்கின்றனர்.

ஆனால், அவர்களின் உரிமைகளைத் தட்டிக் கேட்கத்தான் ஆளில்லை. இந்நிலைமை இன்னும் எத்தனை நாட்களுக்கு நீடிக்கப் போகிறது? இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் இதே மட்டமான தேயிலையை இவர்கள் பயன்படுத்தப்போகிறார்கள்? தோட்டப்புறக் கமிட்டித் தலைவர்கள்தான் தொழிற்சங்கங்களினூடாக சம்பந்தப்பட்டோருக்கு இதுபற்றிய அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும். காலகாலமாக தோட்டப்புற மக்களைத் தொடர்ந்தும் அடிமட்டத்திலேயே வைத்திருக்கும் நிர்வாகங்களின் செயற்பாடுகளில் இதுவும் ஒன்றே.

◀ எம். சந்திரசேகரன் ▶



தான் உற்பத்தி செய்யும் பொருளைத்தானே அனுபவிக்க முடியவில்லையாயின் அவ்வுழைப்பில்தான் என்ன பலன்? அதனால் இதற்கான எதிர்ப்புக்குரல் முதலில் சம்பந்தப்பட்ட மக்களிடமிருந்தே எழவேண்டும். அது நாளடைவில் மலையகம் முழுவதும் வியாபிக்கப்படுமாக இருந்தால் இதன் வெற்றிநிலை விரைவில் சாத்தியமே. ஏனெனில், எமது உரிமையை நாமே கேட்டுப் பெற்றுக்கொள்ள முடிந்தாலேயன்றி எம்மை அடக்கியாள நினைக்கும் எந்தவொரு அரசதரப்போ, அல்லது தொழிற்சங்கங்களோ பெற்றுக் கொடுக்கப்போவதில்லை.

# வவுனியா மாவட்டத்தில் அதீகரித்துவரும் திருட்டுச் சம்பவங்கள்



வவுனியா மாவட்டத்தில் அண்மைக்காலமாக திருடர்களின் அட்டகாசம் மேலோங்கி வருவதுடன், பலர் தமது உடமைகளையும் உரிமைகளையும் பாதுகாப்பதில் பெரும்பாடு படுவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். மக்கள் அன்றாடம் கஸ்ரப்பட்டு உழைக்கும் பணத்தினையும், அதனைக்கொண்டு தமது தேவைகளையும் நிறைவேற்றிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் திருடர்கள் எவ்வித சிரமமும் இல்லாமல் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர். தமது வயிற்றினை கழுவுவதற்கு மக்களின் உயிரையும், உடமையையும் மூலதனமாக்கிக் கொள்கின்றனர்.

அண்மையில் வவுனியா பம்பைமடு பகுதியில் புகுந்த திருடர்கள் வீட்டின் கதவைத் தட்டியுள்ளனர். வீட்டின் உரிமையாளர் கதவைத் திறக்கும் போது திருடர்கள் கூரிய ஆயுதத்தால் அவரது கையிலும் கழுத்திலும் வெட்டியுள்ளனர். படுகாயமடைந்த கதிர்காமு துரைராசா என்பவர் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார்.

அதே கிராமத்தில் இன்னுமொரு வீட்டினுள்ளும் புகுந்த திருடர்கள் வீட்டின் உரிமையாளரைப் பலமாகத் தாக்கியதுடன் அவரது தாயாரையும் தாக்கியுள்ளார். கர்ப்பிணியான அவரது மனைவியை சற்றும் ஈவிரக்கமின்றி தாக்கியுள்ளனர். குழந்தைகளின் அவலக் குரல்களினால் திருடர்கள் உயிர் ஆபத்தினை விளைவிக்காது தங்க நகைகளையும் பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

பலத்த தாக்குதலுக்கு உள்ளான முத்தையா இராமகிருஷ்ணன் என்பவரின் கைகளில் திருடர்களின் நகக் கீறல்களால் ஏற்பட்ட காயங்கள் அதிகமாகக் கா[illegible]ப்பட்டன. இச்சம்பவங்கள் தொடர்[illegible]ாக வவுனியா பொலிஸார் விசாரணை[illegible]ளை முடுக்கி விட்டுள்ளனர்.

வவுனி[illegible]பில் கற்பகபுரம், பூம்புகார், சிவப்பு[illegible] க[illegible]நபுரம் பகுதிகளில் திருடர்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர். மக்கள் விழிப்பாக இருக்கும் இத்தருணத்தில் திருடர்களின் முயற்சி பலனளிக்காது போகும் நிலைமையும் ஏற்பட்டுத்தான் உள்ளது.

நாட்டில் தற்போது மர்மமனிதன் பீதியில் உறைந்திருக்கும் மக்கள் இவ்வாறான திருடர்களின் மோசமான தாக்குதல்களுக்கும் உள்ளாக வேண்டிய நிலையில் உள்ளனர். சில இடங்களில் மர்மமனிதர்கள் என்ற காரணத்தைக் காட்டி திருடர்கள் தமது கைவரிசைகளைக்காட்டுகின்றனர். இதனால் பெரும்பாலான மக்கள் உளரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் நிம்மதியான உறக்கத்தையும் இழந்து தவிக்கின்றனர். வருபவன் கிறீஸ் மனிதனா அல்லது திருடனா என்று குழம்பிப் போயுள்ள மக்கள் தங்களுக்கு எந்த நேரத்திலும் ஆபத்து நேருமோ என்ற பயத்தில் வாய்மூடி இருக்கின்றனர்.

◄ எ.பி. ரதன் ►

இவ்வாறான நிலைமைகள் மாற்றமடைய வேண்டும், நீதிமன்றத் தண்டனைகள் அதிகமாக்கப்பட் வேண்டும், சட்டத்தின் பிடியில் நின்று குற்றமிழைத்தவர்கள் எளிதில் வெளியில் வராது இருக்கத் தண்டனைகள் அதிகரிக்கப்படவேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகள்தான் இதற்குச் சரியான தீர்வாக அமையும் என்பன பாதிக்கப்பட்ட மக்களின் குமுறல்களாக உள்ளன. மக்கள் நிம்மதி காற்றினை சுவாசிக்க தொடங்கியிருக்கும் இக்காலப்பகுதியில் இவ்வாறான சம்பவங்கள் மேலும் கலக்கம் அடைய வைத்துள்ளமை வேதனைக்குரியதே.

பல இன்னல்களுக்கு மத்தியில் பழைய நினைவுகளை ஓரளவு மறந்து மக்கள் வாழத் தொடங்கியிருக்கின்றனர். அவர்களது நிம்மதி இப்படியான காரணிகளால் சிதைந்து போகக் கூடாது. அதற்கான உரிய நடவடிக்கையை மக்களைக் காக்கும் அரசாங்கம் எடுக்க வேண்டும்.

# சீரழிகிறதா வவுனியா நகரமும் சமூகமும்?




★ வவுனியா நகரசபை பூங்காவிற்குள் காதல் ஜோடிகள் செல்வதற்குத் தடை என அங்கு தெளிவாக மும்மொழிகளில் பொறிக்கப்பட்ட அறிவிப்புப் பலகைகள் வைக்கப்பட்டிருந்தும் அதனையும் மீறி பலர் செல்கின்றார்கள். அவர்கள் அப்பிரதேசங்களைச் சார்ந்தவர்கள் அல்லர்.

★ வவுனியா நகரத்தில் காணப்படும் நெற்கபேக்கள் பலவற்றில் தனித்தனியாக கூடுகள் அடிக்கப்பட்டு அதற்குள் இரண்டு கதிரைகள் போடப்பட்டுள்ளன. ஒரு மணித்தியாலத்திற்கு 40 ரூபா மட்டும் தொலைத்தொடர்பு சேவை எனக் கட்டணம் அறிவிடுகின்றார்கள். தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்கின்றோம். கணனி வகுப்புகளுக்குச் செல்கின்றோம். பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்கின்றோம் எனக் கூறிவிட்டுப் பல மாணவ, மாணவிகள் இவ்வாறான கடைகளுக்குள் தமது 'செயற்பாட்டை' மேற்கொள்கின்றனர்.



★ வவுனியா நகரில் சட்டவிரோதமாக இயங்கும் விடுதிகள் பல இன்று விபச்சார விடுதிகளாக மாறி இருக்கின்றன. சில விடுதிகளில் ஒழுங்குகள் பின்பற்றப்பட்டாலும் சில விடுதி முகாமையாளர்களை அதிகார வர்க்கத்தில் இருக்கும் சிலர் மிரட்டி விபச்சார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துகின்றனர். வேறு மாவட்டங்களில் இருந்து வருகின்ற பெண்கள் பஸ்களில் இறங்கி பஸ் நிலையத்தில் நிற்கும் போதும் வேறு இடங்களுக்குச் செல்ல நிற்கும் போதும் சிவில் உடையில் நிற்கும் அதிகாரிகள் பலர் சேஷ்டைகளில் ஈடுபடுகிறார்கள். இதனால் பயணங்களின்போது பெண்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

வவுனியா NEWS FEED

★ இதேபோன்று வை.எம்.சி.ஏ. ஒழுங்கையில் கஞ்சா, குடு விற்பனை தாராளமாக நடக்கின்றது. அவ் ஒழுங்கைக்குள் நின்று பலர் மது அருந்துவதும் புகைப்பிடிப்பதும் என பல நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இந்நடவடிக்கைகளால் அயல் வீடுகளில் உள்ள பலர் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

★ மதுபான கடைகளில் நின்று மது அருந்துபவர்களால் அயல் கடைகள் பலவற்றின் வியாபாரங்கள் தடைப்படுகின்றன. பல குளக்கட்டுகள் இளைஞர்களின் குடிபோதை மையங்களாக மாறியுள்ளன. வைரவப் புளியங்குளம் பண்டாரிக்குள வீதி, வேப்பங்குளம், சாந்தசோலை குள வீதி, குடியிருப்புக்குள வீதி இவ்வாறான இடங்களில் இரவு வேளைகளில் இளைஞர்கள் குளக்கட்டுகளில் இருந்து மது அருந்திவிட்டு வீதி மின் விளக்குகளை உடைத்துவிட்டுச் செல்கின்றார்கள்.

★ வவுனியா நகரத்தில் களியாட்ட விழாக்கள் என்ற போர்வையில் இளைஞர், யுவதிகள் மத்தியில் பல சீரழிவுகள் நடந்து வருகின்றன.

★ இவ்வாறான விடயங்களைப் பொலிஸாரின் கவனத்திற்கு பல தடவை கொண்டு வந்தும் எந்த முயற்சியும் கிடைக்கவில்லை என சமூகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

★ இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் ஒன்றைச் சிந்திக்க வேண்டும். கடந்த காலத்திலும் சரி தற்போதும் சரி தமிழினம் சந்தித்த அவல நிலைகளை எண்ணிப் பார்க்க வேண்டும். எங்கள் மண்ணில் சிறந்த கலாசாரத்தை நிலைநாட்ட மேற்கொள்ளப்பட்ட தியாகங்களை நினைவில் கொண்டு செய்றபட வேண்டும்.



நேரடி ரிப்போர்ட்

# பெரியநீலாவணை தொடர்மாடிக் குடியிருப்பில் தண்ணீர்ப் பிரச்சினை

# குமுறுகிறார்கள் சித்தி விநாயகர் தொடர்மாடிக் குடியிருப்பு மக்கள்

ஆழிப் பேரலையின் அழிவில் நாடளாவியரீதியில் பல பிரதேசங்கள் சிக்குண்டன. அதிகளவான சேதங்களுக்குள்ளான பிரதேசங்களில் கிழக்கு மாகாணத்தின் பெரிய நீலாவணைப் பிரதேசமும் ஒன்று. இவ் அனர்த்தத்தால் அம்மக்களின் குடியிருப்புக்கள் முற்றாக அழிவடைந்தன என்றுதான் சொல்ல வேண்டும். அரசாங்கமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் அம்மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தமை யாவரும் அறிந்ததே. ஆனால், வீடுகளை இழந்த மக்களுக்கு அவர்களுடைய சொந்தக் காணிகளில் வீடுகளை அமைத்துக் கொடுக்காமல் கடல் மட்டத்திலிருந்து 100 மீற்றருக்கப்பால் தொடர்மாடி குடியிருப்புக்களை அமைத்துக் கொடுத்திருக்கின்றன.

'இஸ்லாமிக் ரிலீப்' என்ற நிறுவனத்தினூடாக பெரிய நீலாவணைப் பிரதேச மக்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்ட இத் தொடர்மாடிக் குடியிருப்பின் பெயர் சித்தி விநாயகர் தொடர்மாடிக் குடியிருப்பு. தொடர்மாடிக் வீடுகளில் வாழ்ந்து பழக்கமில்லாத அப்பிரதேச மக்கள் தற்போது அதனைப் பழக்கப்படுத்திக்கொண்டு வாழ வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். கடற்தொழிலை வாழ்வாதாரத் தொழிலாக கொண்ட அப்பகுதி மக்கள் படும் வேதனைகளும் துன்பங்களும் சொல்லில் அடங்காது. மொத்தம் 108 குடும்பங்கள் வசிக்கும் இக்குடியிருப்பு மக்களின் பிரதான பிரச்சினையாக இருப்பது குடிநீர்ப் பிரச்சினை. தண்ணீர் தாங்கிகளுக்கு நீர் ஏறாமல் இருப்பதால் மேல்மாடியில் வசிக்கும் மக்கள் பல பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கின்றனர்.

அண்மையில் இப்பிரதேசத்திற்குச் சென்றிருந்தபோது அம்மக்கள் படும் சிரமத்தை நேரடியாகவே கண்ணுற்றோம். அத்தொடர்மாடிக் குடியிருப்பில் இரண்டாம் மாடியில் வசிப்பவர்களுக்கு ஒரு சொட்டுத் தண்ணீரும் கிடைப்பதில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர். இக்குடியிருப்பின் 2ஆம் மாடியில் வசிப்பவரான க. பூமணி என்ற குடும்பத் தலைவி வெகு சிரமப்பட்டு தலையில் ஒரு குடம், இடுப்பில் ஒரு குடம் என்று தண்ணீர்எடுத்துக்கொண்டு மாடிப்படிகளில் ஏறிச் சென்று வைத்துவிட்டு, களைப்புடன் எம்மிடம் கதைத்தார்.

'நாங்க இங்க வந்து நாலு வருசமாகப் போகுது. இப்ப மூண்டு மாசமாத்தான் எங்களுக்கு தண்ணீர்ப் பிரச்சினையா இருக்கு. நாங்க கீழ இருக்கிறாக்களிட்ட போய் எடுக்கம். அவங்க நெடுக விடுவாங்களா? அவங்க குடிக்க மட்டும் 2 குடம், 3 குடம் தருவாங்க. மற்ற பாவனைக்கெல்லாம் எங்க போற நாங்க..? குளிக்கிறத்துக்கு வேற கிணறு இருக்கும் இடத்துக்குத் தான் போறம். இதால எங்களுக்கு கஸ்டமா இருக்கு. பாத்ரூமுக்கெல்லாம் தேவை. எங்களால ஏலாது இனியும் இப்படி இருக்க. நாங்களும் யார் யார் கிட்டயெல்லாமோ அறிவிச்சனாங்க. அவங்க சொன்னாங்க எல்லா இடமும் லைன் குடுத்திருக்கிறத்தால தண்ணி வாறது குறைவாத்தான் இருக்குமெண்டு. எங்களுக்குஇரவையிலையாவது தண்ணி வந்தாலும் காணும். அதுவும் இல்ல' என்று கூறி வேதனைப்பட்டார்.

இத்தொடர்மாடிக் குடியிருப்பின் முகாமைத்துவ சபை உபதலைவியான வடிவேல் தமயந்தியிடம் இதுபற்றிக் கேட்டோம். 'நாங்க எல்லா இடத்துக்கும் அறிவிச்சு, அம்பாறைக்கெல்லாம் போன் பண்ணிச் சொன்னம். தண்ணி நிறைய வந்தால்தான் உங்களுக்குத் தரலாம் இல்லாட்டி ஒண்டும் செய்ய ஏலாது எண்டு சொல்றாங்க. கீழ இருக்கிற கிணத்திலதான் போய் குளிக்கிற தெண்டால் குளிக்கணும். குடிக்கிறத்துக்கு கீழ் வீட்டாக்களிட்ட காலை 6 மணிக்கெல்லாம்போய் எடுத்தால்தான். இல்லாட்டி தண்ணி நிண்டு போகும். அதனால தண்ணி எடுத்துக்கொண்டு மேல 2ஆவது மாடிக்கு ஏறிவரணும். இந்தப் படியால ஏறி இறங்கவே ஏலாது. அப்படி இருக்கேக்க தண்ணியையும் எடுத்துக்கொண்டு அதைத் தூக்கிக் கொண்டுபோக ஏலாது. தண்ணி பில் கட்டாட்டி உடனே வந்து வெட்டிபோட்டுப் போறாங்க. ஆனால் தண்ணி வருதில்லை எண்டு சொன்னதும் அதுக்குரிய நடவடிக்கை எடுக்கல்ல' என்று வேதனையுடன் கூறினார். ஒரு நாளைக்கு தண்ணீர் ஏற்றினாலும் அதனைக் கொண்டு மூன்று நாட்களுக்கு பயன்படுத்திக் கொள்வோம் என்று அம்மக்கள் பரிதாபமாக கூறுகின்றனர்.

இரண்டு கைகளிலும் தண்ணீர் வாளிகளைச் சுமந்தவாறு நின்றிருந்த மூன்று பிள்ளைகளின் தாயான செல்லையா சதா (வயது 38) தண்ணீர் இன்றி தன் பிள்ளைகளின் தேவைகளை பூர்த்திசெய்ய முடியாமல் இருப்பதாக எம்மிடம் கூறி, குறைபட்டுக் கொண்டார்.

'கிணத்தில் தண்ணி அள்ளிக் கொண்டு ரெண்டாவது மாடிக்கு ஏறுறதெண்டால் சரியான கஷ்டம். இந்தத் தண்ணிப் பிரச்சினையால டொய்லட் பிரச்சினையும் இருக்கு. அதுக்கு தண்ணி இல்ல. அதனால சரியான கஸ்டப்படுறம். குழந்தப்பிள்ளைய வச்சுக்கொண்டு இந்த மாடி வீட்டில் தண்ணி இல்லாம எப்படி இருக்கிற? எதுவும் செய்யமுடியாத நிலையில் அவரது பார்வையில் ஏக்கம் வெளிப்பட்டது.

'நாங்க இதைப் பற்றி வடிகாலமைப்புச் சபையிட்ட கேட்டவுடன் அவங்க சொன்னாங்க மேலதிகமா சப்ளை குடுத்ததால வார தண்ணி காணாமல் இருக்குதாம். அதால தண்ணி வார வேகத்தைக் குறைச்சிருக்காங்களாம். அதால கீழ்மாடிய தவிர 1, 2ஆம் மாடிக்கு தண்ணி வார கஸ்டமா இருக்கு. நாளடைவில் தண்ணிய திறந்து விடுவம் எண்டு சொன்னாங்க. இதுவரைக்கும் அதுக்குரிய நடவடிக்கை எடுக்கல்ல. இப்ப நாங்க வடிகாலமைப்பு சபைக்கு கடிதம் எழுதி வச்சிருக்கம். நீர் வடிகாலமைப்பு சபை இதற்குரிய நடவடிக்கையை செய்யாவிட்டால் இங்க இருக்கிற அனைவரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுவம். இதுதான் நம்மட கடைசி முடிவு' என்று அத்தொடர்மாடிக் குடியிருப்பின் முகாமைத்துவ சபைத் தலைவர் குணா ஆதங்கப்பட்டார்.

தண்ணீர்ப்பிரச்சினை மட்டும் இந்த மக்களைப் பாடாய்ப் படுத்துவதில்லை. இக்குடியிருப்பு மக்களுக்கு 12 வீடுகளுக்கு ஒரு குழி என்ற கணக்கில் மலசலகூடம் கட்டிக் கொடுத்திருக்கின்றார்கள். 'அவற்றில் அடைப்பு ஏற்பட்டால் அம்மக்கள் காசு கொடுத்துத்தான் அதனை எடுக்க வேண்டும். கடற்றொழிலை செய்து வாழும் மக்களுக்கு அந்தளவு காசு இல்லை. இவ் வீட்டுத்திட்டம் வரும்போது இப்பகுதிக்கு பொறுப்பான கிராம சேவகர் அவர்களுடைய நிலப்பரப்பில் வீடுகளைக் கட்டிக் கொடுக்கும்படி அறிவுறுத்தியிருக்கலாம். இத் தொடர்மாடியிலிருந்து இதுவரை பலர் விழுந்து அடிபட்டுள்ளார்கள். அண்மையில் ஒருவர் விழுந்து இறந்ததாகவும் இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.


'நாங்க ஒரு கடனுதவி பெறக்கூட வாய்ப்பில்லாமல் போகுது. இப்ப கமநெகும விவசாயத்திட்டம் வந்திருக்கு. அதில் பங்கு கொள்ள ஏலாது. காரணம் நிலம் இல்ல. கோழி வளர்ப்பு வருகுது. அதுக்கு கடனுதவி கேட்டால் 'எங்க வச்சு கோழி வளர்க்கப்போறிங்க. மாடிலையா' எண்டு கேக்குதுகள். அப்ப என்ன தொழிலைச் செய்யிற? கடற்தொழிலைத்தவிர வேற தொழிலைச் செய்ய மாட்டமா? ஆடு மாடு வளக்கவோ தோட்டம் செய்யவோ ஆசையாக இருந்தாலும் அதைச் செய்ய ஏலாது. இவங்கட கதை என்னண்டா உங்கட வீடு சுனாமில அழிஞ்சதா. அதுக்கு வீடு தந்தாச்சு. அவ்வளவுதான். எண்டு சொல்றாங்க' என்று குணா மேலும் குறிப்பிட்டார்.

தொடர்மாடிக் குடியிருப்பில் வாழ்ந்து பழக்கப்படாத இம்மக்களுக்கு இவ் வாழ்க்கை பெரும் துன்பத்தை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கின்றது. தண்ணீர்ப் பிரச்சினை ஒரு புறம், நிறைந்த மலசல கூடங்களால் துர்நாற்றம் மறுபுறம் என இம்மக்கள் அவஸ்தைப்படுகின்றனர். இதனால் தொற்று நோய்களுக்கும் இவர்கள் ஆட்பட்டு வருகின்றனர். வீடு ஒன்றைக் கட்டிக் கொடுத்தால் போதுமா? அவ் வீட்டில் வாழ்வதற்குத் தேவையான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டாமா? அதிகாரிகள் இவர்கள் விடயத்தில் பாரபட்சம் காட்டாமல் இப்பிரச்சினையை விரைவில் தீர்க்க வழி செய்ய வேண்டும்.



பூமணி | தமயந்தி | சதா | குணா






ம. புவிலக்ஷ்மி

# இலங்கைக்கு தப்பி வருவாரா ஜகத் டயஸ்

சுவிட்ஸர்லாந்து மற்றும் ஜேர்மனிக்கான பிரதித் தூதுவர் ஜெனரல் ஜகத் டயஸின் பதவிக் காலம் முடிந்து நாடு திரும்புவதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. ஜகத் டயஸை மீளஅழைத்ததாக வெளியான தகவல்களில் உண்மையில்லை எனவும் அவ் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இறுதிப்போரின்போது 57ஆவது படையணிக்கு தளபதியாக இருந்த இராணுவ ஜெனரல்ஜகத் டயஸை இலங்கை மீள அழைத்துள்ளதாக சுவிட்ஸர்லாந்தின் செய்திச் சேவை ஒன்று அண்மையில் செய்தியொன்றை வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

ஜகத் டயஸ், சுவிட்ஸர்லாந்து மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகளின் தூதுவராக செயற்பட்டு வந்தார். இறுதிப்போரின் போது அவரே பொதுமக்கள் இலக்குகள் மீதும், வைத்தியசாலைகள் மீதும் தாக்குதல்களை நடத்துமாறு படையினருக்கு உத்தரவிட்டார் என்று குற்றம் சுமத்தப் பட்டிருந்தது. ஐரோப்பாவின் மனித உரிமைகளுக்கான சட்டவாக்க நிலையமும், ஜகத் டயஸ், சித்திரவதை, கொலைகள்



## மீள அழைக்கவில்லை என்கிறது வெளிவிவகார அமைச்சு

என்பவற்றில் சம்பந்தப்பட்டிருந்ததாக குற்றம் சுமத்தியிருந்தது.

இது தொடர்பில் கடந்த மாதத்தில் சுவிஸ் வெளியுறவு அமைச்சு இலங்கை அரசாங்கத்துடன் தொடர்புகொண்டு குறித்த குற்றச்சாட்டின் தீவிர நிலைமைகளை விளக்கியிருந்தது. இதனையடுத்தே ஜகத் டயஸ் இலங்கை அரசாங்கத்தினால் நாட்டுக்கு மீள அழைக்கப் பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. ஜகத் டயஸ் கடந்த இரண்டு ஆண்டுகளாக குறித்த பதவியை வகித்து வந்ததாகவும் அவரது பதவிக்காலம் இந்த மாத இறுதியுடன் நிறைவடைவதாகவும் இதனாலேயே ஜகத் டயஸ் நாடு திரும்புவதாகவும், மீள அழைக்கப்படவில்லை எனவும் வெளிவிவகார அமைச்சு மறுப்புத் தெரிவித்திருக்கின்றது.

இதேவேளை ஜேர்மன், சுவிஸ், வத்திக்கான் ஆகிய நாடுகளின் தூதுவரான ஜகத் டயஸின் இராஜாங்க உரிமையை சுவிஸ், ஜேர்மன் ஆகிய நாடுகள் இரத்துச் செய்துள்ளதாகவும் மற்றொரு தகவல் தெரிவிக்கிறது. சுவிஸில் சிறுபான்மை இனங்களின் பாதுகாப்பிற்கான அமைப்பு, சுவிஸ் ஈழத்தமிழரவை ஆகியன இணைந்து செயற்பட்டதன் விளைவாக டயஸின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

57 ஆவது படையணி நகர்ந்து சென்ற பக்கமாக பொதுமக்கள் கொல்லப்பட்டது போன்ற செய்திகளை நேரடிச் சாட்சியங்களுடன் உறுதிப்படுத்தியதை அடுத்தே குறிப்பிட்ட நாடுகள் இந்த முடிவை எடுத்துள்ளன. இதனால் இவர் கைது செய்யப்படக் கூடிய வாய்ப்பும் உள்ளது. இந்த நிலமையில் டயஸ் இலங்கைக்குத் திரும்பிச் செல்வதற்கான முடிவை எடுப்பதே தற்போது இருக்கக் கூடிய ஒரே ஒரு தேர்வாகும்.

போர்க்குற்றம் இழைத்த ஒருவர் இராஜாங்கப் பணிகளைத் தொடர்வதற்கு வாய்ப்பில்லை என்பதன் விளைவே டயஸின் மீதான இந்த நடவடிக்கைக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. இதே போன்று படைத் தளபதிகளாக இருந்த போது போர்க்குற்றம் இழைத்தவர்கள் ஏனைய நாடுகளில் இராஜாங்க நடவடிக்கையில் ஈடுபட்டால் அவர்கள் மீது அந்த நாடுகளில் செயற்படும் தமிழமைப்புக்கள் சட்டநடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் இதே போன்ற நிலமைக்குள் அவர்களும் சிக்குவதற்கு வாய்ப்புள்ளது. இதனைக் கூர்ந்து கவனித்து செயற்படவேண்டிய பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உள்ளது என தமிழமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

**- இளமாறன்**


# பூந்தோட்ட அகதிமுகாம்

## தீ விபத்து ஒரு சதியா?

வவுனியா பூந்தோட்டம் கம்பஸ் முகாமில் கடந்தவாரம் ஏற்பட்டிருந்த தீ விபத்தில் பாதிக்கப்பட்டு அநாதரவான நிலைக்குள்ளாகியுள்ள 20 குடும்பங்கள் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் இடம்பெற்று ஒரு வாரமாகியும் உரிய கிராம அலுவலரோ அல்லது ஏனைய அரச அலுவலர்களோ இந்த அவல நிலைமை சம்பந்தமாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையெனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.


கடந்த 10ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் மேற்படி முகாமில் திடீரென ஏற்பட்ட இந்தத் தீ விபத்தின்போது பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது. இந்த முகாமில் கடந்த 15 வருடங்களாக வன்னி உட்பட பல பகுதிகளில் இருந்தும் இடம்பெயர்ந்து வந்த 168 குடும்பங்கள் வசித்து வருகிறார்கள்."

இவர்கள் முகாமில் இருந்து வெளியேற வேண்டும் என பிரதேச செயலாளர் உட்பட அனைவரும் கூறி வருவதுடன் இவர்களை ஒரு முகாமாக கணக்கெடுப்பதில்லையெனவும் இதனால் மீள்குடியேற்றம் என்ற விடயத்தில் தமக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையெனவும் அங்கு வசிக்கின்ற மக்கள் தெரிவிக்கின்றனர். இந்நிலையில் தீ விபத்தி



னால் அனைத்து உடமைகளையும் இழந்து சுமார் எண்பதுக்கும் மேற்பட்ட சிறியவர்கள் பெரியவர்கள் எனப் பலரும் உடுத்த உடையை அன்றி வேறு உடைகளுக்கோ அடுத்த நேர உணவுக்கோ வழி இன்றி நிர்க்கதியான நிலைக்குள்ளாகியுள்ளனர். இத்தீவிபத்து திட்டமிட்டுச் செய்யப்பட்டதா அல்லது தற்செயலானதா என ஐயம் எழுந்தாலும் முன்னரும் இவ்வாறான தீ விபத்துச் சம்பவங்கள் இம் முகாமில் இடம் பெற்றுள்ளமை இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதே.

இதேவேளை, ஜெனீவாவில் மனித உரிமை கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பதாக வன்னி மக்கள் தங்கியுள்ள முகாம்கள் அனைத்தையும் மூடிவிட இலங்கை அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் ஒருதகவல் கசிந்துள்ளது. இதன் மூலம் அனைத்து மக்களும் மீள்குடியேறிவிட்டார்கள் என அரசு கூற முற்படுகின்றது. வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் உள்ள அனைவரும் உடனடியாக முல்லைத்தீவின் கோம்பாவில் முகாமுக்கு மாற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதற்கேதுவாக கோம்பாவில் பகுதியில் கொட்டில்களை அமைக்கும் பணியில் அவசர அவசரமாக படையினர் ஈடுபட்டு வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.



தற்போது வரை வவுனியா மெனிக்பாம் முகாமில் மட்டும் 1687 குடும்பங்களைச்சேர்ந்த ஐயாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் முல்லைத்தீவின் முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன், வலைஞர் மடம் மற்றும் புதுக்குடியிருப்பின் சில பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

(16ஆம் பக்கம் பார்க்க..)

### ◄ நக்கல் நையாண்டிப் போடியார் ►

*எப்புடி சொகமா இருக்கீங்களா...?*

*இஞ்ச பாருங்க, இந்த அரசியல்ல என்ன நடக்குதுடப்பா? இந்த புண்ணியவான் மனிசன் அஷ்ரப்ப வெச்சி அரசியல் நடத்துறாங்க எல்லாரும். முஸ்லிம் காங்கிரஸும் [பெயருக்குத்தான் காங்கிரஸ்] தேசிய காங்கிரஸும் [பெயருல காங்கிரஸ் எண்டு வந்தாலே அஷ்ரப் தானா] காணாததுக்கு யூ.என்.பி.லயும் எலக்ஷன் கேக்கிறவங்க அஷ்ரப்ட போட்டவத்தான் அவங்களுப் பின்னாடி போடுறாங்க. இது காணதெண்டு சுயேச்சையும் அவர்ர போட்டவப் போட்டு நாறாடிக்கிறாங்க.*

*அஷ்ரப் என்ன உங்கட சாக்கட அரசியலுக்கு முத்திரயா? யாருக்கெடுத்தாலும் அஷ்ரப்ட போட்டவ வெச்சி அரசியல் பிஸ்னஸ் பண்ணுறீங்க? யார் அஷ்ரப்ட போட்டவக் காட்டினாலும் வோட்டுப் போட நம்முட சனங்கள் என்ன இளிச்ச வாயன்களா? மக்களுக்கு சேவ செஞ்சா மக்கள் உங்கள தோள்ல வெச்சித் தாங்குவாங்க.*

*இப்ப அஷ்ரப்ட ஆண்டு நினைவும் வந்திச்சி. ஆனா, அவர யாரு கொன்டாங்க எண்டுதான் இன்னும் தெரியவரல. இனி வரவும் வராது. காய்க்கிற மரத்துக்கு கல்லடி படுறது எல்லாம் சகஜம்தான். அரசியல்ல இதெல்லாம் சகஜமப்பா. இப்ப அரசியல்ல எவ்வளவு பம்மாத்து நடக்குதடப்பா...? என்ட கொடலே!! பார்த்தாலே காறித்துப்பணும் போலத்தான் கெடக்கு. இதயெல்லாம் திருத்த ஏலாது பாருங்க. சரி, இண்டைக்காவது அந்த மனிசன நினச்சாங்களே, அதுவே பெரிய விசயம்தான்.*

*மறுகாவும் வருவன்...!*



# முறியாத பனை

◄ சந்திரா. ரவீந்திரன் ►

சிறுகதை

சூரியன் அஸ்தமிக்கும் பொழுதுகளில், ஓரமாய் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும், பொதிகளற்ற வெற்று ரயில் பெட்டிகளினுள்ளேயிருந்து 'ஐயோ...அம்..மா...' என்ற மரண ஓலம் எதிரொலியாய் விட்டுவிட்டுக் கேட்கும். சில நிமிடங்களுக்கு எங்களின் தொண்டைக் குழிகள் அடைத்துப் போகும். வீடு அசாதாரண அமைதியில் மூழ்கிக்கிடக்கும். ஆனால் நாம் பயப்பிடவே தேவையில்லை. ரெயில்வே ஸ்ரேசனின் பெரிய பெரிய கட்டடப் பகுதிகளை இணைத்து, பிரதான முகாமாக்கியிருந்த அந்த இந்திய –சிங்– குகளுக்கு நிலையத்தின் தலைமை அதிபரான அப்பாவில் மட்டும் நிறைய மரியாதை.


தண்டவாளங்களோடு ஒட்டியிருந்த எங்கள் ரயில்வே குவாட்டர்ஸ் மிகவும் அழகானது, ஸ்ரான்லி வீதிப்பக்கமாயிருந்த. வீட்டின் முன்புறத்தில் முல்லையும் அடுக்கு மல்லிகையும் பந்தலிட்டு நின்றன. இருபுறமும் பச்சைப்புற்கள். வேலி முழுவதும் பின்னிப்படர்ந்திருக்கும் பூங்கொடிகள் ரோஜா நிறத்தில் கொத்துக்கொத்தாய்ப் பூத்துக் குலுங்கும். ஆனால் வாசனையற்றவை. அவை சிங்களப் பகுதியிலிருந்து கொண்டு வரப்பட்டதால் 'சிங்களக் கொடி' என்று பெயர் சூட்டியிருந்தோம்.

பின்னால் ரயில்வே ஸ்ரேசன் வளவில், எமது வீட்டுவேலியோடு ஒட்டியவாறு உயரமான ஒரு 'செக்பொயின்ற்' பனங்கொட்டுகளும் மண்மூட்டைகளும் போட்டு வசதியாக அமைத்திருந்த 'செக்பொயின்ற்' அவர்கள் வெளியில் செக்கிங்கில் ஈடுபடுவதைவிட வேலிக்கு மேலால், எமது வீட்டிற்குள் கண் மேய்ச்சல் விடுவதே அதிகம். கங்கு மட்டை, காய்ந்த ஓலை, பனங்காய், பன்னாடை என்று சடசடத்து விழும்போதெல்லாம், ஆரம்பத்தில் துடித்துப்பதைத்து வெற்றுவேட்டு வைத்து, கூச்சல்களோடும் அதட்டல்களோடும் பத்துப்பதினைந்து பச்சைத்தலைகள் வேலியின் மேலால் எட்டிப் பார்த்து ஆராயும். போகப்போக, அது அவர்களுக்குப் பழக்கமாகி விட்டதால், பனைகளுக்குப் பாரிய பிரச்சினையேதும் ஏற்படவில்லை.

தண்டவாளங்களை நோக்கித் திறபடும் எமது பின்புறப் படலையை சங்கிலி போட்டுப் பூட்டக்கூடாது என்பது அவர்கள் கட்டளை. சாட்டாக நினைத்த நேரத்தில் உள்ளிட்டு விடுவார்களோ என்ற பயம் நமக்கு. ஆனால் அநாவசியமாக அவர்கள் உள்ளிட்டதில்லை என்பது நம்பமுடியாத உண்மை! அப்பாவுக்கு, பின் படலையால் வேலைக்குப் போய் வருவது பெரிய சௌகரியமாய் இருந்தது. நேரம் கிடைக்கும் நேரங்களில் வந்து, தேநீர் அருந்தி, நொறுக்குத்தீனி சாப்பிட்டுவிட்டுப் போவார்.

சில சமயங்களில் அப்பாவுடன் சேர்ந்து கேர்ணல், மேஜர் என்று அலங்காரப்பட்டிகளுடன் ஹிந்திப்பட்டாளங்களும் வருவதுண்டு. அப்பா எச்சிலை மென்று விழுங்கியபடி இழுபட்டுக்கொண்டு வருவது எனக்கு விளங்கும். அவர்கள் கதையோடு கதையாய் வீடுமுழுவதும் கண்களால் கணக்கெடுத்துக் கொண்டு போவார்கள். போகும்போது நட்பாக விடைபெறுவார்கள். 'இங்கு எல்லோருக்கும் பெரிய பெரிய வீடுகள் இருக்கிறது. தண்ணீர் வசதியிருக்கிறது. இதைவிட வேறென்ன வேண்டும் உங்களுக்கு? எதுக்காக சண்டை போடுகிறார்கள்' என்று ஒரு இந்தியக் கேர்ணல் அப்பாவிடம் கேட்டானாம். 'இவன்களுக்கு இதெல்லாம் விளங்குமா? இந்தியப் பெரும்பான்மையினக் குடிமகன் இவன். ஒரு காலத்தில் பெரும்பான்மையினமாக இருந்து இப்போ சிறுபான்மையினமாக்கப்பட்டிருக்கும் இந்த இலங்கைத் தமிழனின் உரிமைப் பிரச்சினைகள், அரசியல் துரோகங்கள், நிரந்தர இழப்புகள், பரிதாபங்கள், ஏக்கங்கள் எல்லாம் சொன்னாலும்தான் இவனுக்குப் புரியுமா?' அப்படித்தான் அப்பா உடனே யோசித்தாராம். யோசனையின் விளிம்பிற்கு வரமுன்பே, அவன் இந்த மண்ணின் நாணம் மிக்க பெண்களைப் பற்றிச் சிலாகிக்கத் தொடங்கி விட்டானாம். அதன் பின்னர் அவன் பதில் சொல்லக் கூடிய கேள்வியெதுவுமே கேட்கவில்லையாம்.

வீட்டு வளவிற்குள் கள்ளுச்சீவ வருபவன், வேலியோடு செக்பொயின்ற் வந்ததிலிருந்து பனையில் ஏறமாட்டேன் என்று பிடிவாதமாக நின்றுவிட்டான். ஒரு பனையில் அவன் கட்டிவிட்ட முட்டி கவிண்டபடி அப்படியே கிடந்தது. அதிலிருந்து கள்ளு நிரம்பி வழிகிறதோ என்று குமரியாகி நிற்கும் என் குட்டித்தங்கை, பனையோடு ஒட்டிநின்று அடிக்கடி அண்ணாந்து பார்ப்பாள். அவள் பனைமரங்களருகே போனால், செக் பொயின்றிலிருந்து மெல்லிய விசிலடிப்பும் இனிமையான பாடலிசையும் கேட்கத் தொடங்கிவிடும். அதனால் பனைகளருகே



நின்று நாம் அனுபவிக்கும் சுகங்கள் படிப்படியாகக் குறைந்து கொண்டே போயின.

அலுவலகத்திலிருந்து வீடு திரும்பியதும் ஆசை தீர அள்ளிக்குளித்துவிட்டு, சின்னத் தூக்கத்திற்காய் படுக்கையறைக்குள் நுழைந்தால், முகாமிலிருந்து வரும் மும்முரமான சத்தங்கள் தூக்கத்தைக் கெடுக்கும். முன் கேற்றால் வீட்டினுள் நுழைபவர்களை செக் பொயின்றில் இருப்பவன் முழுமையாகக் காணமுடியாது. ஆனால் வருபவர் வீட்டின் நடு இருப்பறைக்குள் நுழைந்து விட்டால், பின்வாசலூடாய் பைனாகுலர் மூலம் மிகத் தெளிவாய்க் காணலாம்.

என் சிநேகிதி அபி, பெரிய ஓலைத்தொப்பியும் கவர்ச்சியான உடையும் அணிந்து கொண்டு அழகான சைக்கிளில் வந்திறங்கிக் கதைத்துவிட்டுப் போவாள். அவளின் கைப்பையினுள் ஏகப்பட்ட கருதாசிகள், குறிப்புகள் இருக்கும். உடம்பின் ஒரு பகுதியில் 'சயனைட் குப்பி' இருக்கும். பின்புறம் சமையலறைப் பக்கமாய் அவள் வரும்போது செக்பொயின்றில் இருப்பவன் தலையை வெளியே நீட்டி கண்ணடித்துச் சிரிப்பான், களிப்பில் கையசைப்பான்!

எனக்கு இதயம் படபடத்துக் கொண்டேயிருக்கும். அவள் வெகு சாதாரணமாய், அண்ணரின் கதையிலிருந்து ஆஸ்பத்திரிக் கதைவரை பரிமாறிவிட்டு, தேவையானவற்றைச் சேகரித்துக்கொண்டு சிரித்தவாறே போய்விடுவாள். போகிறாளே என்று மனதிற்குள் ஏக்கமாயும் இருக்கும். போனபின் ஏனோ ஆறுதலாயும் இருக்கும். வீடு வீடாகச் சோதனை நடக்கிற போதும் இந்த ரெயில்வே பகுதிக்குள் மட்டும் யாரும் சோதனை போட வருவதில்லை என்று இறுமாப்புடன் இருந்த எமக்கு ஒரு நாள் காத்திருந்தது.

அது ஒரு சுட்டெரிக்கும் வெயில் நாள். செக்ப் பொயின்ற் நோக்கி யாரோ உற்றுப் பார்த்திருக்கிறார்கள். அடுத்த நிமிடம் அதற்கருகாக கிரனைற் குண்டொன்று வெடித்திருக்கிறது. வந்தவனின் குறி தப்பிவிட்டது. வேலியோடு நின்ற சீனிப்புளி மரத்தின் கிளைகளுக்கு மட்டும்தான் சேதம்.

ஸ்ரேசன் பகுதி முழுவ தும் மிருகத்தனம் தலைதூக்குவதற்கு இது ஒன்று போதுமே. திபு திபு வென்று எமது பனம் வளவிற்குள் பச்சைப்புழுக்களாய் அவர்கள். சட சட வென்று காற்றைக் கிழிக்கும் இரைச்சலுடன் துப்பாக்கி வேட்டுக்கள்.

எல்லாம் ஓய்ந்த பின், ஜன்னலினூடாய் வளவைப் பார்த்தேன். மருந்து நெடி வீசியது. அடிவயிற்றுக்குள் இன்னமும் அச்சம் அப்பிக்கிடப்பதான உணர்வு! ஒரு உற்சாகமான வார இறுதி நாள், ரெயில்வே தொழிலாளிகளை அப்பா அழைத்திருந்தார். அவர்கள் புற்கள் நிறைந்த வளவைத் துப்பரவாக்கத் தொடங்கி விட்டார்கள். மேஜர் முக்தயார், ஏணிப்படிகளில் ஏறி நின்றவாறே வளவிற்குள் நின்ற அப்பாவுடன் வெகு சந்தோஷமாய் கதைத்துக் கொண்டிருந்தான். அப்பா, வள்வைத் துப்பரவு செய்விப்பது அவனுக்குப் பெரு மகிழ்ச்சி என்று விளங்கியது. புற்களினூடாக வேலிவரை யாராவது தவழ்ந்து வந்து விடுவார்களோ என உள்ளூர ஊறிக்கிடந்த அச்சத்திற்கு அது பெரிய ஆறுதல்தானே.

★ ★ ★

சைக்கிள் றிம் இல் சுரீர் சுரீரென்று மணற்புழுதி வந்து மோதிக்கொண்டிருந்தது. நான் அலுவலகத்தில் ரைப் செய்யவேண்டியிருந்த அனைத்துப் பிரதிகளையும் முழுமையாகச் செய்து முடித்து விட்ட திருப்தியுடன், ஆசுவாசமாய் சைக்கிளில் வந்திறங்கினேன். வீட்டினுள் பரபரப்பாக ஆளரவம். வல்லைவெளி தாண்டி வந்த வடமராட்சி உறவினர்கள் சிலர் என்னைக் கண்டதும் எட்டிப்பார்க்கிறார்கள். ஏதோ வித்தியாசமாய்த்தான் இருந்தது.

அம்மா அழுத கண்ணீருடன் படியிறங்கி ஓடிவந்து என்னைக் கட்டியணைத்து விம்மினா. ஓசையை அடக்கி ஒப்பாரி வைத்தா. எனக்கு எல்லாம் விளங்கி விட்டது. 'ஊரில் என் தம்பி போரிட்டு மாண்டான்' என்று மார்தட்டிப் புலம்பவோ, தலையைப் பிசைந்து குழறவோ ஊரைக் கூட்டி ஒப்பாரி வைக்கவோ முடியாத ஊமைச்சாபம் எங்களுக்கு. நடு இருப்பறையைத் தாண்டி, பின்புறமாய் எம் அழுகுரல் போய்விடக்கூடாத அவலம் எமக்கு. கத்தி அழுது தீர்க்க முடியாத அவஸ்தை எம்மை வதைத்து உருக்கியது.

எல்லா சுதந்திரங்களும் பறிக்கப்பட்டு, இப்போ அழுவதற்குரிய ஆகக் குறைந்த சுதந்திரமும் இரகசியமாய்ப் பறிக்கப்பட்டிருந்தது யாருக்குத் தெரியும்? யார் யாரைப் போய்த் தேற்றுவது? சில மாதங்கள், எமக்குள் எரியும் துன்பப்பெருநெருப்பை அமுக்கி.. அமுக்கி... பின்னர் அவை வெறும் தணற் துண்டங்களாய் கனன்று பொசுங்கிக் கழிந்து கொண்டிருந்தது! நமது சின்னச் சின்னச் சந்தோஷங்களும் இத்தனை விரைவில் சீர்குலைந்து போகுமென்று நம்பவில்லை.

இலையுதிர்காலம் தொடங்கி, சீனிப்புளி உருவியுருவி தன் இலைகளை வளவெல்லாம் கொட்டத் தொடங்கிய போது ஒரு நாள் திடுதிப்பென்று அவர்கள் மூட்டை கட்டத் தொடங்கி விட்டார்கள். ரெயில்வே ஸ்ரேசனுக்குரிய கட்டடங்களெல்லாம் அவசரம் அவசரமாய் விடுவிக்கப்பட்டு வெறிச்சோடிப் போய்விட்டது. அனைத்து வாகனங்களும் அப்புறப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தன. மேஜர், கேர்ணல் என்ற பதவியிலிருந்தவர்கள், விடைபெற்றுப் போக வீட்டுக்கு வந்தார்கள். சிநேகமும் பண்பும் மிக்க எங்களைப் பிரிந்து போவதில் பெரிய மனவருத்தம் என்று கூறி விடைபெற்றுப் போனார்கள். சொந்த உடைமையைத் துறந்து போவது போன்ற துக்கம் அவர்களின் கண்களில்.

இரவு ஈ, காக்கைகூட அங்கில்லை என்ற தெளிவான நம்பிக்கையில், இத்தனை நாள் அடக்கி வைத்திருந்த துக்கமெல்லாம் பீறிட்டெழ, நெஞ்சிலடித்து அம்மா கதறத் தொடங்கிவிட்டா. 'நாசமாய்ப் போவான்கள். என்ரை பிள்ளையையுமெல்லோ நாசமாக்கிப் போட்டுப் போறான்கள். மகனே... நானினி உன்னை எங்கை போய்த் தேட. எப்பவடா இனி உன்னோட நான் பேச...' என்று பின்வளவில் குந்தியிருந்து அம்மா குமறிக்கொண்டேயிருந்தா. எனக்கு கண்களுக்குள் நீர் முட்டிக்கொண்டு வந்து விட்டது. ஆயினும் யாரும் யாரையும் அழ வேண்டாமென்று தடுக்கவில்லை.

# சவாலுக்கு முகம்கொடுக்கத் தயார்

## நம்பிக்கையுடன் மீளக்கட்டியெழுப்பப்படும் சுற்றுலாத்துறை



மைக்

சுரங்க

யுத்தத்தாலும் முறையற்ற நிர்வாகத்தாலும் பின்னடைவுகளைச் சந்தித்த பல நாடுகள் இன்று அபிவிருத்தியை நோக்கி வேகமாகப் பயணிக்கத்தொடங்கியிருக்கின்றன. இலங்கையும் அவ்வாறானதொரு யுகத்தில்தான் இன்று இருக்கின்றது. யுத்தம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் வீழ்ச்சியடைந்துள்ள எமது நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவேண்டியது அவசியமான ஒன்று என்பதை எவருமே மறுக்க முடியாது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு சுற்றுலாத்துறை பாரிய செல்வாக்கைச் செலுத்தி வருகின்றது. யுத்தத்தின் பின்னர் சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை பல மடங்கு அதிகரித்திருக்கின்றது. யுத்தத்திற்கு முற்றுப்புள்ளியும் மோதலற்ற அமைதியான சூழலுமே இந்த அதிகரிப்புக்கு காரணமாக அமைந்துள்ளது.

உலகின் நாலா பாகங்களிலும் உள்ள மக்கள் மகிழ்ச்சியையும் ஓய்வையும் தேடி இலங்கைக்கு வருகின்றனர். குறிப்பாக இந்தியா மற்றும் ஐரோப்பிய



நாடுகளைச் சேர்ந்தவர்களே அதிகமாக வருகை தருகின்றனர். சுற்றுலாத்துறையின் வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்காகவே பாதுகாப்புக் கெடுபிடிகள் தளர்த்தப்பட்டு பயணக் கெடுபிடிகள் நீக்கப்பட்டுள்ளன.

மோதிவரும் அலையில் கால்களை நனைத்தபடி தன் துணையுடன் கடற்காற்றை சுவாசித்துக்கொண்டிருந்தார் மைக் என்ற சுற்றுலாப் பிரயாணி. அவுஸ்திரேலியா மெல்பேர்னிலிருந்து வந்திருந்த அவர் தன் மகிழ்ச்சியை எம்முடன் பகிர்ந்துகொண்டார்.

'நாம் இலங்கையை நேசிக்கின்றோம். சிறந்த காலநிலை. மக்கள் மிகவும் நட்புடன் பழகுகிறார்கள். சுவையான உணவுகள். நாங்கள் மகிழ்ச்சியாக காலத்தைப் போக்குகிறோம்' என்றார்.

இலங்கையின் பொருளாதார புனர்நிர்மாணத்திற்கு சுற்றுலாத்துறையின் பங்களிப்பு பலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது அதற்கு நம்பிக்கை தரும் அறிகுறிகள் தென்படுகின்றன. 2010ஆம் ஆண்டு இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தி 8 வீத வளர்ச்சியைக் கண்டது. இதில் சுற்றுலாத்துறையின் பங்களிப்பு அளப்பரியதாகும். 2010இல் 6 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகின்றபோது 46 வீத வளர்ச்சியாகும். இவ்வளர்ச்சி மேலும் பன்மடங்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

◄ க.மாலா ►

இதற்காக அரசாங்கம் நீண்ட காலத்திட்டங்களை வகுத்துள்ளதோடு இவ்வருடத்திற்குள் 'இலங்கையைத் தரிசியுங்கள்'என்ற கருப்பொருளில் சுற்றுலாப் பயணிகளுக்கிடையே நிகழ்ச்சி ஒன்றையும் நடாத்த தயாராகின்றது. 2.5 மில்லியன் சுற்றுலாப்பயணிகளை 2016ஆம் ஆண்டுக்குள் இலங்கையைத் தரிசிக்கச் செய்வதற்கானஇலக்கினைப் பூர்த்திசெய்ய பாரிய முதலீடுகள் தேவைப்படுகின்றன. மேலும் 15 ஆயிரம் புதிய ஹோட்டல் அறைகளையும் அதற்குத் தேவையான பணியாளர்களையும் உருவாக்கவேண்டியுள்ளது.

இது இலங்கை சுற்றுலாத்துறை எதிர்கொண்டுள்ள பாரிய சவாலாகும். எனினும் இந்த சவாலுக்கு முகம் கொடுக்கத் தயாரென சுற்றலாத்துறை பொறுப்பதிகாரிகள் கூறுகின்றார்கள்.




'சுற்றுலாத்துறைக்கான எல்லா வளங்களும் எம்மிடம் உள்ளன. அரசாங்கம் இதற்கான சிறந்த திட்டங்களை முன்வைத்திருக்கின்றது. அரசாங்கம் பல ஹோட்டல்களை அமைப்பதற்கு அனுமதியை வழங்கியுள்ளது. அதனூடாக கணிசமான ஹோட்டல் அறைகளைப்பெற்றுக் கொள்ளலாம். உதாரணமாக சன்கிரிலா ஹோட்டல் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. 2013இல் அம்பாந்தோட்டையிலும் 2014இல் கொழும்பிலும் நிர்மாணிக்கப்பட இருக்கிறது. பயிற்றப்பட்ட



மனித வளத்தை உருவாக்குவதுதான் இதில் உள்ள பெரும் சிக்கலாகும். சுற்றுலாத்துறை என்பது மனித வளத்தினை அடிப்படையாகக் கொண்ட துறை என்று உங்களுக்கே தெரியும்' என்றார் சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சுரங்க த சில்வா.

அண்மைக் காலங்களில் சுற்றுலாத்துறை கண்டுள்ள இவ்வளர்ச்சியும் சுற்றுலாத்துறைக்கு மிகச் சிறந்த பிரதேசம் இலங்கை என்ற சர்வதேசக் கணிப்புக்களும் இலங்கையின் சுற்றலாத் துறையின் எதிர்காலம் பிரகாசமாக அமையும் எனக் கூறுகின்றது. இவை இலங்கையின் பொருளாதாரத்தை மீளக்கட்டி எழுப்ப மிகப்பெரிய அடித்தளமாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

என்றாலும் இப்பாரிய இலக்குகளை நோக்கி அரசாங்கத்தால் மாத்திரம் பயணிக்க முடியாது. தனியார் துறையும் இம்முயற்சியில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அப்படி ஒரு நிலை உருவாகுமாக இருந்தால் சுற்றுலாத்துறை ஒரு பாரிய முன்னேற்றத்தை அடையும் நாள் வெகு தொலைவில் இல்லை.



# எஸ்.பி.யின் வாகனம் ஏற்படுத்திய விபரீதம்

சூரியக் கதிர்கள் நாற்திசையிலும் தன் கதிர்களால் ஒளிபரப்பிக் கொண்டிருந்தன. ஆனால் லால் என்றழைக்கப்படும் ஏ.எ சுனில் உபாலி என்பவரின் வீடு மாத்திரம் இருள் சூழ்ந்து போய்க் காட்சியளித்தது. காரணம் அன்று லாலின் வீடு ஒரு மரண வீடு. தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மாவட்டப் பொறியியலாளராகப் பணிபுரிந்து வந்த 61 வயதுடைய லால் அப்பணியிலிருந்து ஓய்வு பெற்றிருந்தாலும் அவரது மனைவியான மஞ்சுளா குணசிங்க இன்னும் அவ் வடிகாலமைப்புச் சபையிலேயே பணியாற்றி வருகின்றார். லால் ஓய்வுபெற்றபின் தன் மனைவியை மோட்டார் வண்டியில் ஏற்றிச் சென்று பஸ்ஸில் ஏற்றிவிட்டு வருவார். இப்படி இருந்தவரின் வாழ்வு கடந்த மாதம் 30ஆம் திகதியுடன் முற்றுப்பெற்றது. அதுவும் வீதியிலேயே அவர் இறக்க நேரிட்டது பரிதாபமே.

'எமது லால் மாமா கடவுள் போன்றவர். ஒருமுறை தெருவில் சுற்றித்திரியும் நாயொன்று வாகனமொன்றில் மோதுண்டு உயிருக்காக போராடிக்கொண்டிருந்தது. அதனைக் கண்ட லால் மாமா அந்த நாயை வாகனமொன்றில் ஏற்றிச் சென்று அவரே பணம் செலவழித்துக் குணப்படுத்தினார். அப்படிப்பட்ட மனிதத் தன்மை நிறைந்த மனிதரொருவரை நாயைப் போல வீதியில் மோதிவிட்டு கவனிப்பாரற்ற நிலையில் விட்டுச் செல்கின்ற நாய்களையும் விடக் கேவலமான மனிதர்களும் இந்தச் சமூகத்தில் இருக்கின்றார்கள்' இது இறந்துபோன லாலின் சகோதரியின் மகனான சமித் கனேகல எம்மிடம் கூறியவை.

இந்த நாட்டில் வாகன விபத்துக்கள் நிகழ்வது சர்வ சாதாரண நிகழ்வாகும். யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியிலும் கூட இந்நாட்டில் அதிகளவிலான மக்கள் வீதி விபத்துக்களாலேயே இறந்தனர். அமைச்சர்களினதும் அரச உயர் அதிகாரிகளினதும் பாதுகாப்பு வாகனங்களின் அதிகரிப்பால் நாட்டில் அதிகளவிலான வாகன விபத்துக்கள் போருக்குப் பிந்திய சூழலில் இடம்பெற்று வருகின்றன. இது தற்பொழுது நாட்டில் நவீனரக வாகன விபத்தொன்றாக உருமாறியுள்ளது. அவ்வாறுதான் லாலும் ஒரு அமைச்சரது பாதுகாப்பு வாகனத்தின் வேகத்திற்குப் பலியாகியிருக்கிறார். லாலுக்கு ஏற்பட்ட விபரீதத்தினை நாம் சமித்திடமே கேட்டறிந்தோம்.



**புலன்விசாரணை**

'பொரளை கௌதமீ வீதியிலுள்ள கௌதமீ பிளேஸிலேயே மாமா வசித்து வந்தார். வழமை நாட்களைப் போன்றே ஒகஸ்ட் மாதம் 30 ஆம் திகதியும் காலை 7 மணியளவில் அத்தையையும் மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு வீட்டிலிருந்து புறப்பட்டுள்ளார். மாமா குறுக்கு வீதியிலேயே பயணித்துள்ளார். அவ்வீதி ரொட்ணி வீதியுடனேயே இணைகிறது. மாமா குறுக்கு வீதியிலிருந்து ரொட்ணி வீதிக்கு மோட்டார் சைக்கிளைச் செலுத்திய போது ரொட்ணி வீதியில் வலப்புறமாக வந்த வாகனமொன்று லால் மாமாவினையும் அத்தையையும் மோதிக் கொண்டு பறந்து சென்றது. வாகனம் பறந்து செல்வது சர்வ சாதாரணமாகும். ஆனாலும் இவ் விபத்தின்போது பறந்து சென்றிருப்பவர்கள் வழமையாகப் பறந்து செல்பவர்களாவர்'

'அவ்விபத்தில் மாமா இறந்துபோனார். அத்தை கடுமையான காயங்களுக்குட்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். காலை 8 மணியளவில் வைத்தியசாலையிலிருந்து கிடைத்த தகவலைத் தொடர்ந்து எமக்கு விடயம் தெரியவந்தது. யார் இவர்களை மோதிவிட்டுச் சென்றுள்ளார்கள், யார் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளார்கள் என்ற தகவல்கள் எதுவுமில்லை. விபத்து இடம்பெற்ற நேரத்தில் அதைப் பார்த்தவர்களும் மோதிய வாகனத்தைக் கண்டு மூச்சடைத்துப் போயுள்ளார்கள். மாமாவையும் அத்தையையும் வைத்தியசாலையில் கொண்டு வந்து சேர்த்தது ஒரு ஆட்டோ வண்டியில் என்று வைத்தியசாலைப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வேறு எந்தத் தகவல்களும் கிடைக்கவில்லை' என்று கூறினார்.

வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற வேளையில் லால் சுயநினைவை இழந்திருந்தார். செயற்கை சுவாசம் மூலம் உயிர்பெறச் செய்திருந்தாலும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை. தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் லாலின் மனைவியின் வலது கால் நான்கைந்து இடத்தில் உடைந்துள்ளது. வலது காலிலுள்ள இரண்டு விரல்கள் வெட்டி அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. உயிரற்றுப்போயுள்ள பாதத்தினை சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தவேண்டி இருப்பதாகவும் சிலவேளைகளில் அவரது காலை வெட்டி அப்புறப்படுத்த வேண்டி ஏற்படும் என்றும் அதற்காக அவர்கள் குடும்பத்தின் உதவியை வேண்டியுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. லால் தற்பொழுது உயிருடன் இல்லை. 58 வயதுடைய அவரது மனைவியும் இனி ஒரே இடத்தில் இருக்கவேண்டிய நிலை ஏற்படும். ஆனாலும் இதுபோன்றதொரு அனர்த்தத்தை ஏற்படுத்தியவர்களுக்கு இது போன்ற விபத்துக்கள் சர்வ சாதாரணமான விளையாட்டுக்களாக மாறியுள்ளன.

இறந்த லாலுக்கு திருமணமான ஒரு மகளும் இருக்கின்றாள். அவளது கணவன் ஒரு உயர் இராணுவ அதிகாரி என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கே இப்படி என்றால் சிறுபான்மையினரான எம் நிலையை சொல்லவா வேண்டும்?

சமித் எம்மிடம் தொடர்ந்து கூறும் போது 'விலையுயர்ந்த சொகுசு வாகனமொன்று எம்மை வேகமாக வந்து மோதிவிட்டுச் சென்றதாகத் தனக்கு ஞாபகம் இருப்பதாக் எனது அத்தை வைத்தியசாலையில் வைத்துக் கூறினார். அத்தை கூறிய தகவல்களின்படி பார்த்தால் மோதிய வாகனம் உயரதிகாரியொருவரின் வாகனம். குறித்த வாகனத்துக்குள் பொலிஸ் அதிகாரிகளும் இருந்துள்ளார்கள். நாம் தேட ஆரம்பித்தது அவ்விடத்தில் இருந்துதான். இவ்வளவு பெரிய அனர்த்தம் ஒன்று இடம்பெற்றும் பொலிஸாருக்கு அவ்விடத்திற்குச் சென்று தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மறுப்பதென்றால் இந்த வாகனம் சாதாரண வாகனமல்ல. நாம் பொரளை பொலிஸ் நிலைய போக்குவரத்துக்குப் பொறுப்பான O.I.C யினை எமது வாகனத்தில் ஏற்றிச்சென்று சம்பவம் இடம்பெற்ற இடத்தைக் காட்டினோம். இந்தப்பகுதியில் இருக்கின்ற ஒரேயொரு அமைச்சர் தொண்டமான் மட்டுமாவார். நாம் அவரது வீட்டுக்குச் சென்றோம். அங்கு போய்ப் பார்த்தால் அவர் பல நாட்களாக அங்கு வந்திருக்கவேயில்லை. அவர் கண்டியிலேயே உள்ளார். அப்படியென்றால் இது யாருடைய வாகனம் என்று குழப்பமாக இருந்தது' என்றார்.

லால் சமூகத்தில் உயர் மட்டத்தில் இருந்து வருபவர். இராணுவ உயரதிகாரியான லாலின் மருமகன்கூட தன்னுடைய மாமாவினை அடையாளம் தெரியாத ஒரு வாகனம் மோதிவிட்டுச் சென்றுள்ளதாகவே கூறியிருக்கின்றார். விபத்தில் இறந்தவர் சாதாரணமானதொரு குடும்பத்தைச் சேர்ந்தவர் அல்லர் என்பதனாலும் சம்பவத்தை மூடி மறைக்க தருணம் கிடைக்காத காரணத்தாலும்



## சொகுசு வாகன...

## அப்பாவி மக்களின் ... யார் உத்தரவா...



விபத்தை ஏற்படுத்தியவர்கள் பொலிஸில் சரணடைந்தார்கள். குறித்த 'லேண்ட் குரூஸர்' வாகனம் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்காவுக்குச் சொந்தமான வாகனம் என்று முடிவாகியது. உயர் அமைச்சர்களினதும் அதிகாரிகளினதும் மோட்டார் வாகனங்களுக்குப் பாதுகாப்பு வழங்கவென புடைசூழ்ந்து வரும் 'டிபெண்டர்' மற்றும் 'லேண்ட்ஸ் குரூஸர்' வாகனங்களின் வேகத்தில் மோதுண்டு இறந்த முதலாவது மனிதர் லால் மட்டுமல்ல . இதற்கு முன்னரும் மின்சாரம் மற்றும் எரிசக்திப் பிரதி அமைச்சர் பிரேமலால் ஜயசேகர, பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்கா, முன்னாள் பொலிஸ்மா அதிபரின் மனைவி மற்றும் ஜனாதிபதியின் மனைவி போன்ற உயர் அதிகாரிகள் பயணித்த வாகனங்களும் இது போன்ற உயிர்களைக் காவு கொண்டுள்ளன. ஆனாலும் இறுதிக்கட்டத்தில் குறித்த விபத்துக்களில்



லால்

**குறுக்கு வீதியிலிருந்து ரொட்ணி வீதிக்கு மோட்டார் சைக்கிளைச் செலுத்தியபோது வலப்புறமாக வந்த வாகனமொன்று லால் மாமாவினையும் அத்தையையும் மோதிக்கொண்டு பறந்தது**

# கனங்களால் பலியாகும் ளின் உயிருக்கு ரவாதம்?

கொல்லப்பட்டவர்களுக்காக எவ்வித நீதியும் நிறைவேற்றப்படவில்லை. தவிரவும் இதற்குப் பின்னரும் இது போன்ற விபத்துச் சம்பவங்கள் இடம்பெறாமல் இருக்க எவ்வித நடவடிக்கையும் மேற்கொண்டபாடுமில்லை. அப்படியென்றால் உயர் அதிகாரிகளுக்கும் அமைச்சர்களுக்கும் அப்பாவி மனிதர்களை மோதிக் கொண்டு செல்வதற்கான அனுமதிப் பத்திரமொன்று வழங்கப்பட்டுள்ளதா என்றுதான் கேட்கவேண்டியுள்ளது.

'நாடு தற்பொழுது தரித்திரம் பிடித்த நாடாக மாறியுள்ளது. எந்தவொரு சட்டமுமில்லை. நாம் இப்படிக் கூறினால் எங்களுக்கு ஏதாவது பிரச்சினை ஏற்படலாம். ஆனாலும் கூறவேண்டியதைக் கூறாமல் இருக்க முடியாது. திரும்பவும் எமது மாமா எமக்குக் கிடைக்கப் போவதில்லை. ஆனால் இன்றளவும் மாமாவை மோதிச் சென்றவர்களும் சரி அதன் சொந்தக்காரர்களும் சரி எம்மை வந்து பார்த்துவிட்டு செல்ல வில்லை. இதனை எஸ்.பி.திஸாநாயக்க அல்ல, ஜனாதிபதி செய்திருந்தாலும் தப்புத் தப்புத்தான். எம்க்கிருந்த ஒரு சில பலங்களின் துணையுடன் மோதிவிட்டுச் சென்றவர்கள் யார் என்பதைத் தேடிக் கண்டு பிடித்தோம். ஆனால், அவ்வனர்த்தம் சாதாரணதொரு நபருக்கு நேர்ந்திருந்தால் யார்மோதிச் சென்றார்கள் என்பதை யாராலும் கண்டு பிடித்திருக்க முடியாது. இதுபோன்ற அனர்த்தங்கள் ஏற்படாதிருக்க ஜனாதிபதியாவது தலையிட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இவைகள் அனர்த்தமல்ல, 'கொலைகள்' என்ற சமித்தின்ஆக்ரோஷத்திற்கு எல்லையிருக்கவில்லை.

தனது கணவரின் உடலைப் பார்க்க வருவதற்குக்கூட முடியாத நிலையில்

**'லால் கடந்த மாதம் 30 ஆம் திகதி காலை 7 மணியளவில் மோதுண்டு அன்றைய தினமே பகல் 1 மணியளவில் இறந்துள்ளார். 31 ஆம் திகதி நண்பகல் எஸ்.பி.திசாநாயக்கவுக்கு அழைப்பெடுத்தபோது லால் இறந்தது பற்றி தனக்குத் தெரியாது என்று கூறியுள்ளார்'**

லாலின் மனைவி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். சமூகத்தில் உள்ள சாதாரணமான ஒரு மனிதருக்கும் கீழ்மட்ட நபரொருவருக்கும் குறித்த அனர்த்தம் நேர்ந்திருந்தால் அது வெறுமனே ஒரு புராணமாக மாத்திரம் இருந்திருக்கும். அவ்வனர்த்தத்தைக் கண்ட சாட்சியாளர்களும் அதுகுறித்து கூற முன்வர மாட்டார்கள்.

இதற்கு சிறந்ததொரு உதாரணமாக ரத்னசிறியின் கதையைக் குறிப்பிடலாம். கடந்த ஜூலை மாதம் 14ஆம் திகதி பேருவளை மொரகொல்லையில் அமைந்துள்ள Tropical vila சுற்றுலா ஹோட்டலுக்கு முன்னால் வேகமாகப் பறந்து கொண்டிருந்த அதிசொகுசு வாகனத் தொடரணியில் சென்ற ஒரு வாகனம் மிதிவண்டியொன்றில் மோதுண்டது. அதிவேகத்துடன் வந்த வாகனத்திற்கு மிதிவண்டியில் பயணித்துக் கொண்டிருந்தவரின் தலை சுக்குநூறாகியது. அன்றைய தினத்தில் தன் உயிரைப் பறிகொடுத்தவர் ரத்னசிறி சில்வா என்ற சாதாரண பொதுமகன். அவரது தலையை நொறுக்கிச் சென்றது KA 9276 எனும் இலக்கத்தையுடைய கறுப்பு நிறமுடைய அதிசொகுசு மிக்க வாகனமாகும். அன்றைய தினம் குறித்த வாகனத் தொடரணி ஜனாதிபதியின் மனைவியின் பயணத்திற்கு பாதுகாப்பு




வழங்கிச் சென்றது. ஆனால் விசயம் எப்படி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது என்று தெரியுமா? ரத்னசிறி ஒரு குடிகாரன், குடித்துவிட்டு மிதிவண்டியில் சென்றதாலேயே அவ் விபத்து நேர்ந்தது என்று கூறப்பட்டது. குறித்த சம்பவம் இடம்பெற்று ஓரிரு மாதங்களும் உருண்டோடிய நிலையில் சம்பவம் குறித்த எவ்வித ஞாபகச் சுவடுகளும் ஆதாரங்களும் இல்லாமல் அனைத்தும் மண்ணாகிப் போயுள்ளன.

இங்கு மோதிவிட்டு தப்பிச் செல்கின்றவர்கள் குற்றவாளிகளாக நோக்கப்படுவதில்லை. மாறாக மோதுண்டு இறந்தவர்கள் மீதே பழிபோடப்படுகின்றது. இதுதான் தற்பொழுது யுத்தம் இல்லாத ஒரு நாட்டின் பாதுகாப்பு இலட்சணமாகும். மக்களது சொத்துக்களை உண்டு அசைபோடுகின்றவர்களுக்குப் பாதுகாப்பும் வேறாகத் தேவைப்படுகின்றன. இதனாலேயே இவர்கள் காற்றையும்விட வேகத்தில் பாதுகாப்பு வாகனத்தில் பறந்து செல்கின்றார்கள். இவர்கள் வீதியில் பறக்கும் பொழுது அங்கு ஒரு ஈ கூட இருக்க முடியாது.

லால் கடந்த மாதம் 30 ஆம் திகதி காலை 7 மணியளவில் மோதுண்டு அன்றைய தினமே பகல் 1 மணியளவில் இறந்துள்ளார். 31ஆம் தகதி நண்பகல் எஸ்.பி.திசாநாயக்கவுக்கு அழைப்பெ டுத்தபோது, லால் இறந்தது பற்றி தனக்குத் தெரியாது என்று கூறியுள்ளார்.

'எனது மகனை விமான நிலையத்திலிருந்து கூட்டிவரச் சென்ற போதுதான் அந்தச் சம்பவம் இடம்பெற்றிருந்தது. இடம்பெற்ற சம்பவம் பற்றி அந்த வாகனத்தில் இருந்தவர்கள் எனக்கு அறிவித்ததும் உடனே பார்க்கும்படி கூறினேன். அவர்கள்தான் மோதுண்ட நபரை (லால்) வான் ஒன்றிலும் அவரது மனைவியை ஓட்டோவிலும் ஏற்றிச் சென்றுள்ளார்கள். பின் பொரளை பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பு அதிகாரிகள் சரணடைந்துள்ளார்கள்.

தற்பொழுது குறித்த வாகனமும் பாதுகாப்பு அதிகாரிகளும் பொரளை பொலிஸ் நிலையத்தில் உள்ளார்கள். வாகனத்தில் மோதுண்டவர் இறந்துள்ளார் என்று நீங்கள் தற்பொழுது கூறும் வரையில் எனக்குத் தெரியாது. நான் தற்பொழுது கண்டியில் ஒரு மரண வீட்டில் உள்ளேன். நான் உடனடியாகச் சம்பவம் பற்றித் தேடிப் பார்க்கின்றேன். இவ்விடத்தில் இடம்பெற்றிருப்பது என்னவென்றால் அவர்கள் குறுக்கு வீதியொன்றில் இருந்து திடீரென்று எமது வாகனத்தின் நடுவில் மோட்டார் சைக்கிளைப் போட்டுள்ளார்கள். நான் நினைத்தேன் இது ஒரு சிறு அனர்த்தம் என்று. இது தொடர்பில் பொலிஸார் உரிய நடவடிக்கைகள் எடுப்பார்கள்' என்று கூறியுள்ளார்.

ஆனால், மோதுண்டவர்கள் ஒரு ஓட்டோவில் ஏற்றிச்செல்லப்பட்டே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் வந்தவர்கள் பற்றிய எந்தத் தகவலும் பதிவாகியில்லை என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பொலிஸில் சரணடையத் துணிந்தவர்கள் வைத்தியசாலையில் தங்கள் பெயரை பதிவு செய்திருக்கலாமே? ஆகவே அவர்களை கொண்டு சேர்த்தவர்கள் பாதுகாப்பு அதிகாரிகள் தானா என்று சந்தேகம் ஏற்படுகின்றது. லாலின் குடும்பத்தாரும் இக்கேள்வியையே எழுப்புகின்றனர். லால் மற்றும் அவரது மனைவி காலை 7.45 மணியளவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். ஆனால், பாதுகாப்பு அதிகாரிகள் பொலிஸில் சரணடைந்ததோ 10 மணிக்கு. ஆகவே மொத்தத்தில் இந்தச் சம்பவமும் மூடி மறைக்க எத்தணிக்கப்பட்டுள்ளது. லாலின் குடும்பத்தவர்கள் சற்று செல்வாக்கு மிகுந்தவர்கள் என்பதால் விசயம் மெதுவாக வெளிச்சத்திற்கு வந்துவிட்டது.

இதன் பின்னராவது உயரதிகாரிகளது பாதுகாப்புப் பயணம் மக்கள் வாழ்க்கைக்கு இடைஞ்சல் இல்லாமல் மாற்றியமைக்கப்பட வேண்டும். ஜனாதிபதி உடனடியாகத் தலையிட்டு இவர்களது வேகத்திற்கு எல்லையிட வேண்டும். அன்றேல் இவர்களது சொகுசுப் பயணத்திற்குப் பலியாகும் அப்பாவிகளின் மரணம் தொடர்ந்து கொண்டுதானிருக்கும்.

நன்றி: ராவய


**- ஹெட்டி ரம்ஸி**

# கிட்டார் இசையை உருவாக்குவோம்

ஒன்லைன் மூலம் இசையை கேட்கத்தான் முடியும் என்றில்லை. இனி நமக்குப் பிடித்த இசையை உருவாக்கவும் வழி இருக்கின்றது. கணனி வந்த பிறகு பல்வேறு இசைக்கருவிகளுக்கு வேலை இல்லாமல் போய்விட்டது என்றுதான் கூற வேண்டும். இப்போது எந்த மென்பொருளின் உதவியுமின்றி எப்படி கிட்டார் இசையை உருவாக்கலாம் என்று பார்ப்போம்.

இணையத்தள முகவரி: http://mydoodlesongs.com

இத்தளத்திற்குச் சென்று படம் 1இல் காட்டியபடி வரும் கிட்டார் இசைக் கருவியில் Mouse மற்றும் Keyboard துணை கொண்டு இசையமைக்கலாம். ஏற்கனவே நம்மைப் போன்ற பலர் இங்கு இசையமைத்துள்ளனர். அதைப்பார்க்க Search என்ற கட்டத்திற்குள் நமக்கு பிடித்ததைக் கொடுத்து தேடலாம். தேடல் முடிவில் வரும் இசையுடன் நோட்ஸ் சேர்ந்தே வருகிறது. எந்தெந்த பொத்தானை அழுத்தி இந்த இசையை உருவாக்கியுள்ளனர் என்பதை அனைவரும் தெரிந்து கொள்ளலாம். கிட்டாரின் மேல் Mouse ஐக் கொண்டு சென்றும் இசை மீட்டலாம்.




# எளிதாக பாடம் நடத்துவதற்கு


பாடசாலையிலோ அல்லது வேறு வகுப்புகளிலோ கடினமான பாடநெறி கற்பிக்கப்படும்போது மாணவர்கள்தூங்கி வழிவது வழமை. இப்போது ஆசிரியர்களுக்கு ஒரு புது வழிமுறை வந்துவிட்டது. ஒரு கடினமான பாடத்தை எப்படி நடத்தினால் மாணவர்கள் எளிதாக புரிந்து கொள்வார்கள் என்பதில் தொடங்கி worksheet எப்படி உரு வாக்க வேண்டும் என்பது வரை அனைத்து விதமான ஐடியாக்களையும் நமக்கு அளிப்பதற்காக ஒரு பயனுள்ள தளம் உள்ளது.

இணையத்தள முகவரி : http://atozteacherstuff.com


A to Z Teacher Stuff

இது தான் இணையத்தளத்தின் பெயர். ஆசிரியர்களுக்கு எப்படி அவர்களின் அறிவை மேலும் பட்டை தீட்டலாம் என்று சொல்லும் இத்தளத்திற்குச் சென்று நாம் Word Shapes Worksheet Generator > Word Search Maker > Handwriting Worksheet Generator > Leveled Books Database> Science Experiments Teacher Tools >Teacher Tips > Lesson Plans > Printables & Worksheets

என அனைத்தும் பயன்படுத்தலாம். தேவையான பிரிண்ட் செய்தபேப்பரை தரவிறக்கம் செய்யலாம். ஆசிரியர்களுக்கு பாடத்தில் எழும் சந்தேகங்களுக்கு விடை அளிக்க பல திறமையான ஆசிரியர்கள் உள்ளனர். ஒவ்வொரு நாளையும் எவ்வாறு திட்டமிட்டு பாடம் நடத்த வேண்டும். பாடத்தில் உள்ள முக்கியமானவற்றை மாணவர்கள் மனதில் பதியும்படி சொல்ல என்னென்ன நுணுக்கங்கள் எல்லாம் உள்ளன என்பதை அழகாக பட்டியலிட்டுச் சொல்கிறது இத்தளம்.




# வருங்கால பத்திரிகையாளர்களுக்கு




பேனா வாங்கி எழுதும் முன்பு முதலில் ஐந்தாறு பேப்பரிலாவது கிறுக்கி பார்த்து நன்றாக எழுதுகிறதா என்று சோதித்த பின்புதான் நாம் எழுத ஆரம்பிப்போம். நாம் எழுதும் கட்டுரைகள் உடனடியாக பிரசுரத்திற்கு செல்வதில்லை. நன்றாக எழுதிப் பழகி எம் எழுத்தில் ஒரு தேர்ச்சி காணப்படும் பட்சத்தில் நம் கட்டுரைகள் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படும். தற்போது செய்திகளையும் கட்டுரைகளையும் எழுதிப்பழக, அவற்றை இலவசமாக வெளியிட்டுப் பார்க்க ஒரு தளம் உள்ளது. இது ஆங்கிலத்தில் எழுதிப்பழகுவதற்கான வாய்ப்பு என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இணையத்தள முகவரி : http://scriffon.com புதிதாக இத்தளத்திற்குள் படம் 1இல் காட்டியபடி Start Writing என்ற பொத்தானை சொடுக்கி வரும் திரையில் நம் ஈமெயில் முகவரியும் ஏதாவது ஒரு பாஸ்வேர்டும் (ஈமெயில் பாஸ்வேர்ட் கொடுக்க வேண்டாம்) கொடுத்து நுழைபவர்கள் அடுத்து வரும் திரையில் ஏற்கனவே இந்தஈமெயில் முகவரியில் 'கணக்குஏதும் இல்லை, அதனால் புதிதாக கணக்கு உருவாக்க உங்கள் கடவுச் சொல்லை கொடுத்து உள்நுழையுங்கள்' என்று சொல்லும். அதில் ஏதாவது ஒரு கடவுச் சொல்லைக் கொடுத்து Create My New Account என்ற பொத்தானை சொடுக்கி உள்நுழையலாம். அடுத்து வரும் திரையில் உங்கள் செல்லப்பெயர் அல்லது புனைப்பெயர் கொடுத்து Continue என்ற பொத்தானை சொடுக்கலாம். New Writing என்பதை சொடுக்கி கட்டுரை அல்லது செய்திகளை எழுதலாம். எழுதிப்பழக ஒரு மேடை கிடைத்தாகிவிட்டது. இனி என்ன, நன்றாக எழுதிப்பழகிய பின் பிரபல பத்திரிகை அல்லது நமக்கென்று ஒரு வலைப்பூ உருவாக்கி நம் எண்ணத்தை வெளி உலகிற்குக் காட்டலாம். புதுமை விரும்பிகளுக்கும் பத்திரிகையாளராக செல்ல வேண்டும் என்ற ஆசை உள்ள அனைவருக்கும் இது உதவியாக இருக்கும். முயற்சித்துப் பாருங்கள்.

# இணைய அகராதி

இணையத்தில் பல வகையான அகராதிகள் காணப்பட்டாலும் வோர்டியா எனும் அகராதி சொற்களுக்கான விளக்கத்தைத் தருவதோடு அதற்கான வீடியோ விளக்கத்தையும் தருகின்றது. அத்தோடு நீங்கள்கூட சொற்களுக்கான வீடியோ விளக்கத்தை சமர்ப்பிக்கலாம்.

இணையவாசிகள் தங்களைக் கவர்ந்த சொல்லுக்கானவீடியோவிளக்கத்தை இந்தத் தளத்தில் சமர்ப்பிக்கலாம். இணையவாசிகள் சமர்ப்பிக்கும் வார்த்தை விளக்க வீடியோக்கள்முகப்பு பக்கத்திலேயே அவர்களது புகைப்படங்களோடு வரிசையாக இடம்பெறுகின்றன. அவற்றில்கிளிக் செய்தால் விளக்கத்தைக் கேட்கலாம்.சமீபத்தில் சமர்ப்பிக்கப்பட்டவை முதலில் இடம் பெறுகின்றன. ஏனையவற்றைத் தேடிப் பார்க்கலாம்.


எந்த வார்த்தைக்கான பொருள் தேடினாலும் அதற்கான அகராதி அர்த்தம் வந்து நிற்கிறது. அந்த சொல்லின் பயன்பாடு போன்ற விவரங்களும் கொடுக்கப்படுகிறது. அந்த சொல்லை யாராவது வீடியோ மூலம் விளக்கியிருந்தால் அதற்கான வீடியோ விளக்கத்தையும் காணலாம். இல்லையென்றால் நீங்கள்கூட விளக்கத்தை சமர்ப்பிக்கலாம். இது அகராதிகளின் புதிய பரிமாணம் என்றும் சொல்லலாம்.

இணையவாசிகள் சமர்ப்பிக்கும் விளக்கம் தவிர துறைசார்ந்த நிபுணர்களின் விளக்கங்களும் சேர்க்கப்பட்டு வருகின்றன. சமீபத்தில் பள்ளி மாணவர்களுக்கான புதிய பகுதியும் உருவாக்கப்பட்டுள்ளது. இப்போதைக்கு ஆங்கிலமொழி சொற்களே இடம்பெற்றுள்ளன. விரைவில் மற்ற மொழிகளையும் இணைக்கும் திட்டம் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


http://www.wordia.com/



# உதவி செய்தவருக்கு துரோகம் சுமணாவதி வெட்டிக் கொலை


சுமணாவதி

இற்றைக்கு எட்டு மாதங்களுக்கு முன்னர் 2010.12.16 ஆம் திகதி எருவல்ல முச்சந்திக்கு அருகாமையில் உள்ள வீடொன்றில் வசித்து வந்த 71 வயதுடைய எம்.ஜி. சுமணாவதி எனும் பெயருடைய 5 பிள்ளைகளின் தாயார் மிகவும் குரூரமான முறையில் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருந்தார். இவ்வளவு காலமும் நீடித்த மர்மமாக இருந்து வந்த அவரது கொலை பற்றிய தகவல்கள் அண்மையிலேயே வெளிச்சத்திற்கு வர ஆரம்பித்தன. அவளது வீட்டில் வேலை பார்த்து வந்த வேலைக்காரர் திடீரென்று காணாமல் போயிருந்தார். அவர் கடந்த 8ஆம் திகதி வெல்லவாயப் பிரதேசத்திலுள்ள விகாரையொன்றில் ஒளிந்து கொண்டிருந்தபோது தம்புள்ளை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார். அவர் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் கொலைக்கான காரணங்கள் வெளிப்பட ஆரம்பித்தன.


சந்தேக நபர்

42 வயதுடைய ஒரு குழந்தையின் தந்தையான ஆரியரத்ன, ஹீல்ஓயா பேரகஸ்பெல பிரதேசத்தில் வசித்து வந்தார். இவரது மனைவி வேறொருவருடன் காதல் வயப்பட்டு வீட்டை விட்டு ஓடிவிட்டாள். இதனால் மன உளைச்சலுக்குள்ளான ஆரியரத்ன மகியங்கனைப் பிரதேசத்திலிருந்த தன்னுடைய வீட்டைக் கைவிட்டுவிட்டு தொழில் ஒன்றைத் தேடித் திரிந்தார். கண்டலமைப் பிரதேசத்தில் இருந்த தேநீர்க் கடையொன்றில் தேநீர் அருந்திவிட்டு பணம் செலுத்தாத காரணத்தினால் கடைக்காரர் ஆரியரத்னவை நன்றாகத் திட்டித் தீர்த்துள்ளார். இதனைக் கண்ணுற்ற சுரேஷ் ஷிரன்த என்ற சமுர்த்தி அதிகாரியொருவர் ஆரியரத்னவிடம் வந்து அவரது நிலையைக் கேட்டறிந்தார். பின் கடைக்காரருக்கு தேநீருக்கான பணத்தையும் செலுத்திவிட்டு தன் வீட்டில் வேலை தருவதாகக் கூறி ஆரியரத்னவை அழைத்துச் சென்றார். ஆரியரத்னவுக்கு அவ்வதிகாரியின் வீட்டில் வெவ்வேறுபட்ட வேலைகள் வழங்கப்பட்டிருந்தன.


காலங்கள் பல உருண்டோடின. ஆரியரத்னவுக்கு தேவையேற்பட்ட போதெல்லாம் சமுர்த்தி அதிகாரியான சுரேஷ் ஷிரன்த பணம் வழங்கியும் வந்துள்ளார். ஒருநாள் ஆரியரத்ன தனது ஊருக்குச் சென்று விட்டு திரும்பி வந்து கொண்டிருந்ததை வீதியில் வாகனமொன்றில் பயணித்துக்கொண்டிருந்த சுரேஷ் கண்டுமுள்ளார். இதனால் ஆரியரத்ன தன்னுடைய வீட்டுக்குத்தான் செல்கிறார் என்று சுரேஷ் நினைத்துக்கொண்டார். ஆரியரத்ன தனது வீட்டுக்குச் செல்வதில் சுரேஷுக்கு எவ்விதச் சந்தேகங்களும் ஏற்படவில்லை. ஆரியரத்ன திரும்பி வந்த வேளையில் சுரேஷ் ஷிரன்தவின் வீட்டில் அவரது தாயார் மாத்திரமே இருந்துள்ளார். குடிபோதையில் இருந்த சந்தேக நபரான ஆரியரத்னவுக்கும் சுரேஷின் தயாருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இவர்களது வாக்குவாதம் முற்றி இறுதியில் ஆரியரத்ன கூரிய ஆயுதமொன்றினால் சுரேஷின் தாயாரை மிகவும் குரூரமான முறையில் குத்திக் கொலை செய்துவிட்டு வீட்டில் இருந்த பணப்பை ஒன்றையும் திருடிக்கொண்டு தப்பிச் சென்றுள்ளார். தப்பியோடி வந்த ஆரியரத்ன முதலில் தம்புள்ள பிரதேசத்திற்கு வந்துள்ளார். பின் தனது சொந்த ஊரான மகியங் கனைக்குச் சென்றுள்ளார்.

. வீட்டுக்கு வந்த சுரேஷ் ஷிரன்த தன் தாய் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடப்பது கண்டு அதிர்ச்சியடைந்தார். தாயே தன் உலகம் என்று வாழ்ந்த சுரேஷ் அழுதழுது சுயநினைவற்று வீழ்ந்தார். பின் குறித்த சம்பவத்தினை பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்தார். உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் கொலைகாரரைத் தேடிச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்தனர். சம்பவம் இடம்பெற்று முடிந்திருந்த அவ் வேளையில் வீட்டில் வேலைபார்த்துக் கொண்டிருந்த ஆரியரத்னவும் தப்பிச் சென்றிருந்தார். வீட்டை சோதனைக்குட்படுத்திய பொலிஸாருக்கு வீட்டிலிருந்த பணப்பை காணாமல் போயிருப்பது சுரேஷ் கூறிய தகவல் மூலம் தெரியவந்தது. உடனடியாகத் தேடுதல் நடவடிக்கைகளையும் விசாரணைகளையும் பொலிஸார் பரவலாக மேற்கொள்ள ஆரம்பித்தனர். சந்தேக நபரான ஆரியரத்ன தொடர்பில் எப்போதும் விழிப்பாக இருந்து வந்த பொலிஸார் சந்தேக நபர் மகியங்கனையிலிருந்து கொழும்புக்குச் சென்று அங்கு பல நாட்கள் இருந்துவிட்டு பின் வெல்லவாய பிரதேசத்திற்குச் சென்றிருப்பதனை அறிந்து கொண்டனர். சில காலம் மௌனம் காத்து வந்த பொலிஸார் சந்தேக நபர் போகின்ற வருகின்ற இடங்களையெல்லாம் மிகவும் இரகசியமான முறையில் தேடியறிய முற்பட்டனர்.

இதற்கிடையில்தன்னுடையமனைவியிடமிருந்து பிரிந்திருந்த சந்தேக நபர் ஊவா பரணகமை, மஸ்பன்ன கிராமத்தில் ஒரு பெண்ணுடன் உறவு வைத்திருந்தமை தெரிய வந்தது. சந்தேகநபர் தான் குடிபோதையில் இருந்த வேளைகளில் தனது கடந்தகாலச் செயற்பாடுகளை தனது தோழர்களுக்கு அடிக்கடிச் சொல்லியுமுள்ளார். சந்தேக நபர் போதையில் கூறிய தகவல்கள் அவரைச் சட்டத்தின் பிடியில் கொண்டு செல்வதற்கு ஏதுவாய் அமைந்தன. சில தினங்களின் பின்னர் ஆரியரத்ன வெல்லவாயப் பிரதேசத்தில் உள்ள மல் அத்தாவ விகாரைக்குச் சென்று அங்குள்ளவர்களுக்குப் பணிவிடை செய்துகொண்டு எச்.எம். நிசான்த பண்டார எனும் பெயரை வைத்துக்கொண்டு அவ்விகாரையிலேயே தங்கிவிட்டார். அவ்விகாரையில் இருந்த காலப்பகுதியில் தன்னை ஒரு துறவியாக்கிக் கொள்ளும்படி விகாரைக்குப் பொறுப்பான துறவியிடம் சந்தேகநபர் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஒரு எழுத்தைக்கூட எழுத வாசிக்கத் தெரியாத குறித்த சந்தேக நபரை துறவியாக்கிக் கொள்வதற்கு பெரிய துறவி விருப்பப்பட்டிருக்கவில்லை. அதன் பின்னர் விகாரைக்குச் சொந்தமான காணியொன்றைக் கண்காணிப்பதற்கு பெரிய துறவி இவரை அங்கு தக்க வைத்துக் கொண்டுள்ளார். சந்தேக நபர் காணியைக் கண்காணித்துக் கொண்டிருந்த காலப்பகுதியில் மிகவும் பெறுமதி வாய்ந்த கையடக்கத் தொலைபேசியை பாவித்து வந்துள்ளதாக பொலிஸ் பரிசோதனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பல சிம் கார்ட்டுகளை மாற்றிப் பாவித்து வந்துள்ளமையும் தெரிய வந்துள்ளது.

பல மாதக்கணக்காக அமைதி காத்த பொலிஸார் சந்தேக நபர் குறித்த அனைத்துத் தகவல்களையும் சேகரித்துக் கொண்ட பின்பே கொலைகாரனைத் தேடும் படலத்தை ஆரம்பித்தனர். இதற்காக மாத்தறை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி திலக் அபேசிறிவர்தன மற்றும் தம்புள்ளை பிரதேச பிரதிப் பொலிஸ் அதிகாரி பி.கே.ஞானசிறி போன்றவர்களது ஆலோசனைகளும் தம்புள்ளைப் பொலிஸ் நிலையத்திற்குக் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் உடனடியாகச் செயற்பட்ட தம்புள்ளை பொலிஸ் மத்திய நிலைய பொலிஸ் பரிசோதகர் சி.பி.எம்.சி. வீரசேகர தன் தலைமையிலான ஒரு பலமான பொலிஸ் குழுவொன்றை அமைத்து சந்தேக நபரைப் பிடிக்கும் முயற்சியில் இறங்கினார்.

இறுதியில் சந்தேகநபர் ஒளிந்திருந்த பிரதேசத்திற்குச் சென்ற பொலிஸ் அதிகாரிகளுக்கு வெல்லவாய பிரதேசசபைச் செயலாளரது ஒத்துழைப்பும் இந்த நடவடிக்கைக்காக கிடைத்திருந்தது. பின் சந்தேகநபர் ஒளிந்திருந்த விகாரைக்குச் சென்று கையோடு பிடித்தனர். ஆரம்பத்தில் தான் நிரபராதி என்று வாதாடிய சந்தேகநபர் பின் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டார். தம்புள்ளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட ஆரியரத்ன தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.


சுரேஷ் ஷிரன்த
இறந்த பெண்ணின் மகன்

இவ்வளவு சிரமப்பட்டு குற்றவாளியைப் பிடித்து சிறையில் அடைத்துவிட்டனர். ஆனால், சுரேஷிற்கு தன் அன்புத் தாய் இல்லாமல் போய்விட்டார். தன்மீது பரிதாபப்பட்டு வீட்டுக்கு கூட்டிவந்து வேலையும் கொடுத்து, தங்க இடமும் கொடுத்து, தேவையேற்படும்போது பணமும் கொடுத்த ஒரு நல்ல மனிதனுக்கு ஆரியரத்ன செய்தது மன்னிக்க முடியாத பாவமாகும்.

தற்போதைய காலத்தில் யாரையும் எதற்காகவும் அவசரப்பட்டு நம்பவும் கூடாது. உதவவும் கூடாது. காரணம் அவர்களது சுயரூபம் வெளிப்பட சிறிதுகாலம் செல்லும். ஆகவே அறிமுகமில்லாதவர்களை தங்கள் வீட்டுக்கு அழைத்துச்செல்வதாக இருந்தாலும் சரி அவர்களுடன் பழகுவதாக இருந்தாலும் சரி அவர்களைப் பற்றி நன்கு ஆராய்ந்து அவர்களின் உண்மைத்தன்மையை விளங்கிக் கொள்ளவேண்டும். அதுமட்டுமன்றி தங்களுக்கு எவ்வளவு விசுவாசமானவர்களாக இருந் தாலும் சரி வேலைக்காரர்களை நம்பி தம் உறவுகளை தனித்து விட்டுச் செல்வதும் ஆபத்தானதே.

◄ பவித்ரன் ►

## ◄ சிலோன் சின்னத்தம்பி ►

*வணக்கம் பாருங்கோ...! எப்பிடிச் சுகமா இருக்கிறியளே...?*

*போனகிழமை ஒருக்கால் வன்னிப்பக்கம் போட்டு வந்தன் பாருங்கோ! ஏன் போனனெண்டு இருக்குது மோன. சனங்கள் படுறபாட்டை பாத்தால் விசராக் கிடக்குதடாப்பா. சனமெல்லாம் எங்க சாமான் குடுக்குறாங்களெண்டு ஓடித் திரியுதுகள். தலை நிமிந்து நிண்ட சனங்கள் இண்டைக்கு குனிஞ்சு குறுகிப்போய் ஒரு நேரச்சாப்பாட்டுக்கு பிச்சையெடுக்குதுகள் மோன. ஆனாப் பாருங்கோ எங்கட சனமும் இப்ப எல்லாத்தையும் ஆர் தருவினம் எவ்வளவு தருவினமெண்டு தவங்கிடக்குறது நல்லமில்லை மோன. ஆரக்கேட்டாலும் அவ தரேல்ல இவ தரேல்ல எண்டு புலம்புறதே வேலயாப்போச்சு. ஆனா அதுகளும் பாவமடாப்பா. எல்லாத்தையும் பறிகுடுத்துட்டு நிக்குதுகள். ஆனாத் தன்மானம் எங்களிட்ட அப்பிடியே கிடக்குது பாருங்கோ. ஒண்டு சொல்லட்டே என்னதான் இழப்பெண்டாலும் கிடைக்கிறத வச்சு கொஞ்சமெண்டாலும் முன்னுக்கு வரப்பாக்கோணுமடாப்பா. எல்லாத்துக்கும் மத்தவைய எதிர்பாக்கக் கூடாது மோன. எங்கட சனத்தின்ட வீரத்துக்கு முன்னால ஒண்டும் நிக்கேலா எண்டு எல்லாருக்கும் தெரியுந்தானே பாருங்கோ. ஆனா ஒண்டு பாருங்கோ உந்தச் சாமான்கள் குடுக்குறவையும் தங்களுக்குப் பந்தம் பிடிக்குறவைக்குத் தானே குடுக்கினமடாப்பா. அண்டைக்கு உங்க கிளிநொச்சிலதான் எண்டு நினக்குறன், கிணறே இல்லாத ஒருத்தருக்கு வாட்டப்பம்ப் குடுத்ததை நினைச்சால் எனக்கே புல்லரிக்குது மோன. எல்லாத்துக்கும் ஒரு காலம் வரும் மோன.*

*அப்ப நான் போட்டு வரட்டே!!!*



## தத்துவ விசாரம்



**'சுவர்க்கம் என்று ஒன்றிருந்திருந்தால், ஹிட்லர் சுவர்க்கத்துக்குத்தான் போயிருப்பார்'**


ஐய்யய்யோ, 6 மில்லியன் யூதர்களைக் கொன்று குவித்து, இரண்டாம் உலக மகா யுத்தத்தை தோற்றுவித்த ஹிட்லர், சுவர்க்கத்துக்குப் போகமுடியுமா? போக முடியும், ஏனென்றால் அவன் ஆயிரமாயிரம் மக்களின் உள்ளக்கிடக்கைகளை பூர்த்தி செய்திருக்கிறான். அதனால் அவனுக்கு சுவர்க்கத்துக்குப் போவதற்கு எல்லாவித தகைமைகளும் உண்டு.

நான் ஏதோ புலம்புகிறேன் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால், எங்கள் அனுமதியின்றி இந்த உலகத்தில் எந்த அநீதியும் நடப்பதற்கு வாய்ப்பில்லை என்பதை அழுத்தவே இந்த உதாரணத்தை எடுத்தேன். ஹிட்லரை அதிகாரத்தில் அமர்த்தியவர்கள் யார்? ஜேர்மன் மக்கள். அவன் யூதர்களுக்கு எதிரான இனவாதம் பேசும்போது அதனை செயற்படுத்தியவர்கள் யார்? திரும்பவும் ஜேர்மன் மக்களே.

அவன் ஜேர்மனியிலுள்ள யூதர்களை மட்டுமல்ல ஐரோப்பாவில் உள்ள யூதர்களையெல்லாம் குறிவைக்கப்போகின்றான் என்று தெரிந்தும் வாளாவிருந்தவர்கள் யார்? உலக மக்கள். போலந்திற்குப் படையெடுக்கும் முன்னர் ஜேர்மன் யூதர்களை ஒரு கப்பலில் ஏற்றி எங்காவது போயிறங்கச் சொல்லி அனுப்பி வைத்தானாம் அவன்.

ஆனால், ஐரோப்பாவிலுள்ள ஒரு நாடும் அவர்களைப் பொறுப்பேற்பதற்குத் தயாராக இருக்கவில்லை. அதிலிருந்துதான் என்ன செய்தாலும் உலகம் ஒருபோதும் தட்டிக் கேட்காது என்கின்ற தைரியம் அவனுக்குள் வந்தது. இந்த சம்பவத்தின் பிறகே துணிந்து பாரிய மனித உயிரழிவுக்குத் திட்டம் போட்டான் என வரலாறு சொல்கிறது. சுருங்கச் சொன்னால், மற்றவர்கள் செய்ய நினைத்ததைச் செய்த வெறுங்கருவிதான் ஹிட்லர். ஹிட்லர் அதெல்லாம் செய்தான் என்பதல்ல விடயம், அவன் செய்வதை ஏனைய உலகம் பார்த்துக்கொண்டிருந்தது என்பது தான் விடயம். அப்படியானால் அவன் சுவர்க்கத்துக்குத்தானே போகவேண்டும்.

இன்று இதே வரலாறு மீண்டும் எங்களை இயக்கக் காண்கின்றோம். ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் இந்தியத் தூதுவர்கள் இங்கு வந்தபோது அவர்களின் உணர்வுகள் பற்றி ஆழம் பார்த்தது இலங்கை அரசு. யுத்த நிறுத்தம் பற்றிக் கோரிக்கை விடப்போகின்றோம் என்று தமிழ் நாட்டு மக்களுக்கு கப்ஸா காட்டிய நாராயணன், இங்கு வந்து பௌத்த



தலங்களை தரிசிக்கப் போவதாகக் கேட்டாராம். பிறகென்ன, இலங்கை இராணுவம் மக்களின் உயிருடன் பந்து விளையாடியது.

கடந்த வாரம் விக்கிலீக்ஸ் வெளிவிட்ட தகவல்கள், முல்லைத்தீவு யுத்தத்தில் மனித சம்ஹாரம் நடைபெற்றுக்கொண்டிருந்ததை இந்தியாவும் அமெரிக்காவும் பார்த்துக்கொண்டிருந்ததாகத் தெரிவிக்கின்றன. அவை நினைத்திருந்தால், 'நாங்கள் எல்லாவற்றையும் பதிவு செய்கின்றோம். உங்களையெல்லாம் போர்க்குற்றங்களுக்காக கூண்டில் நிறுத்தித் துரத்தியடிக்கப் போகின்றோம்' என்று கூறி உடனடியாக இந்த உயிர்க்கொலைகளை நிறுத்தியிருக்கலாம். இன்று போர்க்குற்றங்களை நினைத்து இவ்வளவு பயப்படும் அரசாங்கம் அன்றே அதனைத் தவிர்த்துக்கொண்டிருக்கும். ஆனால், அவை ஒன்றுமே செய்யவில்லை. அதே கதைதான் பார்த்தீர்களா?

இன்று எங்களைச் சுற்றி ஒருவிதமான அரசியல் நிரம்பவே நடக்கின்றது. நடப்பது பிழை என்று தெரியும், ஆனால் அதைப்பற்றி ஒன்றுமே செய்யாமல் நாங்கள் இருந்தோமாகில் அந்த அரசியலை ஆமோதிக்கின்றோம் என்று பொருள்படும். ஹிட்லர் இருக்கும்வரை அவனுடைய கூட்டங்களுக்கெல்லாம் திரள்திரளாக வந்து ஆர்ப்பரித்து ஆதரித்த ஜேர்மன் மக்கள் அவன் இறந்தவுடன் அப்படியே அவனைக் கைகழுவிவிட்டது ஏன்? அவன் ஈவிரக்கமற்ற சர்வாதிகாரி என்பது திடீரென்று இப்பொழுதுதான்தெரிந்ததா? அநீதிகள்இழைக்கப்பட்ட போது அது தெரிந்திருந்தும் அவற்றை வேண்டியிருக்கிறார்கள், அவ்வளவுதான். பிறகு, நாங்கள் பயந்திருந்தோம் என்று அதனை நியாயப்படுத்த முனைந்தார்கள். எங்கள் கூட்டு மனதின் வெளிப்பாடுதான் எங்களைச் சுற்றி நிகழும் நிகழ்வுகள் எல்லாம். அவற்றை பார்த்தே எங்களை நாங்கள் எடை போட்டுக்கொள்ளலாம். என்ன, மகிந்த ராஜபக்ஷவும் சுவர்க்கத்துக்குப் போவாரா?

◄ ரிஷி பத்தினி ►



**நூல் : கருத்துக்கலசம்**
**ஆசிரியர் : சூசை எட்வேட்**
**முகவரி : 1004, அன்புவழிபுரம், திருகோணமலை.**
**தொலைபேசி : 026 - 3268838**
**வெளியீடு : அகில இலங்கை இளங்கோ கழகம்**
**விலை : ரூபா 200/=**



திருக்குறளைப் போல இவ்விரண்டு வரிகளில் பலவிதமான கருத்துக்களை உள்ளடக்கி எழுதப்பட்டிருக்கும் இத் தொகுதி, அறிவுரைகள் பலதை சொல்லி நிற்கும் நூலாகவும் விளங்குகின்றது. கவிதையாகவும் இதனை நோக்க முடியும். தத்துவார்த்தமான வரிகளாகவும் நோக்கலாம்.

புலன்களைக் கட்டுப்படுத்தினால் சுகமாக வாழலாம் என்ற கருத்து மிகவும் உண்மையானது. அதனை *'புலன்களின் ஏவலனாயிராது காவலனாய் இருப் பார்க்கு காலடியில் கிடக்கும் துன்பம்'* என்கிறார்.

காலங்காலமாக பேசப்பட்டு வரும் பிரச்சினைகளில் காணிப்பிரச்சினையும் பிரதான இடத்தை வகிக்கின்றது. மற்றவர்கள் எப்படிப்போனாலும் பெற்றவர்களையே பொலிஸ் வரைக்கும் இழுத்துச்செல்லும் எத்தனை பிள்ளைகளை சமூகம் தாங்கி நிற்கிறது? அத்தகைய பிரச்சினையை முதலில் ஏற்படுத்தியவனுக்காக பாடப்பட்ட ஈரடி இது.

*'நிலத்துக்கு வேலி போட்டு தனியுடமைக்கு வித்திட்டவனே உலகத்தின் முதல் குற்றவாளி'*

நிம்மதியை, ஆண்கள் வீட்டிலல்லாது வெளியில் தேடுகின்ற காலம் இன்று நேற்று தோன்றியதல்ல. ஆனால், ஒழுக்கமில்லாத அந்தப்பழக்கத்தை கடைப்பிடித்து வாழ்வோர் ஏராளம். நூற்றுக்கு ஒரு வீதத்தினர் மட்டுமே கற்பு நெறியைக் கடைப்பிடித்து வாழ்கின்றனர். அதைக் கீழுள்ளவாறு குறிப்பிட்டுள்ளார்.

*'விரும்பாவிடினும் சேர்ந்தே வாழ்ந்து தொலைப்பதற்கு பெயர் கற்பு நெறி'*

எவ்விதமான வேண்டுதல்களும் நிறைவேறவில்லை என்று இறைவனை குறை சொல்பவர்கள் பலர். ஆனால், அதற்கான காரணத்தை அறிந்தவர்கள் சொற்ப தொகையினரே. அதை அழகாக தெளிவுபடுத்தியிருக்கிறார் ஆசிரியர்.

*'நிறைவோடு இறையை இறைஞ்சாத குறையே முறையீடு நிறைவேறாக் காரணம்'*

குடும்ப வாழ்வில் ஏற்படும் சிறிய சண்டைகள் சகஜம். அதை யாரும் மிகப்பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை. பெண் என்பவள் மென்மையானவள். அவளை அன்பால் அடக்கி ஆளத்தெரியாத கணவன் கையாலாகாதவன். அடிபணிந்து கணவனை தன்வழிக்கு கொண்டுவர முடியாத பெண் முட்டாள். ஆகவே, குடும்ப வாழ்வுக்கு தகுதியற்ற இவர்களால் தான் குடும்பச் சண்டையில் வெற்றி பெற முடியுமாக இருக்கும். அப்படியில்லாமல் குழந்தையாக மனைவியைப் பார்த்தால் இல்வாழ்வில் இன்பமே ஆறாக ஓடும்.

*'மனைவியின் கடுகடுப்பு புறுபுறுப்பை குழந்தையின் குறும்பாகவே நோக்குவார் அறிவாளர்'*

உழைப்பதையெல்லாம் மனைவிக்கு கொடுத்தால் அன்பு பெருகும் என்று கணவனும், கற்போடு வாழ்வதுதான் கணவனுக்கு செய்கின்ற கைமாறு என்று மனைவியும் எண்ணினால் அது மண வாழ்க்கைக்கு மணம் சேர்க்காது. உழைப்பையும், கற்பையும் தவிர அன்பும் பாசமும் விட்டுக்கொடுக்கும் தன்மையும் இருக்க வேண்டும். இன்னும் ஒருவருக்கொருவர் பரஸ்பர புரிந்துணர்வை நிலை நாட்டிக்கொள்ளவும் தெரிந்திருக்க வேண்டும். தன் குடும்பத்தினரையும் துணையின் குடும்பத்தினரையும் சமமாக மதிக்கத் தெரிந்திருக்க வேண்டும். குழந்தைகள் விடயத்தில் இருவரும் சமபங்கு அக்கறை காட்ட வேண்டும். அப்படியில்லாமல் கற்பும் உழைப்பும் மட்டும் போதுமா என்ற கேள்விகளை பின்வருமாறு கேட்டு நிற்கிறார் நூலாசிரியர்.

*'கணவனை மகிழ்ச்சிப்படுத்த மனைவியின் கற்பு மட்டும் போதுமா'*

*'மனைவியை மகிழ்ச்சியாய் வாழவைக்க கணவனின் உழைப்பு மட்டும் போதுமா'*

இன்னும் காதலின் புனிதத் தன்மை, ஏழ்மையின் கொடுமை, கல்வியின் முக்கியத்துவம் இவ்வாறான பற்பல கருத்துக்களை உள்ளடக்கியதாக கருத்துக்கலசம் வெளிவந்திருக்கிறது. இலக்கியத்துறையில் ஈடுபாடு உடையவர்களுக்கு இந்தப்புத்தகமும் ஒரு புதுவித அனுபவமாக அமையும் என்பதில் நம்பிக்கை உண்டு.

**- எச்.எப். ரிஸ்னா**

(09ஆம் பக்கம் பார்க்க..)

## பூந்தோட்ட...

இப்பகுதிகளில் மீள்குடியமர்வுக்கு தடை விதித்துள்ள அரசு அப்பகுதிகளை உயர்பாதுகாப்பு வலயமாக்கவும் திட்டமிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே யாழ்ப்பாணத்திலிருந்த வன்னிப் பிரதேசவாழ் மக்களது இடைத்தங்கல் முகாம்கள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டு விட்டன. கடைசியாக மூடப்பட்ட கொடிகாமம் இராமாவில் முகாமிலிருந்த எஞ்சிய வன்னி மக்கள் அனைவரும் கோம்பாவில் முகாமிற்கே அனுப்பப்பட்டிருந்தனர்.

இது இவ்வாறிருக்க யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மன்னார் முள்ளிக்குளம் பிரதேச மக்களின் காணிகளை அரசாங்கம் பலவந்தமாகக் கைப்பற்றியுள்ளமைக்கு எதிராக கடந்தவாரம் மன்னார் நகரில் அமைதியான ஆர்ப்பாட்டமும், சத்தியாக்கிரக போராட்டமும் நடைபெற்றது. யுத்தம் நடைபெற்ற காலத்தில் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியிருந்த முள்ளிக்குளம் மக்களை அங்கு மீண்டும் குடியேற அனுமதி வழங்காத அரசாங்கம், இலங்கை கடற்படையினருக்கு குடியிருப்புகளை அமைக்கவும், கடற்படை முகாமை ஏற்படுத்தவும் கிராம மக்களின் ஆயிரம் ஏக்கர் காணியைக் கையகப்படுத்தியுள்ளது.

அரசாங்கம் இராணுவத்தை பயன்படுத்தி தமது நிலங்களைக் கொள்ளையிட்டு வருவதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் தெரிவித்தனர். இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கின்றபோது தீ விபத்தும் அதற்கு முன்னரும் பின்னரும் நடைபெற்று வருகின்ற சம்பவங்களும் திட்டமிட்டுச் செய்யப்படுவதாகவே உணரமுடிகின்றதல்லவா?

**இனியவன்**



# ‘ஊடகப் பணியில் சார்பு நிலைகள் தவிர்க்கப்படவேண்டும்’

## ஊடக விரிவுரையாளர் கிருத்திகா தர்மராஜா

செல்வி கிருத்திகா தர்மராஜா இந்தியாவில் ஊடக கல்விசார் மேற்படிப்பினை மேற்கொண்டு அங்கு விகடன் குழுமத்தின் மாணவர் இதழில் ஒரு வருடம் பணியாற்றியிருக்கிறார். ஆவணப்படம், குறும்பட தயாரிப்பு போன்றவற்றிலும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றுள்ள இவர் தற்போது யாழ். பல்கலைக் கழகத்தின் ஊடகத்துறை விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார்.

இதற்கு முன் யாழ். பல்கலைக்கழக ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் மூன்றரை வருடங்கள் விரிவுரையாளராகப் பணியாற்றியிருந்தார். அக்காலப்பகுதியில் யாழ். ஊடகமொன்றில் பத்தி எழுத்து, மொழிபெயர்ப்பு பணிகளிலும் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. விருந்தினர் பக்கத்துக்காக அண்மையில் இவரைச் சந்தித்தபோது தன் ஊடக அனுபவங்களை எம்மிடம் பகிர்ந்துகொண்டார்.




அவரிடம் ஊடகத்துறையை தெரிவு செய்தமைக்கான காரணம் பற்றிக் கேட்டோம்.

‘எனக்கு சிறுவயது முதல் எழுத்துத்துறையில் ஆர்வம் இருந்தது. கவிதைகள் எழுதுவதில்தான் எனது ஆர்வம் தொடங்கியது எனக்கூறலாம் எனக்குக் கற்பித்த ஆசிரியர்களாலோ என்னவோ என்னிடத்தில் மொழி வளம் இருந்தது. நான் கட்டுரைகளும் எழுதினேன். அவ்வாறுதான் ஊடகத்தின்பால் ஈர்க்கப்பட்டேன்’ அக்காலத்தில் ஊடகவியலாளர்களுக்கென ஒரு அடையாளம் இருக்கும். நீண்டதொரு பை கொழுவியிருப்பார்கள். நீண்ட நஷனல் சேட் அணிந்திருப்பார்கள். அதனைப்பார்க்கும்போது நானும் ஒரு ஊடகவியலாளராக வரவேண்டும் என சிறுவயதில் ஆர்வம் ஏற்பட்டது.’

ஊடகத்துறையைக் கற்று பணியாற்றுவதற்கும் அனுபவ ரீதியாக பணியாற்றுவதற்குமிடையில் முரண்பாட்டு நிலை காணப்படுகிறதாக கூறுகிறார்கள். இதுபற்றி என்ன கருதுகிறீர்கள்?

‘இலங்கையில்தான் இந்த நிலை காணப்படுகின்றது. மற்றைய நாடுகளில் இவ்வாறு இல்லை என நினைக்கிறேன். இந்தியாவில் ஊடகத்தில் பணியாற்றுவற்கு அடிப்படை பட்டப்படிப்பு ஒன்று இருக்க வேண்டும். அதுவும் இதழியலோ அல்லது தொடர்பாடலோ சம்பந்தப்பட்ட பட்டமாக இருக்கவேண்டும். அனேகமான நாடுகளில் இந்நிலை உருவாகிவிட்டது. இங்கு ஊடகக் கற்கைகள் குறைவாக இருந்ததாலோ இல்லாவிடின்ஊடகம்பற்றிக்கற்காமல்ஊடகத்தில் பணியாற்றும் சூழல் ஆரம்ப காலத்தில் தோற்றம் பெற்றுவிட்டதாலோ என்னவோ எங்களுக்குள் இந்தப்பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. இந்நிலை இங்கு மாற்றமடையும் என நினைக்கிறேன். காலப்போக் கில் பல மாணவர்கள் ஊடகக்கற்கையை கற்று ஊடகத்து றைக்குள் நுழையும்போது இந்நிலை மாற்றமடையும்’ என்று உறுதியோடு கூறினார்.

இன்று ஊடகத்துறை மீதான அடக்குமுறைகள் தொடர்ந்தவண்ணம் இருந்தாலும் ஊடகத்துறையைக் கற்க ஆர்வம் செலுத்தும் மாணவர்களின் தொகை அதிகரித்து செல்வதைக் காணலாம். இவ்வளவு அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் இன்று ஊடகத்துறையில் பட்டப்படிப்பை நாடுவது மட்டுமன்றி வெளிநாடுகளில் சென்றும் ஊடகத்துறை பற்றிக் கற்கின்றார்கள் என்றால் அதன் சிறப்பே தனிதான்.

நீங்கள் ஒரு ஊடக விரிவுரையாளர் என்றவகையில் இன்று ஊடகத்துக்குள் ஜனநாயகம் எப்படி இருக்கிறது என்று கூறமுடியுமா?

‘ஊடகத்துக்குள் ஜனநாயகமற்ற நிலைதான் இருக்கின்றது. ஆண், பெண் பேத நிலை, சாதிய முரண்பாடு போன்றன இருக்கும்போது இது இருக்கவே செய்யும். ஒரு அதிகாரி தனக்குக் கீழ் உள்ளவர்களை சமமாக மதிக்கும் நிலை தானாக உருவாகவேண்டும். நாங்கள் இங்கு ஜனநாயகம், ஊடகத்துக்குள் ஜனநாயகம் என்று கற்பிப்பதை எல்லோரும்தான் கேட்பார்கள். ஆனால் அதை செயற்படுத்தும் மனம் ஒவ்வொருவரிடத்திலும் வரவேண்டுமே. இதை கற்பித்தலால் தீர்த்துவிட முடியாது. இது காலப்போக்கில் மாறும். இளைஞர்கள் வித்தியாசமாக சிந்திக்க ஆரம்பித்துள்ளார்கள் என கூறுகிறார்கள். இந்த சிந்தனை மாற்றங்கள் பல மாற்றங்களை உருவாக்கும்’

ஊடக அறிக்கையிடலால் சில சந்தர்ப்பங்களில் சம்பவங்கள் திசைதிருப்பப்படுகின்ற, தூண்டிவிடப்படுகின்ற நிலை ஏற்படுகிறது என்ற குற்றச்சாட்டுக்கள் உள்ளன. இதுபற்றி அவரிடம் கேட்டபோது...

‘யுத்தம், முரண்பாடு இருக்கும் இடங்களில் அறிக்கையிடும்போது அறிக்கையிடுபவருக்கு அந்த சூழல் விளங்க வேண்டும். அந்த இடத்தில் அவர் தனது உணர்ச்சியைக் காட்டினால் அறிக்கையிடல் தவறிவிடும். யுத்தநிலமைகளின் போதான செய்தி அறிக்கையிடலில் இரத்தங்கள் சதைகளைப் பார்க்கும்போது உணர்வுகள் பொங்கும். ஊடகப்பணியில் சார்பு நிலைகள் தவிர்க்கப்படவேண்டும். இதைத்தான் சமுதாயப் பொறுப்பு என்று கூறுவார்கள்’ என்றவர் திசைத் திருப்புதல் என்பது சினிமா ஊடகங்களில் அதிகம் இருப்பதாகவும் அது இலத்திரனியல் சார்ந்து இருப்பதால் காட்சிகளைப்பார்த்து உணர்ச்சிவசப்படக் கூடியநிலை ஏற்படுவதாகவும் கூறினார்.

**சந்திப்பும் படங்களும் : ஏ.யசீக்**

இலங்கையைப் பொறுத்தவரை ஊடகத்தில் பெண்களின் பங்கு எவ்வாறு உள்ளது?

‘கொழும்பு போன்ற இடங்களில் பெண் ஊடகவியலாளர்களின் பணி ஓரளவு திருப்தியாகவே உள்ளது. ஏன் உங்கள் ஊடகத்தையே உதாரணமாகக் கூறலாமே. யாழ்ப்பாணத்தில் இந்நிலை இல்லை. ஊடக நிறுவனங்களில் பணியாற்றினாலும் அவர்கள் களங்களுக்குச் செல்வதில்லை. கலவரம் போன்ற சூழலில் செய்தி சேகரிக்க பெண்கள் சென்றால் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடியுமா என்ற பிரச்சினை இருக்கின்றது. இவ்வாறான கட்டமைப்பை யாழ்ப்பாணச் சமூகம் பெண்களுக்கு உருவாக்கவில்லை. அதற்கு ஏற்றவாறு சமூகம் பெண்களைப் பழக்கப்படுத்தியும் வைக்கவில்லை’ என்றார் ஆதங்கத்துடன்.

யாழ்ப்பாணத்தில் தற்போது பெண்கள் சார் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. நாம் அதுபற்றியும் அவரிடம் கேட்கத் தவறவில்லை.


‘நீங்கள் குறிப்பிடுவதுபோல ஒரு மாற்றம் இடம் பெற்றுவருவது உண்மைதான். இதை கலாசார சீரழிவு என்று கூறுவதைவிட கலாசார மாற்றம் எனக் கூறலாம். இதற்கு என்னாலோ மற்றவர்களாலோ தீர்வு சொல்ல முடியாது. அது சம்பந்தப்படுபவர்கள் தாங்களாக உணர்ந்து திருந்திக் கொள்வதில்தான் தங்கியுள்ளது. ஊடகங்கள் வேண்டுமானால் இதற்காகப் பணியாற்றலாம். எங்கள் கலாசாரம் பற்றிய அறிவூட்டல்களை ஊடகங்கள் வழங்கினால் சிறப்பாக இருக்கும் என நினைக்கிறேன்’ என்று தன் தீர்வை முன்வைத்தார்.




ஊடகத்துறை படிப்பவர்களில் பெரும்பாலானோர் ஊடகத்துறைக்குள் நுழைவதில்லை. இதற்கு ஊதியம் மற்றும் துணிவு போன்றவற்றில் காணப்படும் பிரச்சினைகளைக் குறிப்பிடலாம். பணிபுரிபவரது துணிவு என்பதைத்தாண்டி பணியாளரது பிரச்சினையில் ஊடக நிறுவனம் ஒன்று எந்தளவிற்கு அக்கறையுடன் செயற்படுகிறது என்கின்ற தயக்கமும் இருக்கிறது.

ஒரு ஊடகவியலாளர் தாக்கப்பட்டால் அந்த நிறுவனம்தான் அப்பிரச்சினையை திரும்பத் திரும்பச் சொல்லும். ஏனைய ஊடகங்கள் ஒரு அறிக்கை ஒன்றை விடமுடியும். ஊடகவியலாளருக்கான பாதுகாப்பு, காப்பீடு போன்றவற்றில் முன்னேற்றநிலை காணப்பட்டால் இதற்குள்ளும் இக்கற்கையை கற்றவர்கள் அதிகம் வருவார்கள். அல்லாவிடில் இக்கற்கைகள் ஊடாக ஒரு அரச உத்தியோகம், ஆசிரியர் பணி எனக் கிடைக்கும்போது அங்கு சென்றுவிடுகிறார்கள்.

ஆகவே எதிர்காலத்தில் ஊடகத்துறையில் பணியாளர்களுக்கான பிரச்சினைகள் தீர்க்கப்படுமிடத்து ஊடகக் கற்கை மாணவர்களும் தம்மை ஊடகப் பணியில் இணைத்துக் கொள்வார்கள்.



இது போனகிழமை யாழ்ப்பாணத்திலை பிரபல பாடசாலையொண்டில நடந்த சம்பவம்.

**ஆசிரியர் :** பெரியாளா வந்ததும் நீ என்ன செய்யப் போற?
**மாணவன் :** கல்யாணம் செய்வன் சேர்
**ஆசிரியர் :** அதக் கேட்கலடா, நீ என்னவா ஆகப் போறே?
**மாணவன் :** மாப்பிள்ளையா ஆவன் சேர்
**ஆசிரியர் :** அதில்லடா! பெருசா ஆன பிறகு நீ எதை அடையப் போற?
**மாணவன் :** ஒரு பொண்ணை அடைவன் சேர்
**ஆசிரியர் :** குறுக்காலைபோவான்... பெருசா ஆன பிறகு உன்ர அப்பா அம்மாவுக்காக என்ன செய்வ?
**மாணவன் :** வீட்டுக்கு ஒரு நல்ல மருமகளைக் கூட்டி வருவேன் சேர்
**ஆசிரியர் :** நாசமாய்ப் போவானே! உன்ர அப்பா உன்னட்ட என்னத்தையடா எதிர்பார்ப்பார்...?
**மாணவன் :** ஒரு பேரனோ பேத்தியோ சேர்
**ஆசிரியர் :** சுத்தம்!!! உருப்பட்ட மாதிரிதான்.


**டொக்டர் :** நடக்கக் கூட முடியாம வந்தாரே ஒரு பேஷண்ட், இப்ப எப்படி இருக்கிறார்?

**நேர்ஸ் :** வாறியா...? ஓடிப் போகலாமெண்டு என்னைப் பார்த்து கேட்கிற அளவுக்கு தேறிட்டார் டொக்டர்



**காதலி :** நம் பெற்றோர் சம்மதித்தால் கல்யாணம். இல்லையேல் தற்கொலை. சரிதானே அத்தான்...?

**காதலன் :** ரெண்டும் ஒன்றுதான்!



**கடவுள் :** மனிதா உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்?
**மனிதன் :** இலங்கையிலயிருந்து அமெரிக்காவுக்கு றோட் போட்டுக் குடுங்க சாமி!
**கடவுள் :** அது கஷ்டமாச்சே... வேறு ஏதாவது கேள்.
**மனிதன் :** அப்ப என்ர பெஞ்சாதி பேச்சைக் குறைக்கோணும், நான்சொல்றதை மட்டும் கேட்கோணும், எதையும் வாங்கிக்கேட்கக் கூடாது.
**கடவுள் :** அமெரிக்காவுக்கு றோட் சிங்கிளா, டபுளா...?









**எங்கட மகாவித்தியாலயத்தில கனகாம்பரம் டீச்சர் பாடமெடுத்துக் கொண்டிருந்தா.**

'திமிங்கிலத்தால மனுஷன விழுங்க முடியாது. அது பெரிசு தான் ஆனா வாய் சின்னது. அதனால மனுஷன முழுசா விழுங்க முடியாது'

உடனே ஒரு பெட்டை எழும்பிக் கேட்டுச்சு,
'இல்லையே எங்கட பக்கத்து வீட்டு சதீசை 6 மாசம் முதலே திமிங்கிலம் விழுங்கிச்சே'

டீச்சருக்கு கடுப்பாகிட்டுது. திருப்பியும் சொன்னா,
'இல்ல கடைசிவரைக்கும் திமிங்கிலத்தால விழுங்க முடியாது'

அதுக்கு அந்தப் பெட்டை,
'சரி, சொர்க்கத்துக்குப் போனா நான் சதீஸ்கிட்ட கேப்பன். ஒருவேளை, சதீஸ் நரகத்துக்கு போயிருந்தா....
நீங்க கேளுங்க டீச்சர்'









அதோ போறானே அவன்தான் என்ர குடியைக் கெடுத்தவன்.

அடப்பாவி, அப்படி என்ன செஞ்சான்?

சாராயத்தை கிளாஸ்ல ஊத்தி குடிக்கேக்க தட்டி விட் டுட்டான்..!



வடிவேலு காமெடி பார்த்தும் வாய் திறந்து சிரிக்காதவன், வடிவான பெட்டையொண்டு விளங்காத பகிடி விட்டாலும் விழுந்து விழுந்து சிரிச்சால் அது காதல்.

இதுவே கல்யாணத்துக்குப் பிறகும் தொடர்ந்தால் அது கணவனின் கடமை.

ஹீ... ஹீ... ஹீ...

எங்களை எல்லாம் பாத்தா பாவமாயில்ல..?



ஒரு பெட்டை என்ன ஒரே டிஸ்ரப் பண்ணுது..?

என்ர நம்பர் எப்படி அவளுக்குக் கிடைச்சது எண்டு தெரியேல்ல. நான் யாருக்கு கோல் பண்ணினாலும் அவளே எடுத்து, 'No Balance' எண்டு சொல்லுறாள். சூடாகுது மச்சி...!



# வீதிப் புனரமைப்பில் பின்னடிக்கும் அரச அதிகாரிகள்

நடராசா பற்றிசியா

திருகோணமலை நகரில் கண்டி வீதிக்கு அருகில் அமைந்திருக்கின்ற சிறிய கிராமமே இராஜவரோதய சதுக்கம் எனும் கிராமம். ஆரம்ப காலங்களில் எவருமே இக்கிராமத்தை திரும்பிப் பார்க்காமலிருந்தனர். கடந்த 2001ஆம் ஆண்டு காலப்பகுதியில் மூன்று குடும்பங்கள் இக்கிராமத்தில் குடியேறின. அதன் பின்னர் படிப்படியாக 2004ஆம் ஆண்டு 60 குடும்பங்கள் குடியேறின. 2007ஆம் ஆண்டு அங்கு பிள்ளையார் கோயிலொன்றும் கட்டப்பட்டது. சுனாமி அனர்த்தத்தின் பின்னர் வீடுகளை இழந்து முகாம்களில் வாழ்ந்து வந்த மக்களுக்கு பல நிறுவனங்கள் வீடுகளைக் கட்டிக் கொடுத்தன. வீதி அபிவிருத்தி அதிகாரசபை இப்பிரதேசத்திற்கு வீதிகளை அமைத்துக் கொடுத்தது. தற்பொழுது இக்கிராமத்தில் 281 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இங்கு வசிப்பவர்களில் அனேகமானோர் கல்வியில் தேர்ச்சிபெற்றவர்கள். பலர் நல்ல உத்தியோகங்களில் இருக்கின்றனர். அனர்த்தங்கள் ஒன்றும் படித்தவர்கள், பாமரர்கள் என்று பேதம் பார்ப்பதில்லையே. எல்லோரையும்தான் பாதிக்




கின்றது. இவ்வருட ஆரம்பத்தில் பெய்த கடும் மழையில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் திருகோணமலை இராஜவரோதய சதுக்க கிராமமும் ஒன்று. இதன் அயற்கிராமங்களான மெல்சிரிபுர, துளசிபுர, ஜமாலியா, கேணியடி, ரெயில்வே போன்ற இடங்கள் மழை நீரில் மூழ்கி அக்கிராம மக்கள் வெள்ளத்தில் தத்தளித்தனர். இக்கிராமங்களின் நிலையுணர்ந்து மகாணசபை பிரதி சபாநாயகர் ஆரிய கலபதியின் பணிப்பின்பேரில் பாதுகாப்புப் படையினர், நேவி மற்றும் பிரதேச செயலாளர்கள் இக்கிராமத்தின் பிரதான வீதியில் உள்ள குழாய்களை அகற்றி வீதியினை வெட்டிக் கொடுத்திருந்தார்கள். அதுவும் தற்காலிகமானதே.

மழை பெய்து வெள்ள நீர் வற்றி ஆறு மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால் இக்கிராமத்தின் வீதிகள் இன்னும் வெள்ளப் பாதிப்புகளுடனேயே காட்சியளிக்கின்றன. இக்கிராமத்து மக்கள் போக்குவரத்து செய்யவேண்டுமாயின் அடுத்த கிராமத்தால்தான் சுற்றிவர வேண்டும். அது மட்டுமல்ல தற்பொழுது வடிகான் ஊடாக வரும் கழிவுநீர் வடிந்தோட முடியாமல் தேங்கி நிற்கின்றது.

இதனால் இக்கிராமத்து மக்கள் சுகாதாரம் உட்பட பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். பொறுப்பான பதவிகளில் இருப்பவர்கள் கூட சாக்குப்போக்கு சொல்லி இவர்களுடைய பிரச்சனைகளுக்கு உரிய தீர்வைக் கொண்டுவர இழுத்தடிப்பதாக அப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அப்பிரதேசத்தின் மாதர் சங்கத் தலைவியான திருமதி நடராசா பற்றிசியாவிடம் இது தொடர்பாகக் கேட்டோம். 'தற்பொழுது இப்பகுதியில் தவிசாளராக இருப்பவர்தான் கடந்த வருடத்தின் இறுதிப்பகுதியிலும் தவிசாளராக இருந்தார். அவரிடம் நான் கேட்டபோது, தான் இம்முறை தேர்தலில் வெற்றி பெற்றால் இதனை செய்து தருவதாக தெரிவித்தார். தேர்தலிலும் வெற்றி பெற்றார். அதன் பின்னர் எமது கிராமத்திற்கு அவர் வருவதே இல்லை. இவ்வாறு எல்லா அரசியல்வாதிகளும் பொய்யான வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு வாக்குகளைக் கேட்கின்றனர். வீதியால் பயணம் செய்வது அவரில்லை நாங்கள் தானே. அவர்களுக்கு இவ்வேதனை தெரியாது. சம்மந்தப்பட்டவர்களிடம் இதனை நீங்கள்தான் சொல்ல வேண்டும்' என்று என்று கேட்டுக்கொண்டார்.

அப்பிரதேசவாசியான திருமதி கிருஷ்ணகுமார் சுசிலாதேவி 'அவர்களுக்கு என்ன அவர்கள் வந்து வெட்டி விட்டு போயிட்டாங்க. நாங்க தானே பாதிக்கப்படுறம். இரவில் நிம்மதியாகத் தூங்க முடியாது. கடும் நுளம்புத் தொல்லை. தண்ணீர் தேங்கி நாத்தம் ஒருபக்கம். பல ஊடகங்களுக்கு இது தொடர்பாக அறிவித்தோம். அவர்களும் வந்து போட்டோவும் வீடியோவும் எடுத்துக்கொண்டு போனாங்க. இதுவரை ஒன்றும் நடந்தபாடில்லை' என்று கவலையுடன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக திருகோணமலை பிரதேச செயலாளர் திருமதி ஜலதீபனிடம் கேட்டபோது வீதி, புனரமைப்பு தொடர்பான பிரச்சினைகளை நீங்கள் நகர சபையிடம் தான் கதைக்க வேண்டும் என்று கூறிவிட்டார்.

அதன் பிரகாரம் நாங்கள் நகரசபைத் தலைவர் எஸ். செல்வராசாவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டபோது 'இக்கிராமம் எமது எல்லைக்குட்பட்டிருந்தாலும் இதனை பிரதேச செயலாளரே கவனத்தில் கொள்ளவேண்டும். வெள்ளம் வந்தபோது நகரசபையில் இதற்கான சபை இருக்கேல்ல. அந்த நேரத்தில் பிரதேச செயலகத்தில் ஒரு பாதை வெட்டினவங்கள். அதை இன்னமும் செய்து முடிக்கேல்ல.

ஆனால், நான் இதற்கான எஸ்டிமேட் ஒன்று தயாரித்து பிரதேசசபை செயலாளரிடம் கையளித்தேன். அதற்கான மறுமொழியை இதுவரை தரவில்லை. நாங்களும் ஒரு நம்பிக்கையில் இருக்கிறம். அவர்கள் தங்களுக்கு செய்யமுடியாது என்று எழுத்து மூலமாக ஒரு கடிதம் தந்தால் நாங்கள் வேறு யாரிடமாவது கேட்போம். நாங்கள் நகர வரிகள் போன்றவற்றை வைத்துக்கொண்டுதான் ஊதியங்களைக்கூட கொடுக்கின்றோம்.



பிரதேச செயலாளர் திருமதி ஜலதீபன் | நகரசபைத் தலைவர் எஸ். செல்வராசா

எங்களுக்கு பாரிய நிதிகள் இல்லைதானே.

எங்களுக்கும் யாராவது மந்திரிமார் உதவினால்தான் செய்யலாம். அப்படி இல்லாவிட்டாலும் நாங்கள் அந்த போக்கை மூடி கிறவல் போட்டு நிரப்பினாலும் மக்கள் போக்குவரத்துச் செய்ய சுகமாக இருக்கும். நான் இது சம்பந்தமாக மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் கதைக்க இருக்கின்றேன். எங்களுக்கு வேறு ஒரு அமைச்சிலிருந்து ஒருபகுதி நிதி ஒதுக்கியுள்ளதாகவும் அறிந்தேன். இன்னும் சரியான தகவல்கள் இல்லை. நாங்கள் பல்வேறு நிதிப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளோம். எனினும் வெகு விரைவில் இதற்கான தீர்மானம் ஒன்று எடுக்கப்படும்' என்றார்.

**◀ திருமலை லோஜி ▶**

மீண்டும் நாங்கள் பிரதேச செயலாளரிடம் கேட்டோம். அவரோ 'கச்சேரியிடம் எடுத்துக் கேளுங்கள். இது எங்களுடைய றோட் இல்லை. நகரசபைத் தலைவர் என்னிடம் உத்தேச மதிப்பீட்டு அறிக்கை ஒன்றும் தரவில்லை. கச்சேரியிடம்தான் கொடுத்துள்ளார். பிரதேச அபிவிருத்திக் கூட்டத்தில்தான் நிதி ஒதுக்கீடுகள் பற்றி தீர்மானிக்கப்படும். அது இந்த மாதத்திற்குள் நடக்கும்' என்றார்.

பார்த்தீர்களா? ஒரு றோட்டுப் போடுவதற்காக எங்களுடைய அதிகாரிகள் ஆளையாள் எப்படியெல்லாமோ பந்தை மாற்றிக் கொள்கிறார்கள் என்று மக்கள் கேட்பதோ போக்குவரத்துக்காக தங்கள் கிராமத்தினூடாக செல்லும் ஒரு பாதையை.

இங்கு நடப்பதோ வேறு. ஒவ்வொருவரும் அது தங்களுக்கு உரிய வேலையில்லை. தங்கள் பிரதேசத்திற்கு உற்பட்டதல்ல என்று சாக்குப் போக்கு சொல்கின்றனர். இக்கிராமமும் திருகோணமலையில்தான் உள்ளது என்பதை பிரதேச செயலாளர் மறந்துவிடக்கூடாது. ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை பிழை கூறுவதை விடுத்து அம்மக்களுக்குத் தேவையான வசதியை செய்து கொடுக்க முன்வரவேண்டும். நடக்குமா?

16

# திகிலோடு மர்மம் நிறைந்த தொடர்!

மரகதத் தீவின்
இரகசிய ஒற்றன்
'நெடுமாறன் 999'
உளவறியும்

## கறுப்பு செப்டெம்பர் அடிக்



"நான் இப்போது ஒரு 'கைட்' ஆக, அதாவது வெளிநாட்டில் இருந்து இங்கு வரும் டூரிஸ்டுக்கு வழி காட்டியாக இருக்கிறேன். நல்ல வருமானம் கிடைக்கிறது. இங்கிலாந்திலிருந்து வந்த பத்து பேர்களுடன் இப்போது இங்கே இருக்கின்றேன். நாளை மாலை அவர்களுடன் கண்டிக்குப் போய்விடுவேன். அதற்கிடையில் உங்களுக்கு ஏதாவது உதவி தேவை என்றால் சொல்லுங்கள். செய்யக் காத்திருக்கின்றேன்"

"இல்லை. இப்போது உன் உதவி எனக்குத் தேவையில்லை" என்று சொல்லியபடியே எழுந்து நின்ற நெடுமாறன் "இப்போது நான் ஒரு காரியம் செய்யப் போகிறேன். அது என்னவென்று உனக்குத் தெரியுமா" என்று சர்மிளாவைப் பார்த்துக் கேட்டார்.

"ஓ... தெரியுமே" என்று தலையைப் பலமாக ஆட்டினாள் சர்மிளா.

"சொல்லு பார்க்கலாம்"

"நான் சொன்ன தகவல் பொய்யா மெய்யா என்று பார்த்து வருவதற்காக கல்கிசை கடற்கரைக்குப் போகப் போகிறீர்கள் இல்லையா?" என்று கேட்டுவிட்டு,

நிமிர்ந்து நெடுமாறனைப் பார்த்தாள் சர்மிளா.

அவள் சொன்ன பதிலைக் கேட்டதும்,

நெடுமாறன் நிமிர்ந்து நின்றார்.

இந்தப் பெண் எளிதானவள் அல்ல என்று அவர் மனம் எண்ணியது.

அவள் சொன்னதைப் போல் அவள் கைடாக இருக்க மாட்டாள்



காரை ஓர் ஓரமாக நிறுத்திவிட்டு உள்ளே கிடந்த ஒரு பத்திரிகையை எடுத்து அதைப் பார்ப்பதைப்போல் பாவனை செய்த நெடுமாறன்,

ஓரக்கண்ணால் கடலைப் பார்த்தார்.

கடல் நடுவில்,

சர்மிளா சொன்னதைப் போல் ஒரு பெரிய கப்பல் நின்றிருந்தது.

சர்மிளா சொன்னது உண்மைதான் என்பதைப் புரிந்துகொண்ட நெடுமாறன் கொஞ்ச நேரம் அங்கேயே இருந்து பத்திரிகையைப் பார்த்துவிட்டு காரைத் திருப்பி ஓட்டினார்.

கல்கிசை ஹோட்டலுக்குச் சென்று மத்தியான சாப்பாட்டை முடித்துக்கொண்டு மீண்டும் காரில் ஏறினார்.

கார், ஓப்ராய் ஹோட்டலை நோக்கி ஓட ஆரம்பித்தது.

காரை விரைவாகச் செலுத்திய படியே,

நிம்மி, சர்மிளா என்ற அந்த இரண்டு பெண்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தார் நெடுமாறன்.

காரைவிட்டு இறங்கிய நெடுமாறன் தனது அறையை நோக்கி விரைந்து நடந்தார்.

நிம்மியின் அறை சாத்தியே கிடந்தது. அறைக்குள் நுழைந்த நெடுமாறன் முகத்தைக் கழுவிவிட்டு வேறு உடைகளை எடுத்து அணிந்துகொண்டார்.

சரியாக,

5.45க்கு நிம்மியின் அறைக்கதவைத் தட்டினார்.

அறைக்கதவு திறந்துகொண்டது.

வனதேவதையைப்போல் நிம்மி நின்றுகொண்டிருந்தாள்.

மல்லிகை செண்ட்டின் மணம்,

நெடுமாறனின் மூக்கைத் துளைத்தது. அங்கங்களில் முக்கால் வாசிக்கு மேல் வெளியே தெரியும் விதத்தில் படு கவர்ச்சியாக புதுமாதிரியான உடைகளை அவள் அணிந்திருந்தாள். அந்த உடையில் அவளைப் பார்த்ததும்,

நெடுமாறனின் இதழ்கள் அவரை அறியாமலேயே விசில் அடித்தன.

நாக்கை வெளியே போட்டு இதழ்களை ஈரமாக்கிக் கொண்டார்.

"என்ன நெடுமாறன் அப்படிப் பார்க்கிறீர்கள்?"

இமைகளை படபடக்க விட்டபடியே கேட்டாள் நிம்மி.

"இல்லை, தப்பான அறைக்கதவைத் தட்டிவிட்டேனா என்று ஐயம் வந்துவிட்டது. அதனால் தான் அப்படிப் பார்த்தேன்"

பிதுங்கியும் பதுங்கியும் இருந்த அவள் அங்கங்களைப் பார்த்தபடியே சொன்னார் நெடுமாறன்.

"போதும் உங்கள் கிண்டல். என்ன போகலாமா?" என்று கேட்டபடியே வெளியே வந்து அறைக் கதவை சாத்தித் தாழிட்டாள்.

"நான் தயார்" என்று சொல்லியபடியே முன்னால் நடந்தார் நெடுமாறன்.

அவர் பின்னால் ஆடி அசைந்து நடந்தாள் நிம்மி.

ஹோட்டலுக்குள் ஆங்காங்கே அமர்ந்திருந்த சிலர் அவளை விழுங்கிவிடப் போவதைப் போல் விழிகளை வெளியே போட்டுக்கொண்டிருந்தார்கள்.

நெடுமாறனும் நிம்மியும் போவதைப் பார்த்துக் கொண்டிருந்த சர்மிளா,

அவர்கள் இருவரும் தனது பார்வையிலிருந்து மறைந்ததும் அறைக்குள் ஓடிச் சென்று தொலைபேசியை எடுத்து, அவசர அவசரமாக யாருடனோ பேசினாள்.

பேசிவிட்டு தொலைபேசியை வைத்தாள்.

நிம்மதியாகப் பெருமூச்சு விட்டுக் கொண்டாள்.

வெளியே வந்த நெடுமாறனும் நிம்மியும் காரில் ஏறி அமர்ந்துகொண்டார்கள்.

"என்ன நிம்மி எந்த சினிமாவிற்குப் போகப் போகிறீர்கள்?" காரை மெல்ல நகர்த்தியபடியே கேட்டார் நெடுமாறன்.

"ரியோ தியேட்டரில் ஓர் ஆங்கிலப் படம் போட்டிருக்கிறார்கள் அல்லவா? அதைத்தான் பார்க்க வேண்டும்"

"ஓ... ஆங்கிலப் படங்களைத்தான் விரும்பிப் பார்ப்பீர்களா" காரின் விரைவை அதிகரித்தபடியே கேட்டார் நெடுமாறன்.

"ஆமாம், ஆங்கிலப் படங்களைப் பார்த்தால் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய நிறைய விஷயங்கள் அதில் இருக்கும். தமிழ்ப்படங்களில் வெறும் ஒப்பாரியும் கும்மாளமும்தான் இருக்கும்"

அவள் சொன்னதைக் கேட்டதும் நெடுமாறன் மெல்லச் சிரித்துக் கொண்டார்.

"என்ன சிரிக்கிறீர்கள்?"

"இல்லை. உங்களைப் போன்ற பெண்கள் அந்த ஒப்பாரியையும் கும்மாளத்தையும் தானே விரும்புகிறார்கள். அதனால்தான் அவர்கள் உங்களைக் கவர்வதற்காக அப்படிப் படம் எடுக்கிறார்கள்"

"அந்தக் காலம் இமயம் ஏறிவிட்டது. இப்போதுள்ள பெண்கள் புதுமையைத்தான் விரும்புகிறார்கள். பெண்கள் விரும்பும் அந்தப் புதுமையைக் கொடுக்கக் கூடியவர் ஒருவர்தான் தமிழ்நாட்டில் இருக்கிறார்"

"யார் அவர்"

"அவர்தான் பாலச்சந்தர்"

"உங்கள் கணிப்பு சரியானதுதான்" என்று சொல்லிவிட்டு காரை நிறுத்தினார் நெடுமாறன்.

## தியேட்டரில் நடந்தது நாடகம்! செய்தி வெளியிட வரவில்லை ஊடகம்

என்பதையும் ஏதோ ஒரு காரணத்திற்காக அவள் பொய் சொல்லுகிறாள் என்பதையும் நெடுமாறன் புரிந்து கொண்டார்.

அப்படியானால், யார் இந்த சர்மிளா?

கறுப்பு செப்டெம்பர் இயக்கத்தைச் சேர்ந்தவளா?

என்னை தங்கள் வலைக்குள் சிக்க வைப்பதற்காக இவள் இப்படி நாடகம் ஆடுகிறாளா?

எதற்கும்,

இவளிடம் விழிப்புடன் நடந்துகொள்ள வேண்டுமென்று நெடுமாறனின் மனம் எண்ணியது.

"என்ன நெடுமாறன் சிந்திக்கிறீர்கள்? நான் சொன்னது சரிதானே..." சமாதியாக நின்ற நெடுமாறனை சுயநினைவிற்குக் கொண்டுவந்தாள் சர்மிளா.

"ஆமாம் உன் ஊகம் சரிதான். சரி, நான் பிறகு வந்து உன்னைச் சந்திக்கிறேன்" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வெளியே வந்த நெடுமாறன்,

கீழே இறங்கிச் சென்று காரை நோக்கி நடந்தார்.

காரினுள் ஏறி அமர்ந்துகொண்டு,

மணியைப் பார்த்தார்.

மணி 2.50

கார் நகன்றது.

ஊர்ந்து வந்த கார் பாதையை அடைந்ததும் விரைந்து பறந்தது.

கென்னடி முனையில் இருந்து புறப்பட்டுச் சென்ற அப்பலோவைப் போல் பறந்துவந்த கார் கல்கிசை கடற்கரையில் நின்றது.

அவர் மனம் எண்ணியது,

நான் சர்மிளாவுடன் பேசிக் கொண்டிருந்தபோது அங்கிருந்து சென்ற உருவம் நிம்மியின் உருவம் தானா?

அவள் ஏன் நான் பேசுவதை ஒட்டுக் கேட்க வேண்டும்.

பக்கத்து அறையில் இருந்த ஒருவரைப் பார்க்க வந்தேன் என்றுதானே அவள் சொன்னாள்.

ஒருவேளை,

அது உண்மையாக இருக்கலாம். டொக்டர் சுதாராஜின் மகள்தானே நிம்மி.

அதனால் அவள் மீது ஐயம் கொள்ளத் தேவையில்லை.

ஆனால், இந்த சர்மிளா,

இவள் எதற்காக எனக்கு உதவி செய்ய முன்வந்திருக்கிறாள்?

அவள் சொன்னதுபோல் கல்கிஸ்சைக்கு அருகில் நிற்கும் அந்தக் கப்பலில் உண்மையிலேயே டொக்டர் சுதாராஜ் தான் பிணைக் கைதியாக இருக்கிறாரா?

அல்லது, என்னை அங்கே வரவழைப்பதற்காக விரிக்கப்பட்ட வலையா?

இந்த சர்மிளாவை எந்த அளவிற்கு நம்புவதென்று தெரியவில்லை.

நெடுமாறனின் சிந்தனை முடிவதற்குள்,

கார் ஓப்ராய் ஹோட்டலுக்குள் நுழைந்தது. காரை நிறுத்திவிட்டு மணியைப் பார்த்தார் நெடுமாறன்.

5.35

நிம்மியை சினிமாவிற்கு அழைத்துப் போவதற்கு அவர் வருவதாகச் சொன்ன நேரத்திற்கு இன்னும் பத்து நிமிடங்களே இருந்தன.

ஜனரஞ்சக எழுத்தாளர்
**மொழிவாணன்**

கார் பார்க்கில் காரை நிறுத்திவிட்டு இருவரும் இறங்கி தியேட்டருக்குள் நுழைந்தார்கள்.

நிம்மி டிக்கட்டுக்கு பணம் கொடுத்தாலும் நெடுமாறன் வாங்கவில்லை.

அவரே பணம் கொடுத்து டிக்கட் வாங்கினார். இருவரும் உள்ளே சென்று அமர்ந்துகொண்டார்கள்.

வினாடிகள் நீண்டு நிமிடங்களைப் பிடித்ததும்,

விளக்குகள் அணைந்தன. தியேட்டர் எங்கும் இருள் பரவி,

திரையெங்கும் ஒளி பாய்ந்தது.

விளம்பர ஸ்லைட்கள் திரையில் மாறி மாறி வந்துகொண்டிருந்தன.

நெடுமாறனின் பக்கம் சாய்ந்து அமர்ந்துகொண்ட நிம்மி அவர் கரத்தை மெல்லப் பிடித்துக் கொண்டாள்.

அதேநேரம்,

பின்னால் இருந்து ஊர்ந்து வந்த ஒரு கரம்,

நெடுமாறனின் மூக்கில் ஒரு கைக்குட்டையை வைத்து அழுத்தியது.

நெடுமாறன் திமிறினார்.

பிடி இரும்புப் பிடியாக இறுகியது.

நிம்மி அலறுவதற்கு வாயைத் திறந்தாள்.

அப்போது,

அவள் தலையில் ஓர் அடி விழுந்தது.

அவள்,

அப்படியே நாற்காலியில் சுருண்டாள்.

(மர்மம் தொடரும்...)




# ஊடகங்களில் தமிழ்மொழி




பல சிறப்புக்களைக் கொண்ட தமிழ்மொழி இன்று பிற மொழிக் கலப்பினால் பாதிக்கப் பட்டு வருகின்றது. நாம் தமிழர் என்ற வகையில் தமிழைக் கட்டிக் காக்க வேண்டியது எம் தலையாய கடமை யாகும். குறிப்பாக தமிழ்மொழியை காக்கும் பாரிய பொறுப்பு ஊடகங்களின் கைகளிலேயே இருக்கின்றது. அதனால் மட்டுமே மாற்றங்களை உண்டுபண்ண முடியும். தமிழ் மொழியின் சிறப்புக்கள் பற்றி எழுதிக்கொண்டே போகலாம். இருந்தும் வேற்று மொழிகளைத் தமி ழோடு தேவையற்ற முறையிலே அதிகமாகப் பிரயோகிப்பதுதான் ஏன் என்று தெரியவில்லை.

தமிழ் ஊடகங்கள் தமிழ் மொழியை வளர்ப்பதனையும் தமது நோக்கங்க ளில் ஒன்றாகக் கடைப்பிடிக்க வேண் டும். ஆனால், இன்று பல ஊடகங்களும் ஊடகவியலாளரும் தமிழ் மொழியை பயன்படுத்தும் விதத்தைப் பார்க்கும் போது கவலைப்பட வேண்டிய விடய மாக இருக்கின்றது.

நாகரிக உலகில் நாமும் மாற வேண் டும் என்பதற்காக எமது தமிழ் மொழி யினை மாற்றி அமைக்க முடியுமா? இன்று தமிழோடு ஆங்கில சொற்களை பயன்படுத்துவது ஒரு நாகரிகமாக மாறிவிட்டது. ஏன் தமிழ் மொழியில் பேசுவதிலே என்ன இருக்கிறது? எமது மொழியை நாமே பயன்படுத்த வெறுக்கிறோம். இதற்கு சொல்லும் குற்றச்சாட்டு உண்மையான தமிழ்ச் சொற்கள் எல்லோருக்கும் தெரியாது என்று சொல்லி விடுவார்கள். நான் வேற்று மொழிகளைக் குற்றம் சாட்ட வில்லை. ஆங்கிலம் பேசவேண்டிய இடங்களில் பேசுவது தப்பு இல்லை. ஆனால் சிலர் பேசும் தமிழில், தமிழ் வார்த்தைகளைத் தேடித்தான் பொறுக்க வேண்டும்.

தந்தை பெரியாரின் அச்சு எழுத்துக் களில் சிக்கனம் காரணமாக உருவானது தான் தமிழ் சீர்திருத்த எழுத்துக்கள். இவை, மறைந்த தமிழக முதல்வர் டொக்டர் ஆபுசு அவர்களால் அரசில் பரிந்துரை செய்யப்பட்டு இன்று இவை பயன்பாட்டில் இருக்கின்றன. அண்மையில் என் நண்பர்களிடம் பழைய னா, ணா, னை, ணை, லை, ளை எழுதிக்காட்டுங்கள் என்றேன். அவர்களால் ஞாபகத்திற்குக் கொண்டு வரமுடியவில்லை. அந்த அளவிற்கு மறக்கடிக்கப்பட்டுள்ளது.

◄ சந்ரு ►

இன்று மாற்றத்தைக் கொண்டு வருவதில் பல ஊடகங்கள் வெற்றியும் கண்டன. பல ஊடகவியலாளர்கள் தமிழை வளர்ப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றனர். வெதுப்பகம், தொடரூந்து, மகிழூந்து போன்ற பல தமிழ் சொற்களை இப்பொழுது ஊடகங்கள் பயன்படுத்துவதைப் பார்க்கும்போது சந்தோசமாக இருக் கின்றது. ஏனைய சொற்களையும் நாம் பயன்படுத்தும்போது மக்களும் பயன்படுத்த ஆரம்பித்துவிடுவார்கள் என்பதே உண்மை.

இன்று சில இலத்திரனியல் ஊடகங்களிலே தமிழ்க் கொலை செய்யப்படுகின்றன என பலர் குற்றம் சுமத்துகின்றனர். உண்மை யும் அதுவே. தமிழை வளர்க்க வேண்டியவர்கள் நேயர்களோடு பேசும்போது அதிகமாக ஆங்கிலச் சொற்களை பிரயோகிப்பது ஏன்? இன்று தொலைபேசிப் பாவனை அதிகரித்து விட்டதனால் கிராமப்புற மக்கள் இலத்திரனியல் ஊடகங்களுக்கு தொலைபேசி அழைப்பினை எடுப்பது அதிகரித்துவிட்டது. ஆனால் அவர்களை புரிந்து கொண்டு தமிழிலே பேசுவதைத் தவிர்த்து ஆங்கில வார்த்தைகளோடு சில அறிவிப்பாளர்கள் விளையாடுவதுதான் வில்லத்தனம்.

சிலர் தாங்கள் ஆங்கில வார்த் தைகள் பயன்படுத்தவில்லை என்றால் மற்றவர்கள் தங்களைக் கீழ்த்தரமாக நினைப்பார்கள் என்று நினைக்கின் றனர். சில ஊடகங்களிலே சில அறிவிப் பாளர்கள் லகர, ழகர வேறுபாடு தெரியா மல் திணறுகின்றனர். தமிழ் தெரியா மலா இவர்கள் அறிவிப்பாளராக வந் தார்கள்? ஆங்கிலம் பேசவேண்டு மென்றால் ஆங்கில அறிவிப்பாளராக போய்இருக்கலாமே. தமிழும் அரைகுறை ஆங்கிலமும் அரைகுறை மொத்தத்தில் உருப்படியாக ஒன்றுமில்லை.

அண்மையில் ஒரு தொலைக்காட்சி யிலே போட்டி நிகழ்ச்சியொன்று நடந் தது. அதிலே நடுவர் போட்டியாளரிடம் சொன்னார் 'உங்கள் 'தமில்' உச்சரிப் பில் 'பிலைகள்' இருக்கிறது திருத்துங் கள்' என்று. இங்கு இவரே பிழை. இதிலெப்படி அவர் மற்றவரைப் பிழை கூறுவது?

ஒரு சிலர் செய்கின்ற தவறுக்காக எல்லோரையும் குற்றம் சொல்வது சரியல்ல. தமிழ்க்கொலை செய்கின்ற ஊடகங்களும் ஊடகவியலாளரும் திருந்த வேண்டும் என்பதோடு நாகரிக மோகத்தில் தமிழ் மொழியோடு வேற்று மொழிகளை கலப்பதனையும் தவிர்க்க வேண்டும். ஒரு சிலர் குறிப்பிட்டிருந் தார்கள் நாமும் நாகரீகத்துக்கு ஏற்றாற் போல் மாறவேண்டுமென்று. உண்மை தான். அதற்காக எமது தமிழ்ப் பாரம்பரி யங்களையும் தமிழ் மொழியின் சிறப் பினையும்நாகரீகமென்ற போர்வை யில் சாகடிப்பதா? போகிற போக்கைப் பார்த்தால் தமிழ் மொழி மறைகின்ற நிலைக்கு தமிழர்களாகிய நாங்களே பங்காளிகளாக இருக்கின்றோம் எனத் தெரிகிறது.


ஏன் இன்று நாம் வலைப்பதிவுகளில் கூட இடுகை போன்ற தமிழ்ச் சொற்களை பயன்படுத்துகின்றோம். உண்மையில் இணையமும் இன்று தமிழ் வளர்க்கின் றது. எம்மவர்கள்தான் விடாப்பிடியாக மாற மாட்டேன் என்று அடம்பிடிக்கின் றார்கள்.

சில அறிவிப்பாளர்கள் விடுகின்ற தவறுகளைச் சொல்வதென்றால் அதற் கென ஒரு வலைப் பதிவு தொடங்கி எழுதிக்கொண்டே போகலாம்.




இன்று இளசுகள் தமிழ் இலக்கியம் என்றாலே தலைதெறிக்க ஓடுவது அதிலே பயன்படுத்தப்பட்டிருக்கின்ற சொற்களுக்கு விளக்கம் தெரியாமையே.

ஆனாலும் இன்று கிராமப்புறங் களிலே அந்தச் சொற்களை எமது முன்னோர்கள் பயன்படுத்துவதை காணக்கூடியதாக இருக்கின்றது. இன்றைய நாகரீகம்தான் எம்மை மாற்றிவிட்டது. நாம்தான் எம் மொழி யின் சிறப்புணர்ந்து அதனை வளர்க்க வேண்டும். தமிழில் நல்ல புத்தகங்கள் இல்லை என்கிறார்கள். அதனை எழுதக் கூடிய வல்லமை பொருந்தியவர்கள் தமிழிலே இருக்கின்றார்கள். ஆனால் அவர்கள்கூட ஆங்கில மொழியில் எழுதுவதுதான் வேதனையிலும் வேதனை. எமது மொழியின் சிறப்பு ணர்ந்து நாமும் ஊடகங்களும்தான் தமிழ் வளர்க்க முன்வரவேண்டும்.






## மிஸ்ஸாகிப்போன காதல்

யாழ். சாவகச்சேரிப் பகுதியில் திருமண நிகழ்வொன்றினுள் புகுந்த இளைஞர் ஒருவர் மணமகளைக் கடத்த முயன்றுள்ளார். திருமணம் முடிந்த அக்குறிப்பிட்ட பெண்ணைத் தான் சிறுவயதிலிருந்து காதலித்து வந்ததாகவும் இது அப்பெண்ணிற்குத் தெரியாது எனவும் புலம்பித்தள்ளி இருக்கின்றார். எனினும் மணப்பெண்ணைக் கடத்த வந்த 'ஹீரோவை' அங்கிருந்தவர்கள் நன்றாகக் கவனித்து அனுப்பியிருக்கின்றனர்.

## காதலுக்கு வல்

யாழில் தற்போது மர்ம மனிதனின் அட்டகாசத்தால் அங்குள்ள காதலர்களுக்குப் புதுவழி பிறந்திருக்கின்றதாம். மர்ம மனிதனின் பீதியால் பயத்தில் உறைந்துபோயுள்ள காதலிகள் தமது காதலர்களைத் தமக்குத் துணையாக அழைக்கின்றனர். இதுதான் சான்ஸ் என்று காதலர்கள் 'கடமையுணர்வுடன்' தமது காதலிகளின் வீடுகளுக்கு முன்னால் நாக்கைத் தொங்கப்போட்டுக் கொண்டு தவம் கிடக்கின்றனராம்.

இதில் வேடிக்கை என்னவென்றால் மர்ம மனிதன் செய்யும் 'வேலைகளை' (?) இக்காதலர்கள் முடித்து விடுகின்றனர். இதனால் யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் காதலர்களின்பாடு படு கொண்டாட்டமாம்.

## சீரழியும் இளசுகள்

கோணாவில் காந்திக் கிராமம் பகுதியில் விபச்சார நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதாக அப்பகுதியில் இருந்து தகவல்கள் வெளிவருகின்றன. வறுமையின் காரணமாகவும் தொழில்வாய்ப்புக்களற்ற நிலையிலும் பல குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் இவ்வாறான நடிவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இப்பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் தனது நண்பியிடம் 'வெளியிலபோய் வெயிலில கஸ்ரப்படத் தேவையில்லை. கொஞ்ச நேரத்தில நிறையக்காசு உழைக்கலாம்' என்று ஒரு போடுபோட்டிருக்கிறார். யுத்தத்தின் பின்னர் இளஞ்சந்ததிக்கு தொலைபேசிப் பாவனை, மது பாவனை என்பவற்றைத் தாராளமாகப் புழக்கத்தில் விட்டு எந்தளவிற்கு எமது கலாசாரப் பின்னணியைத் திட்டமிட்டுச் சிதைத்திருக்கின்றார்கள் என்பது தெளிவாகின்றது. இதை உணரும் நிலைக்கு எமது இளம் சந்ததிக்கு தெளிவு (?) வரவில்லைபோல.

## துஷ்பிரயோகமாகும் சுதந்திரம்

அண்மையில் கிளிநொச்சி, தர்மபுரம் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவருக்கு 50,000 ரூபா தண்டப் பணமும் 6 மாதகால கடூழிய சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டிருக்கிறது. 47250 மில்லி லீற்றர் கோடாவினைத் தன்வசம் வைத்திருந்தார்.

இவ்வளவு பெரிய தொகை கைப்பற்றப்பட்டிருப்பது அனைவரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளதோடு அதிர்ச்சியடையவும் செய்துள்ளது. இந்நபர் ஏற்கனவே இவ்வாறான பல சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர் என்பதாலேயே இவருக்கு மேலதிகமாக 6 மாதகால கடூழிய சிறைத் தண்டனை வழங்கப்பட்டதாக காவல் துறையினர் தெரிவிக்கின்றனர். பல காலமாக கடுமையான கட்டுப்பாடுகளுக்குள் இருந்த மக்களுக்கு தற்போது கிடைத்துள்ள பூரண சுதந் திரமானது இவ்வாறான சட்டவிரோதச் செயல்களைச் செய்வதற்கு வழியமைத்துள்ளது.

## வைச்சுட்டாண்டா ஆப்பு!

கிளிநொச்சி நகரிலுள்ள கிராமமொன்றில் வெளிநாட்டில் இருந்துவந்த நபர் ஒருவர் பக்கத்து வீட்டைச் சேர்ந்த பதினெட்டு வயதான பெண்ணொருவரை கர்ப்பமடையச் செய்துவிட்டு திரும்பவும் வெளிநாட்டிற்குத் தப்பிச் சென்றுள்ளார். தற்போது அப்பெண் தனது குழந்தையுடன் தனிமையில் வசித்து வருவதாகத் தெரிகிறது. அண்மையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் தனக்குத்தானே கருக்கலைப்புச் செய்து அது விபரீதத்தில் முடிந்த ஒரு பெண் உயிரிழந்திருந்தார். இவ்வாறு முறைதவறிய கர்ப்பங்களுடன் குழந்தை பெற்றால், தமது கௌரவம் கெட்டுவிடுமென்பதால் தாமே கருக்கலைப்புச் செய்யும் சம்பவங்கள் கிளிநொச்சிப் பகுதிகளில் அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

## வீரத் தமிழச்சிகள்

யாழ். கோப்பாய் பகுதியில் தனியாக இருந்த பெண்கள் சிலரிடம் சேட்டை விட்ட நான்கு பாதுகாப்புப்படை வீரர்களை அங்கிருந்த சில பெண்கள் தமது வீட்டினுள் அடைத்து வைத்துள்ளனர். அத்துடன் அவர்கள் பயணித்த துவிச்சக்கர வண்டிகளையும் பறித்து வைத்துவிட்டு அருகிலிருந்த பாதுகாப்புப்படை அலுவலகத்திற்குத் தகவல் கொடுத்திருக்கின்றனர். விரைந்து வந்த அதிகாரி ஒருவர் தவறுக்கு மன்னிப்புக் கேட்டு குறித்த பாதுகாப்புப்படை வீரர்களை கடுமையாக எச்சரித்து (?) அனுப்பியிருக்கின்றாராம்.

## வால்பிடிக்கும் அறிவிப்பாளர்கள்

கடந்த வாரம் சூரியன் வானொலியின் பொறுப்பான அறிவிப்பாளர் ஒருவரின் பிறந்தநாள். நல்லதுதான் வாழ்த்துக்கள். அதற்காக அன்று நிகழ்ச்சி முழுவதும் அவர் புராணம் பாடவேண்டிய அவசியமில்லை. கேட்டுக்கொண்டிருந்த எனக்கு எரிச்சல்தான் வந்தது. இது அவரின் பிறந்தநாள் வாழ்த்துக்களைக்கூறி வால்பிடிக்கும் செயற்பாடேயன்றி இங்கு வேறொன்றுமில்லை. 'அவர் சாப்பாடு கொண்டு வருவாராம் நாங்க சாப்படுவம்' என்று காற்றலையில் அலம்புகின்றார்கள். கேட்டுக்கொண்டிருக்கும் நாங்கள் என்ன கேனயன்களா? தனிப்பட்ட ரீதியில் வாழ்த்துங்கள் நல்லது. நேயர்களின் நேரப்பெறுமதியை உணர்ந்து செயற்படுங்கள். அப்போதுதான் முதல்வன் என்பதற்கு அர்த்தம் கிடைக்கும். இங்குள்ள அறிவிப்பாளர்கள் அவருக்கு குறுஞ்செய்தி அனுப்பினார்களாம். அது பெண்டிங்கில் இருக்கின்றதாம். அதையும் சொல்லிக்கொள்கின்றார்கள். தயவுசெய்து பொறுப்பான ஊடகங்களே எமது இனத்தின் இடிவுகளும், விடிவுகளும் உங்கள் கைகளில்தான் இருக்கின்றது. ஒரு வேளைச் சோற்றிற்கே வழியின்றியிருக்கும் வன்னித் தமிழினம் எங்கே? பிட்சா சாப்பிட்டுக் கூத்தடிக்கும் கூட்டமெங்கே? வாழ்க வளமுடன்.

**- இ.சந்திரன், வெள்ளவத்தை.**

## ஏதோ ஒருவகையில் ஓட்டவேண்டியதுதான்

இன்றைய நாட்களில் எந்த வானொலியைப் போட்டாலும் சினிமாப் புராணம்தான். சினிமாப் பாடல்களை விட்டால் வேறு வழி இல்லை. ஏன் பயனுள்ள தரமான நிகழ்ச்சிகளைத் தயாரிக்கத் தெரியாதா? மக்களுக்கான சிறந்த பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கு தரமான தயாரிப்பாளர்கள் இல்லையா? இரைச்சல் இசையைப் போட்டுத் தம்பட்டம் அடிப்பதைவிட மக்களுக்கான பயனுள்ள பொழுதுபோக்கு விடயங்களை ஆராய்ந்து நிகழ்ச்சிகளை வழங்கலாம்.

**- மாறன், கிளிநொச்சி.**

'ஊடக மயக்கம்' என்ற இப்பகுதிக்கு இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் நீங்கள் கேட்ட, பார்த்த மற்றும் வாசித்தவற்றின் மீதான காத்திரமான விமர்சனங்களை எழுதி அனுப்பலாம். கருத்துச் சுதந்திரத்திற்கு மதிப்பளிப்போம்.

'ஊடக மயக்கம்', 'இருக்கிறம்'
3, பொரிங்டன் அவனியூ, கொழும்பு 07.
மின்னஞ்சல்: irukiram@gmail.com

## ஊடக மயக்கம்



## சஞ்ஜீவ ஒலி எப்.எம்.

தற்போது முல்லை மண்ணிலிருந்து இணையம் வழியாக இருபத்து நான்கு மணிநேரமும் நிகழ்ச்சிப் படைப்புகளோடு வலம் வந்துகொண்டிருக்கும் ஒரு இணைய வானொலியாக வன்னி எப்.எம். சஞ்ஜீவ ஒலியின் படைப்புக்கள் அனைத்தும் மிகவும் அருமையாக இருக்கின்றன. அந்த வகையில் முல்லை மண்ணுக்கு முகவரியாக ஒலிக்கின்ற இந்த இணைய வானொலி பண்பலைகளிலும் புரட்சி விருந்து படைக்க வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

**- கே.சுவிதா, முல்லைத்தீவு.**

# வாசகர் கடிதம்




எமது பேச்சுவழக்கு மொழியிலேயே வெளிவரும் 'இருக்கிறம்' பத்திரிகை அனைத்துத் தரப்பினராலும் படிக்கக் கூடிய வகையில் அமைந்துள்ளது. இலகுவான சொற்பிரயோகங்கள், உண்மைச் சம்பவங்கள், நேரடி ரிப்போர்ட் அனைத்துமே இருக்கிறமின் வெற்றிதான். ஒரு இனத்திற்கான துணிச்சலான பத்திரிகையின் வாசகர்கள் என்ற வகையில் நாம் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். அதிலும் கடந்த வாரம் வெளிவந்த உதயன் பத்திரிகையின் ஊடகவியலாளர் குகநாதன் தாக்கப்பட்ட சம்பவத்தை விரிவாகப் பிரசுரித்திருந்தீர்கள். வாழ்த்துக்கள்!

**- எம்.பஞ்சலிங்கம், கலட்டி.**

செய்திச் சிதறல்களாகத் தரும் தகவல்கள் (NEWS FEED) மிகவும் வித்தியாசமான அதே வேளை பயனுள்ளதாகவும் இருக்கிறது. சமகாலத்தின் அரசியல் நிகழ்வுகளை அலசும் 'மிஸ்டர் க்றோ' தரமானதாக இருக்கிறது. தமிழினத்தின் அபிலாஷைகளுடன் கூடிய ஆசிரியர் தலையங்கம் மிகவும் உறைப்புடன் எழுதப்படுகிறது. ஆனால் உறைக்க வேண்டியவர்களுக்கு உறைக்குமா?

**- த.தயாளினி, திருகோணமலை.**

*சமூகப் பத்திரிகையான 'இருக்கிறம்' சஞ்சிகை கொஞ்சம் மாணவர்கள் பக்கமும் திரும்பினால் நல்லது. மணவர்களின் ஆக்கங்கள், பாடசாலைகளின் நிகழ்வுகள் என்பன உள்ளடக்கப்பட்டால் பயனுள்ளதாக இருக்கும். எதிர்காலத்தில் இவ்வாறான திட்டங்கள் உள்ளதா?*

**- தே.அனுஜன், வவுனியா.**

இருக்கிறமில் வெளிவரும் 'உறவின் கதை' பகுதி நெஞ்சை உருக்குவதாக உள்ளது. எமது இனத்தின் அழிந்துபோன உறவின் குரல்களைத் தொடர்ந்தும் வெளிக்கொண்டுவரும் பொறுப்பான வேலையை 'இருக்கிறம்' செய்து கொண்டிருக்கிறது. எவ்வளவு கொடுமைகளைச் சந்தித்திருக்கிறது எம்மினம். இத்தோடு நின்றுவிடாது அவர்களுக்கான வாழ்வாதார நிலைகளுக்கும் வழி காட்டவேண்டும்.

தற்போது யாழில் ஆபாசத்தை பத்திரிகைகளும் விதைத்துக்கொண்டிருக்கும் இக்காலத்தில் பொறுப்புணர்ந்து மக்களுடன் கைகோர்த்து அவர்களின் பிரச்சினைகளை வெளிக்கொணருவதற்கு இருக்கிறமுக்கு வாழ்த்துக்கள்.

**- நீதன், வவுனியா.**



*கிறீஸ் பூதத்தை ஒரு வழி பண்ணாமல் விடமாட்டீர்கள் போல. கடந்தவார இதழில் யாழ்.கோண்டாவில் பகுதியில் நடந்த விடயத்தை வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டீர்கள். உண்மையை உடனுக்குடன் தருவதில் முன்னிற்பது தற்போதைக்கு 'இருக்கிறம்' மட்டும்தான். செய்தியாக மட்டுமல்லாது மக்களுக்கான விழிப்புணர்வையும் தருகிறீர்கள். உங்களால் மட்டும்தான் முடிகிறது.*

**- கி.செந்தூரன், தெகிவளை.**

# இளகிய இரும்பானால் கொல்லனுக்கு சுலபம்தான்

சாது மிரண்டால் காடு கொள்ளாதுதான்
தீதும் தீமைகளும் நீடித்தால் இம் மண்ணின்
மக்களின் வாழ்க்கை நரகத்தில் கிடப்பதாமோ?
தக்க பதில் வேண்டும் - துயர்நீங்க வழி வேண்டும்!

'இருக்கிறம்' பத்திரிகை அம்பலமாக்கிவரும்
செருக்கான நடப்புகளே மலிவாகிப் போனதுவே!
வடுக்களைச் சுமந்த வாழ்வே நிரந்தரமாகிவிட்டால்
இடுக்கண் களைவதற்கு முன்வருவோர் யாரோ?

சீறிச் சினந்துவரும் பேரலைகள் தத்தளிப்பு
மாறிக் காற்றடிக்கும் சோதனைகள் சோகங்கள்
மாலுமி இல்லாத கப்பலில் பிரயாணம்
மேலும் செய்வதனால் இலக்கினை எய்தலாமோ?

இளகிய இரும்பானால் கொல்லனுக்குச் சுலபம்தான்!
மெழுகுபோல் உருகிப்போய் உருமாறிப் புலப்படுமே!
வரண்டுபோன பரப்புக்குள் சிறைவாசம் ஆரம்பம்!
இருண்டு போன வாழ்வுதான் சீதனச் சொத்தாமே!

அரண்மனைக்குள் அலங்கார வட்டமேசை மகாநாடு
திரண்டு நிற்பார்கள் படைகளும் பரிவாரங்களும்!
மந்திரிமார் வெளிநாட்டுத் தூதுவர்கள் யாவருமே
பந்தியிலே இருந்தாலும் ஆன பலன் பூச்சியமே!

வல்லவனே! வையகத்தைப் படைத்தவனே எங்களுக்கு
நல்லபடி வாழ்வமைத்து வளம் காண வழி செய்வாய்!
பொல்லாங்கே மூலதனம் என்றெண்ணி வாழ்வோரைச்
செல்லாக் காசாக்கு! காசினியில் காருண்யம் ஓங்கிடவே!



**- அ.மு. பாறூக், மருதமுனை.**

# வடமாகாண முஸ்லிம்கள் இடம்பெயர்ந்து 21 வருடங்கள் பூர்த்தியடைவதை முன்னிட்டு நடாத்தப்படும் மாபெரும் 'கவிதைப் போட்டி'

இலங்கையின் வடமாகாணத்தில் முஸ்லிம்கள் இடம்பெயர்ந்து எதிர்வரும் ஒக்டோபர் மாதத்துடன் 21 வருடங்கள் நிறைவடைகின்றன. இதனை முன்னிட்டு புலம்பெயர்ந்த இலங்கை முஸ்லிம் சம்மேளனமும் யாழ். முஸ்லிம் வலைத்தளமும் (www.yarlmuslim.blogspot.com) இணைந்து கவிதைப் போட்டியொன்றை ஏற்பாடு செய்துள்ளன.

## போட்டி நிபந்தனைகள்

01. வயதெல்லை கிடையாது.
02. கவிதைகள் மரபு சார்ந்த அல்லது புதுக்கவிதையாக இருக்கலாம்.
03. கவிதைகள் சுருக்கமாக இருப்பது சிறந்தது.
04. கவிதைகளின் கருப்பொருள் வடக்கு முஸ்லிம்களை இனச்சுத்திகரிப்பு செய்யப்பட்டதை மையப்படுத்தியும் அதனால் ஏற்பட்ட அவலங்கள், வடக்கு முஸ்லிம்களின் தற்போதைய நிலை மற்றும் அவர்களின் எதிர்காலத்தை மையப்படுத்தியதாகவும் அமைவது விரும்பத்தக்கது.
05. ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட அல்லது ஒலி/ஒளிபரப்பு செய்யப்பட்ட கவிதைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
06. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

## பரிசில்கள் விபரம்

**முதலாவது பரிசு :** 10,000 ஆயிரம் ரூபாவுடன், பெறுமதிமிக்க பரிசில்கள்.
**இரண்டாவது பரிசு :** 5,000 ஆயிரம் ரூபாவுடன், பெறுமதிமிக்க பரிசில்கள்.
**மூன்றாவது பரிசு :** 2,500 ரூபாவுடன் பெறுமதிமிக்க பரிசில்கள்.
நான்கு ஆறுதல் பரிசில்களும் உண்டு.

போட்டியாளர்கள் தமது கவிதைகளை தெளிவான எழுத்தில், முகவரி, தொழில், சிறுவர்ண புகைப்படம், தொலைபேசி இலக்கம் மற்றும் பாடசாலை மாணவர்களாயின் பாடசாலை விபரம் ஆகியவற்றுடன் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்க முடியும்.

**இலங்கை முகவரி**
A.A.M. SAJEETH
48. PERCI DIAS MAWATTAH,
MABOLLA,
WATTALA.

**வெளிநாட்டு முகவரி**
ABDUL AZEEZ
BAD STRASSE 6,
6423 SEEWEN,
SWITZERLAND.

*அதேவேளை, போட்டியாளர்களினால் அனுப்பி வைக்கப்படும் அனைத்து கவிதைகளும் காலக்கிரமத்தில் தொகுக்கப்பட்டு நூலுருவாக்கம் செய்யப்படும்.*

ஊடக அனுசரணை:
தமிழ் பேசும் மக்களின் தேசிய சஞ்சிகை
இருக்கிறம் வார இதழ்

# கலகத்தில் முடிந்த கைதிகள் தினம்

**மலரவன்**

'சர்வதேச கைதிகள் தினம்' வருடந்தோறும் செப்டெம்பர் 12ஆம் திகதி நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் கொண்டாடப்பட்டு வருவது நீங்கள் அறிந்ததே. வழமை போலவே இவ்வருடமும் இக்கைதிகள் தினம் பல்வேறு மாவட்டங்களிலுள்ள சிறைச்சாலைகளில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. மாத்தறை சனத் ஜயசூரிய மைதானத்தில் இடம்பெற்ற 11ஆவது கைதிகள் தினத்தைக் கொண்டாடும் நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிறைச்சாலைகள் எனும் பெயரை மாற்றி 'புனர்வாழ்வு முகாம்கள்' என்று பெயர் வைக்க வேண்டும் எனத் தெரிவித்திருந்தார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் எழுதியுள்ள 'சிறைக்கைதிகளும் மனிதர்கள்' எனும் சுலோகத்தை தான் தினமும் காண்பதாகவும் அச்சுலோகம் உண்மை என்பதை தான் சிறைச்சாலையில் இருந்த வேளை அனுபவங்களூடாக உணர்ந்ததாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். இலங்கையை ஆசியாவின் ஆச்சரியம்மிக்க நாடாக மாற்ற வேண்டுமாயின் சமூகத்தில் எல்லாத் தளத்திலும் மாற்றம் ஏற்படுத்துவது போல சிறைச்சாலைகளிலும் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். இதே வேளை கைதிகளுக்கு சிறைச்சாலைகளுக்குள் ஏதாவதொரு தொழில் அறிவை வழங்கி ஜீவனோபாயம் குறித்து அவர்களுக்குள் நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

இது இவ்வாறிருக்க மறுநாள் 13ஆம் திகதி மற்றும் 14ஆம் திகதிகளில் கொழும்பு விளக்க மறியல் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள், சக சிங்கள கைதிகளால் தாக்கப்பட்டிருக்கின்றனர். கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளான திருகோணமலையைச் சேர்ந்த கஜேந்திரன் (36 வயது), மட்டக்களப்பைச் சேர்ந்த ராஜா (28 வயது), சுண்டுக்குழியைச் சேர்ந்த பிரபாகரன் (40 வயது), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த துஸ்யந்தன் (26 வயது), கிளிநொச்சியைச் சேர்ந்த அம்பிகாவாணன் (30 வயது), வவுனியாவைச் சேர்ந்த மதன் (24 வயது) ஆகியோர் மீதே சிறைச்சாலையில் பல்வேறு குற்றங்களுக்காக தடுத்துவைக்கப்பட்டுள்ள சிங்கள கைதிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இட நெருக்கடி மற்றும் பாதாள உலக குழுவின் அடாவடித்தனம் என்பவற்றால் ஏற்பட்ட தகராறே குறித்த கைதிகள் தாக்கப்பட்டதற்கான காரணமாக இருக்கலாமென அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



தமிழ் அரசியல் கைதிகள் தாக்கப்படுவதை சிறைச்சாலை அதிகாரிகள் தடுக்காது வேடிக்கை பார்த்ததாகவும் பாதாள உலக குழுவைச் சேர்ந்தவர்களால் தங்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் இதனால் தாங்கள் மிகுந்த அச்சத்துடனேயே அங்குள்ளதாகவும் தாக்குதலுக்குள்ளான கைதிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் எந்த விசாரணையும் இன்றி மிக நீண்ட காலமாகச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது பிள்ளைகளையும், உறவுகளையும் பொதுமன்னிப்புக் கொடுத்து விடுவிக்குமாறு அவர்களின் பெற்றோரும் உறவினர்களும் ஜனாதிபதியிடம் வேண்டுகோளை முன்வைத்திருக்கிறார்கள். அவசரகாலச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கானோர் இன்று வரை விசாரணை எதுவுமின்றி சிறையில் வாடிவருகின்றனர். ஆனால், தற்போது அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்ட பின்னரும் அவர்களின் விடுதலை பற்றி எந்தக் கருத்தையும் அரசு தரப்பு இன்றுவரை வெளியிடவில்லை. மாறாக அவர்களை தொடர்ந்தும் சிறையிலேயே அடைத்து வைத்துள்ளது. பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் விசாரணை எதுவுமின்றி சிறைகளில் வாடிவருகின்றனர். அவர்களைப் பற்றிய தகவல்களைக்கூட அரசு வெளியிட மறுக்கின்றது.




**சிறைகளுக்குள் அடைத்து வைத்துக்கொண்டு அவர்களுடன் ஜீவனோபாயம் பற்றி பேசமுடியுமா?**

இவ்வாறு மனித நேயமற்ற முறையில் மக்களுடைய வாழும் சுதந்திரத்தைப் பறித்து அவர்களைப் புதைகுழிக்குள் தள்ளும் அரசுக்கு மனுக்கள் அனுப்புவதாலோ அல்லது வேண்டுகோள்கள் விடுப்பதாலோ எந்தப் பலனும் ஏற்படப்போவதில்லை. மாறாக தமது உறவினர்களை எதற்காக கைது செய்தனர் என்ற கேள்வியை அரசை நோக்கியும், சர்வதேசத்திடமும் எழுப்புவதன் மூலம், மக்கள் நலனில் அக்கறை கொண்ட அமைப்புகள் பயங்கரவாத, அவசரகால சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகளின் விபரங்களை வெளியிடுமாறு போராட வேண்டும்..

இது தனிமையில் ஒரு இனத்தினுடையதோ அல்லது ஒரு சமூகத்தினுடைய போராட்டமோ அல்ல. மாறாக அனைத்து சமூகங்களும் இணைந்து இந்த அரசியல் கைதிகளுக்கு ஒரு விடிவைத்தர வேண்டும் என்று போராடுவதன் மூலம் மாத்திரமே அவர்களை இந்த அரசிடம் இருந்தும் அரசியல்வாதிகளிடமிருந்தும் இருந்தும் மீட்டெடுக்க முடியும். சிறைகளுக்குள் வருடக்கணக்காக விசாரணைகளின்றி அடைத்து வைத்துக் கொண்டு புனர்வாழ்வைப்பற்றிப் பேசுபவர்கள் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையைப் பெற்றுக் கொடுக்க முன்வரவேண்டும்.

தமது உறவுகளைப் பறிகொடுத்த பெற்றோரும் உறவினர்களும் சிறையில் இருக்கும் தமது உறவுகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கக் கோருவது ஒருபுறமிருக்க நாட்டையே ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலையாக மாற்றி நாட்டில் உள்ள அனைவரையும் சிறைக் கைதிகளாக தனது இராணுவத்தின் மூலம் வைத்திருக்கும் இந்த அரசு சிறையில் உள்ள அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு கொடுத்து அவர்களுக்கான மறுவாழ்வைப் பெற்றுக் கொடுக்குமா என்பது கேள்விக் குறியே!




இச்சஞ்சிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர் பிரைவேற் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்பாஸ் வீதி, 185ஆம் இலக்கத்தில் 2011 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 19ஆம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.